நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR සරිනිහර්

# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 218 ஜன.21-27, 2001

விலை 12/-

அழகு!
பொங்கு தமிழெதற்கு? புத்தெழுச்சி தானெதற்கு
இங்கேன் மெக்கிந்த இழவெல்லாம் பங்கமின்றி
வாழுதற்கோர் வழியிருக்கே! வாருங்கள் அம்மாதாழ்
தோழருடன் சேர்ந்து தொழ!

ஈழமோகம்



# மீண்டும் போரா?



## பொங்கு தமிழ்
## தீயே எரியும் தேசம் மீது பாசம் படர்கிறது!

## கினிஹிர-9 ஆனை இறவை நோக்கி?......

## மனித சரக்கின் துயரக்கதை!

நன்றி - நூலகத்திட்டம்



# வன்னியில் கேணல் கிட்டு எட்டாவது நினைவு தினம்!

ஜனவரி 16ம்திகதி விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதி கிட்டுவின் எட்டாவது நினைவு நாள் வன்னியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் 19 வயதில் இணைந்து துடிப்புடன் செயற்பட்டு வந்த கிட்டுவுக்கு யாழ் மாவட்ட தளபதியாக இருந்த பண்டிதரின் இழப்பிற்குப் பின் யாழ் மாவட்டத் தளபதிக்கான பொறுப்பு வழங்கப்பட்டது. 1982இல் லெப்ரினன்ட் கேணல் பொன்னம்மான் தலைமையில் உமையாள்புரத்தில் படையினர் மீதான தாக்குதலில் கிட்டு தனது திறமையினை வெளிக்காட்டினார். 1983இல் இந்திய அரசு வழங்கிய பயிற்சியைப் பெற்றுக் கொண்ட இவர் பல பேருக்கு பயிற்சி வழங்குபவராகத் திறம்படச் செயற்பட்டார். யாழ் மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் வட மாகாணத்திலேயே பெரியதாகவும், பலமானதாகவுமிருந்த யாழ் பொலிஸ் நிலையம் மீது தாக்குதலை நடத்தினார். அந்தத் தாக்குதல் விடுதலைப் புலிகளிற்கு சாதகமான தாக்குதலாக அமைந்தது.

1986இல் கிட்டு தங்கியிருந்த சுதுமலை முகாமை இஸ்ரேலிய மொசாட்டின் ஆலோசனைப்படி வான்வழித் தரையிறக்குதல் முற்றுகையில் பிடிக்க முற்பட்டபோது அதில் சில மணி நேரத் தாக்குதலில் படையினர் பின்வாங்கினர்.

பின்னர் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்றில் காலொன்றை இழந்த போதும், சிகிச்சை முடித்து வந்தவர் 1987இல் மே முதலாம் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்திருந்தார்.

இந்திய அமைதிப் படையின் வருகையின் பின்னர் இந்தியாவில் தங்கி நின்று அமைதிப்படையின் அட்டூழியங்களை வெளியுலகிற்கு பத்திரிகை வாயிலாகத் தெரியப்படுத்திக் கொண்டிருந்தார். அக்காலகட்டத்தில் யூ ரூ இந்தியா என்ற புத்தகத்தினை எழுதி வெளியிட்டதன் பயனாக இந்திய அமைதிப் படையினரின் அட்டூழியங்கள் வெளிப்படுத்தப்பட்டன. இதன் போது கிட்டுவும் மேலும் சில விடுதலைப் புலி உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் விடுவிக்கப்பட்ட பின்னர் மீண்டும் பிரபாகரனின் அருகிருந்து செயற்பட்டார். இதன்பின் கிட்டு புலிகளின் அனைத்துலகத் தொடர்பாகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அனைத்துலக செயற்பாடுகளிலும் அவர் திறம்படவே செயற்பட்டு வந்தார். வெளிநாடுகளால் கொடுக்கப்பட்ட பல அழுத்தங்களினால் பல இடங்களில் மாறி மாறி இருந்தார்.

இதன்போது போடப்பட்ட திட்டமொன்றின் விளைவாக குவேக்கஸ் சமாதானக் குழுவினரின் ஆலோசனைகள் அடங்கியிருந்தன. இந்த ஆலோசனை விடயங்கள் பிரபாகரனுடன் ஆராய்ந்து ஆலோசிக்கப்பட வேண்டும் என்ற காரணத்தினால் எம்.வி.அகத் என்ற கப்பலில் வங்கக் கடல் வழியே கிட்டுவின் பயணம் ஆரம்பித்தது. 1993இல் ஜனவரி 13 திகதி கிட்டு பயணித்த கப்பலை இந்தியக் கடற்படை வழிமறித்தது. அனைத்துலகக் கடற்பரப்பிலிருந்து தனது கடல் வலய எல்லைக்குள் வரவழைத்து தளபதி கிட்டுவையும் ஏனைய விடுதலைப் புலி உறுப்பினர்களையும் சரணடையும்படி வற்புறுத்தியது இந்தியக் கடற்படை. ஜனவரி 15ஆம் திகதி கிட்டு வழிமறிக்கப்பட்ட செய்தி வெளியானது. இந்தியக் கடற்படையைச் சரணடையும்படி கேட்டு மிரட்டத் தொடங்கியதும், பத்து வருடத்திற்கும் மேலாக விடுதலைப் புலிகளின் தீவிர செயற்பாட்டில் இருந்த கிட்டு ஜனவரி 16ஆம் திகதி அகத் கப்பலில் குண்டை வெடிக்க வைத்து உயிரிழந்தார். இதன்போது லெப்ரினன் கேணல் குட்டிசிறி, மேஜர் லவன், கப்ரன்ஜீவா, கப்ரன் மலரவன், கப்ரன் றொசான், கப்ரன் விஜய், லெப்ரினன் அமுதன், லெப்ரினன் நல்லவன், லெப்ரினன் தூயவன் ஆகிய 10 பேர் உயிரிழந்தனர்.

இவர்களின் நினைவு நாள் வன்னியில் நினைவு கொள்ளப்பட்டது. கிட்டுவின் முக்கியத்துவம் கருதி அவரின் இழப்பிற்குப் பின் யாழ் முத்திரைச் சந்திப் பகுதியில் கிட்டுவின் சிலை திறக்கப்பட்டு, அங்கு கிட்டு பூங்கா திறந்து வைக்கப் பட்டிருந்தது. அது மட்டுமல்லாது கிட்டு பீரங்கிப் படையணியும் உருவாக்கப்பட்டுள்ளது.

கிட்டுவின் இழப்பு பாரிய இழப்பெனவே தற்பொழுது உள்ள விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் கூறுகிறார்கள்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் இந்த நினைவு நாள் நினைவு கூரப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் இயக்கத்தில் பல இராணுவ வெற்றிகளுக்கு கிட்டு காரணமாக இருந்தார் என்பதுடன் கூடவே அவர் காலத்தில் நடந்த ஜனநாயக மறுப்பு நிகழ்வுகளையும் மறந்துவிட முடியாது. யாழ்.பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் கொலை முதல் ஏனைய இயக்கங்களை அழித்தமை வரையான அவரது சாதனையின் மறுபக்கமும் நினைவு கூரப்படும் போது மட்டுமே எதிர்காலத்தில் சரியான பாதையில் செல்வதற்கு அவரது நினைவுகள் உதவியாக இருக்கும் என்பதையும் நாம் குறித்துக் கொள்ள வேண்டும். ⊙

## கதிர்காமருக்கு ஒரு காரியதரிசி

கடந்த ஜன15 அன்று இரவு யாழ்ப்பாண ஒலிபரப்புச் சேவையில் ஆசிரியை ஒருவரினதும் மாணவி ஒருவரினதும் பேட்டி ஒலிபரப்பானது. யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் எழுச்சிப் போராட்டம் தொடர்பாக இதில் கருத்துத் தெரிவித்த திருமதி தனபாலசிங்கம் என்ற ஆசிரியை சொன்னார், இந்த பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் வீண்வேலை. மாணவர்களுக்குப் பின்னர் பயங்கரவாதிகள் உள்ளனர் என்று. ஆகா என்ன அருமையான கண்டுபிடிப்பு. அம்மா திருமதி தனபாலசிங்கம் அவர்களே உங்களைப் போல் ஆயிரமாயிரம் திருமதி தனபாலசிங்கங்கள் வடக்கு கிழக்கில் தோன்ற வேண்டும். அப்போது தான் பங்கரவாதிகளைப் பூண்டோடு ஒழிக்க முடியும். அம்மா தாயே நீங்கள் ஆசிரியராக இருக்கத் தகுதியற்றவர். உடனடியாக ராஜினாமாச் செய்யுங்கள். கதிர்காமரின் நிரந்தரக் காரியதரிசிப் பதவி உங்களுக்குத் தான்.

## அவர்கள் தாக்குவதில்லை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ் சேவை அண்மைக் காலமாக படையினரிடம் சரணடைந்த எல்லைப்படை வீரர் ஒருவரின் பேட்டியை ஒலிபரப்பி வருகிறது. இவர் ஏழு பிள்ளைகளின் தந்தையெனவும், 500 ரூபா பணம் கட்ட மறுத்ததால் இவரைப் புலிகள் வலுக்கட்டாயமாக யுத்த முனைக்கு அனுப்பி வைத்தாகவும் யாழ் சேவை தெரிவிக்கிறது. இவரை இராணுவத்தினர் நன்கு கவனிப்பதாகவும், இராணுவத்தினர் தன்னைத் தாக்கவில்லையெனவும் பேட்டியில் கூறியுள்ளார். உண்மை தான். படையினர் தமிழ் மக்கள் எவரையும் தாக்குவதில்லைத் தான். அவ்வப்போது புதைப்பதைத்தவிர.

## பிரபாகரனின் குழப்படி!

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறும் கோரி யாழ் பல்கலைக்கழக சமூகம் 'பொங்கு தமிழ்' என்ற எழுச்சி நிகழ்வுகளை நடத்தி வருவது தெரிந்ததே. இந்த பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகளின் ஒரு பகுதியாக இணுவில் பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களின் சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்த போது படையினரால் மருதனார்மடம் இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு வைத்து மாணவர்களுக்கு அரசியல் வகுப்பு நடத்தியுள்ளனர் படையினர். அப்போது மாணவர்களைப் பார்த்து இராணுவ அதிகாரி சொன்னாராம். நான் ஒரு அரசாங்க உத்தியோகத்தன். பிரபாகரனும் ஒரு அரசாங்க உத்தியோகத்தரின் மகன். பிரபாகரன் நல்லவர் எனினும் சிலவேளைகளில் குழப்படி விடப்பார்க்கிறார்கள் என்றாராம்.

இதேவேளை வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபைத்தலைவர் சுழிபுரத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் எழுச்சி நிகழ்வுகளில் கலந்து கொள்ள வேண்டாம் எனக்கோரிக்கை விடுத்துள்ளார். நீங்கள் தொடர்ந்து அடிமைகளாகவே இருங்கள். உங்களுக்குத் தகுந்த தலைவர்களா அடிமைகளின் தலைவர்களாக நாங்கள் இருப்போம் என்கிறாரோ அவர்.

## காக்கைதீவில் தாக்குதல்

யாழ் காக்கைதீவைச் சேர்ந்த இரு மீனவக் குடும்பங்கள் மீது படையினர் கடந்த வாரம் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதிகாலை மூன்று மணியளவில் இவர்களது வீடுகளுக்குள் புகுந்த படையினர் அங்கிருந்த பெண்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். தமது இராணுவ முகாமுக்கு யாரோ கல்லெறிந்ததாகக் கூறியே இவர்கள் மீது படையினர் தாக்கியுள்ளனர்.

ஆனால், இவர்கள் தொழிலுக்குப் போகும் போது ஏனைய மீனவர்களைப் போல் படையினருக்கு சந்தோசம் வழங்காதபடியாலேயே தாக்கப் பட்டுள்ளனர். தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் படையினருக்கு கள், கசிப்பு, கஞ்சா, லேகியம் என்பவற்றை அன்பளிப்பாக வழங்குவது வழக்கம்.

அதிகாலை மகாதேவன் ராஜி, சுரேஷ் பாலசிங்கம், மகாதேவன் ரஜீவன், மகாதேவன் கமலாதேவி (43), மணியம் ரஞ்சனி (45) ஆகியோரே தாக்குதலுக்கு இலக்கானவர்கள். இவர்களை கொட்டன் பொல்லுகளால் படையினர் தாக்கியுள்ளனர். இது சம்பந்தமாக இவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். ⊙

## ஹக்கீம் பதவி விலகுவாரா?

"தலைவர் அஷ்ரஃப்பின் மரணத்தைத் தொடர்ந்து அவரின் பாதையில் நடக்கப் போவதாகக் கூறும் றவூப் ஹக்கிமீன் வார்த்தைகள் வெறும் வார்த்தைகளா? முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றி சுயலாபம் தேடிய தெற்கின் தலைமைத்துவம் போல் அல்லாமல் சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளைப் பெறுவதற்காக முற்றும் துறக்கக்கூடிய ஒருவராக இருந்த அஷ்ரஃப்பின் பாசறையில் உண்மையான முஃமினாவாரா என்பதை எதிர்வரும் ஜனவரி 27ம் திகதி உணர்த்திவிடும்."

இது முஸ்லிம் காங்கிரசிலுள்ள சில தீவிர உறுப்பினர்களின் கோரிக்கையாக உள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் அரசாங்கம் அமைப்பதற்கு சந்திரிகா அரசுடன் இணைந்த போது றவூப் ஹக்கீமினால் முன்வைக்கப்பட்ட சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு, சுயாதீன நீதி ஆணைக்குழு போன்றவை இன்னுமே ஏற்படுத்தப்படவில்லை. றவூப் ஹக்கீமினால் இவற்றினை நிறுவுவதற்காகக் கொடுக்கப்பட்ட 100 நாள் அவகாசம் எதிர்வரும் 27ம் திகதியுடன் முற்றுப் பெறுகிறது. இவரின் நிபந்தனைகளையும் கருத்துக்களையும் நிராகரிப்பது சிறுபான்மை சமூகத்தின் குரல்களை உதாசீனப்படுத்துவது போலாகும். இப்படி கணக்கெடுக்காத அரசாங்கத்தை விட்டு றவூப் ஹக்கீம் விலகுவாரா?

"1994ல் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஒரு பிரதேச சபையிலாவது மு.கா. தோற்கடிக்கப்பட்டால் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியினை இராஜினாமாச் செய்வதாகக் கூறிய தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் பொத்துவில், நிந்தாவூர் பிரதேச சபைகளில் மு.கா. தோல்வி கண்டபோது தனது பதவியினை 1994 மே மாதம் 19ம் திகதி ராஜினாமாச் செய்து உரை நிகழ்த்துக்கையில் குர்ஆனையும், ஹதீஸையும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மு.கா. கட்சியின் தலைவர் ஏமாற்றுக்காரர், மோசடிக்காரர், பதவி மோகம் கொண்ட மனிதர் என்று எமது சமூகம் கற்பனை செய்து விடவும் கூடாது. அப்படி இராஜினாமாச் செய்யாது விட்டால் மு.கா. தலைவர் முனபிக் ஆகிவிடுவார் என்று கூறிய வார்த்தைகளை றவூப் ஹக்கீம் ஞாபகப்படுத்துவாரா?" என்று அவர் மேலும் கேள்வி எழுப்புகிறார்.

**புதிய பண்பாட்டு அமைப்பும் சரிநிகரும் இணைந்து நடத்தும் மலையக சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள் - 2001**

மேற்படி போட்டிகளுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன. போட்டி விதிகள் வருமாறு:

**சிறுகதை**

- ❒ சிறுகதைகள், மலையக மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ❒ சிறுகதைகளின் தட்டச்சாயின் 5 பக்கங்களுக்கும், கையெழுத்தாயின் 10 பக்கங்களும் அமைய ஒரு பக்கம் மட்டும் எழுதப்பட வேண்டும்.
- ❒ ஆக்கங்கள் சொந்தமானதாகவும், முதலாவது முறையாக போட்டிக்கு சமர்ப்பிப்பனவாகவும் இருத்தல் வேண்டும்.

**கவிதை**

- ❒ கவிதைகள் மலையக மக்களின் வாழ்வியல் பிரச்சினை அடிப்படை கொண்டிருத்தல் வேண்டும்.
- ❒ 150 வரிகளுக்குட்பட்டதாக அமைதல் வேண்டும்.

**கட்டுரை**

- ❒ மலையக அரசியல் புதிய தலைமைத்துவத்தை நோக்கி....
- ❒ மலையக இலக்கியங்களில் பிரதிபலிக்கும் வாழ்வியல்
- ❒ மலையகத் தமிழர் பண்பாட்டு உருவாக்கத்தில் பாடசாலைகளின் பங்கு

ஆகிய தலைப்புக்களில் ஏதாவது ஒன்றாக இருக்க வேண்டும்.

- ✔ பாடசாலை மாணவர்கள் தமது வகுப்பாசிரியர்களின் உறுதிப்படுத்தலுடன் ஆக்கங்களை அனுப்ப வேண்டும்.
- ✔ போட்டி முடிவுத் திகதி 05.02.2001
- ✔ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

*மலையக சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள் - 2001*
*சரிநிகர், 19/4, 1/1 நாவல வீதி, நுகேகொட*

நன்றி - நூலகத்திட்டம்



# கினி ஹிர - 9 ஆனை இறவை நோக்கி.....?

– சஞ்ஜித்

புலிகள் தமது ஒருமாதகால யுத்த நிறுத்தத்தை அறிவித்து மூன்று வாரங்களாகி விட்டன.

இன்று மூன்று வாரங்களும் அவர்கள் தாம் சொன்னபடியே யுத்தத்தில் இறங்கவில்லை. அரசின் கினிஹிர நடவடிக்கைகளிற்குப் பதில் தாக்குதல்களை மட்டும் தற்காப்பு நோக்கத்துடன் தொடுத்தபடி தாம் கூறியபடியே தமது யுத்த நிறுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி வந்திருந்தார்கள்.

'இளகிய இரும்பைக் கண்டால் கொல்லன் ஓங்கி ஓங்கி அடிப்பான்' என்பது போல அரச படைகள், புலிகளின் தற்காப்பு நிலையால் உற்சாகமடைந்து தீவிர படை நடப்புகளை செய்யத் தொடங்கின. பரந்தளவுக்கு நிலப் பகுதிகளைப் புலிகளிடமிருந்து மீட்டெடுப்பது, ஆனையிறவை நோக்கி முன்னேறுவது என்ற திட்டங்களுடன் அரச படைகளின் தாக்குதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன. எழுதுமட்டுவாள், கிளாலி மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளில் நிலைகொண்ட படைகளை ஒன்று சேர்ந்து பீரங்கிகள், எறிகணைகள், கவச வானங்கள், சகிதம் சோவியத் மற்றும் இஸ்ரேலிய MIG விமானங்களும் கிபிர் குண்டுவீச்சு விமானங்களும் வான் பாதுகாப்பு வழங்க கினிஹர -9 நடவடிக்கை நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நேற்றைய படை நடப்பில் மட்டும் பத்து சதுர கிலோ மீற்றர் பரப்பளவான நிலத்தை தாம் கைப்பற்றி உள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

அரச படைகளின் இந்த நடவடிக்கை யுத்த நிறுத்தத்தையும், சமாதான முயற்சியையும், உதாசீனம் செய்வதாகவும், புலிகளின் பலவீனம் தான் போர் நிறுத்தத்திற்கு காரணம் என்ற அடிப்படையில் நின்று செயற்படுவதாகவும் அமைந்திருப்பது வெளிப்படை.

லண்டனிலுள்ள புலிகளின் அலுவலகத்திலிருந்து அன்ரன் பாலசிங்கம் அவர்களால் சொல் ஹெய்முக்கு எழுதப்பட்டதாக கூறப்படும் கடிதம் ஒன்றில் புலிகளின் நிலைகளைத் தாக்கும் அளவுக்கு இராணுவம் முன்னேறியிருப்பதால் தாம் தற்பாதுகாப்புக்காக தீவிர தாக்குதலை நடாத்துவது தவிர்க்க முடியாததாகி விட்டது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சொன்னபடியே கினிஹிர தாக்குதலுக்கு புலிகள் தொடுத்த கடும் தாக்குதல் அரச படைகளுக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை இழப்புக்கள் ஏதுமின்றி முன்னேறுவதாகச் சந்தோசப்பட்டுக் கொண்டிருந்த இராணுவத்தினருக்கு புலிகளின் எதிர்த் தாக்குதலின் வேகம் இப்போது தெளிவாகத் தொடங்கியுள்ளது.

இந்த மூன்று வார காலமும் இராணுவம் படை நடப்பை மேற்கொண்ட போதும், பெருமளவு நிலப்பரப்பை கைப்பற்றியதாக அரசும், சிங்கள, ஆங்கில பத்திரிகைகளும் அறிவித்திருந்த போதும் உண்மை நிலைமைகள் அவ்வளவுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. சங்குப்பிட்டி, சாவகச்சேரி, புத்தூர், கோப்பாய் வழியாக யாழ்ப்பாணம் வரையான பகுதிகளைக் கொண்ட ஒரு வலையத்தை இராணுவம் தனது கினிஹிர, ரிவிகிரண நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றியிருக்கிறது உண்மை தான். ஆனால், இந்தப் பகுதியைக் கைப்பற்றி வைத்திருப்பது இராணுவ ரீதியில் பெரியதொரு சாதனையாக கொள்ள முடியாது. ஏனென்றால், இவை ஏற்கெனவே இராணுவ வசம் இருந்து அண்மையில் புலிகளின் தாக்குதல்கள் காரணமாக கைவிட்ட பகுதிகள் தான். இந்தப் பகுதிகளை மீளக் கைப்பற்றுவதன் மூலமாக யாழ். மற்றும் பலாலித் தளங்களைப் பாதுகாக்க முடியும் என்பது இராணுவத்தின் திட்டமாக இருந்திருக்கிறது. ஆனால், இந்தப் பகுதிகள் பலாலி மீதான நெருக்கடியை முற்றாக இல்லாமல் செய்துவிட்டதாகச் சொல்ல முடியாது.


உண்மையில் ஆனையிறவுப் பகுதியை நோக்கி முன்னேறுவது தான் இராணுவத்தின் இவ்வளவு கால நடவடிக்கைக்கும் முழுமையான அர்த்தத்தைத் தர முடியும். அதை மீளப் பெறமுடிந்தால் அது உண்மையிலேயே ஒரு சாதனையாக இருக்கும்.

ஆனால், அந்தச் சாதனையை புலிகளுடனான பலத்த எதிர்ப்பை எதிர்நோக்கியே சாதிக்க வேண்டியிருக்கும்.

இராணுவத்திற்கும் இந்த விடயம் தெரியும். தெற்கிலுள்ள அரசியல்வாதிகளையும் சிங்கள மக்களையும் ஏமாற்ற நிலப்பரப்பின் அளவைப் பெரியதாகக் கூறிக் கொண்டாலும், ஆனையிறவைக் கைப்பற்றாத வரை இதுவரை பிடிக்கப்பட்ட கைபற்றிய பிரதேசங்களைக் கூட, எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்து வைத்திருக்க முடியும் என்ற கேள்வி அவர்களிடையே எழாமல் இருக்க முடியாது.

அதனால் தான் இப்போது கினிஹிர -9ஐ அவர்கள் ஆனையிறவை நோக்கி நகர்த்த முனைந்துள்ளனர்.

அரச படை அதிகாரிகட்கும், குறிப்பாக புதிய தளபதி பலகல்லவுக்கும் இந்த நடவடிக்கை பெருமளவான இராணுவத் துருப்புக்களதும் ஆயுதங்களதும் செலவில் செய்யப்பட வேண்டிய ஒன்று என்று தெளிவாகத் தெரிந்திருக்கிறது. ஆயினும், அதைச் செய்யாதவரை அவர்கள் விரும்பும் 'புலிகளின் மூட்டை முறிக்கும்' செயலில் பூரண வெற்றி காணமுடியாது என்பதும் அவர்களுக்கு தெரியாததல்ல.




இந்த கினிஹிர ஆரம்பிக்கும் முன்னதாகவே படை திரட்டும் வேலையில் இராணுவ அதிகாரிகள் ஊக்கமுடன் செயற்படத் தொடங்கியிருந்தனர். அரசியல் தலைவர்களையும், அரச அதிகாரிகளையும், சமூக நல செயற்பாட்டாளர்களையும் சந்தித்து யுத்தத்துக்கு ஆட்சேர்க்கும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கியிருக்கின்றனர். அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களுள் ஒருவரான மங்கள சமரவீர, அவர்களால் 'பாசிஸ்ட்' என்று வர்ணிக்கப்பட்ட சிங்கள வீரவிதானவின் தலைவர் சம்பிக்க ரணவக்கவை சந்தித்து தளபதி பலகல்ல 10,000 பேரை இராணுவத்துக்கு சேர்த்துத் தரச்சொல்லிக் கேட்டிருக்கின்றார். அதாவது 10.000 'பாசிஸ்ட்டுகள்' இராணுவத்திற்கு தேவை என்று பலகல்ல புரிந்து கொண்டிருக்கின்றார்.

அவரின் இந்தப் புரிதல் சும்மா வந்த புரிதல் அல்ல. ஆனையிறவை மீளக் கைப்பற்றுவது, குடாநாட்டை முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டுள் கொண்டுவருவது, பிறகு வன்னி நோக்கி நகர்வது... இந்தத் திட்டத்திற்கு சிங்கள இனவெறியும், தமிழ் மக்கள் மீதான துவேசமும் கொண்ட ஒரு படையணி - வெறும் கூலிக்கு வேலை செய்யாத, அரசியலுக்காக வேலை செய்கிற படையணி - அவருக்கு தேவை என்பதை அவர் தெளிவாகவே புரிந்து வைத்திருக்கின்றார்.

இலங்கை அரசின் ஒரு இராணுவ அதிகாரி என்ற முறையில் அவரின் காய் நகர்த்தல்கள் எல்லாம் சரியானவை தான்.

ஆனால், அவர் மறந்து விட்ட இரண்டு விடயங்கள் அவருக்குப் பெரும் சவாலாக இருக்கின்றன.

ஒன்று ஆனையிறவு முகாமை நோக்கி நகர்வது என்பது பலத்த இழப்புக்களைத் தரக்கூடிய ஒரு செயற்பாடு.

குடாநாட்டின் வால்போல அமைந்த பகுதியூடாக ஆனையிறவை நோக்கி நகர்தல் மும்முனையிலிருந்தும் எதிர்ப்பை எதிர்கொள்ளக் கூடியது மட்டுமல்லாமல், ஏற்கெனவே புலிகளால் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளினதும், பொறிக் கிடங்குகளதும் ஆபத்தையும் அது எதிர்நோக்க வேண்டியிருக்கும். அப்படித்தான் பெரும் இழப்புடன் முன்னேறினாலும்புலிகளால் ஏற்கெனவே நிர்மூலமாக்கப்பட்ட ஆனையிறவில் இன்னொரு முகாமை உருவாக்குவது என்பதும், அதைத் தக்கவைத்துக் கொள்வது என்பதும் அதைவிடப் பெரிய ஆபத்தான செயற்பாடு, புலிகளின் அமைதி, சமாதானக் கோரிக்கை போன்றவை புலிகளைப் பற்றிய மட்டுமீறிய ஒரு மதிப்பீட்டை - அவர்கள் மிகவும் மோசமாக பலவீனமடைந்து விட்டார்கள் என்ற மதிப்பீட்டை கொண்டிருப்பது பலகல்லவின் இந்தத் திட்டத்திற்கு சாதகமாக இருக்கிறது.

ஆனால், உண்மை ஆனையிறவை அவர் நெருங்கும் போதே தெரியவரும். கினிஹர - 9 எதிர்கொண்ட எதிர்ப்பு இதற்கான ஒரு சமிக்ஞை என்று சொல்லாம். புலிகள் பலவீனமாக இருக்கலாம். ஆனால், படுத்துவிட்டதாகக் கொள்ள முடியாது. தவிரவும், பலமான காலத்தைவிட, பலவீனமான காலத்தில் புலிகளின் அரசியற் பலமும், போரிடும் ஆற்றலும் எப்படி இருந்திருக்கிறது, அவர்களது உற்சாகம் எப்டி அதிகரித்திருக்கிறது என்பதற்கு அவர்களின் கடந்தகால நடவடிக்கைகள் பல சாட்சியங்களாக உள்ளன.

இரண்டாவதாக இங்குள்ள அரசியல் சூழல். தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பற்றிய பிரக்ஞை அற்ற எந்த இராணுவ நடவடிக்கையும் இராணுவ வெற்றியைக் கூட நிரந்தமாகப் பெற்றுக் கொடுக்க முடியாது. சர்வதேச சமூகமும், தமிழ் மக்களும் சமாதானம் பற்றி பேசினாலும், யாருமே அரசியல் தீர்வற்ற சமாதானம் ஒன்று சாத்தியம் என்று நம்பவில்லை. தமிழ் மக்கள் யுத்தத்தினையும், யுத்த அழிவுகளையும் விரும்பவில்லை என்பது உண்மையே. ஆனால், இந்த விருப்பமின்மையை தமது சுதந்திரத்திற்கு விலையாக கொடுக்கும் அளவுக்கு அவர்கள் இன்னமும் வீழ்ந்து விடவில்லை.

இதை அவர் புரிந்துகொண்டால் சரி.

10,000 பாசிஸ்டுகள் அல்ல எத்தனை பாசிஸ்டுகள் வந்தாலும் நிலை இதுதான். இது புரியாவரை சமாதானம் புதைக்கப்பட்ட புதை குழியில் இருந்து எழுந்து வருதல் சாத்தியமே இல்லை.

## மாடு படிக்கும் பல்கலைக்கழகம்!

கடந்த 15.01.01 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டிப் பொங்கல் நடைபெற்றது. அதேவேளை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பட்டிப் பொங்கல் பொங்கிய மாணவர்கள் தாம் கொண்டு வந்த மாடுகளுக்குப் போடுவதற்கென ஒரு கத்தை வைக்கோல் வாங்கிக் கொண்டு வந்தனர். பொங்கு தமிழ் நிகழ்வுகளைத் தடுக்கும் நோக்குடன் பல்கலைக்கழகத்தைச்சுற்றி இராணுவத்தினரும் பொலிசாரும் நிறுத்தப் பட்டிருந்தனர். வைக்கோல் கொண்டு வந்த மாணவர்களைப் பார்த்து சீருடையினர் கேட்ட கேள்விகளும் மாணவர்களின் அளித்த பதில்களும் இவை.

'எங்கே போகிறீர்கள்?'

'கம்பஸிற்கு.'

'இது என்ன?'

'வைக்கோல்.'

'அது தெரியும்.' வைக்கோல் எதற்காகக் கம்பஸிற்குக் கொண்டு போகிறீர்கள்?

இன்று கம்பஸில் பட்டிப்பொங்கல் பொங்குகிறோம். அதற்காக மாடுகள் கொண்டுவந்து கட்டப்பட்டுள்ளன அந்த மாடுகளுக்குப் போடுவதற்குத் தான் வைக்கோல் கொண்டு போகிறோம்.

'மாடுகளும் படிக்கின்றனவா கம்பஸில்?'

'நீ ஒரு இலங்கைப் பிரஜை தானே?' 'ஓமோம். நான் ஒரு இலங்கைப் பிரஜை தான்.' 'நீ குழப்பம் விளைவிக்க முயலகிறாய். வைக்கோல் கொண்டு போக முடியாது.'

பாவம் அன்று அந்த ஐந்தறிவு ஜீவன்கள் பட்டினி.

## தர்மமா இது?

யாழ் பல்கலைக்கழக சமூகத்தின் பொங்குதமிழ் நிகழ்ச்சி பலத்த ஆதரவைப் பெற்று வளர்ந்து வருவது பெரும்பாலானவர்களுக்குச் சந்தோசம் தான்.

அதிலும் சுயநிர்ணய உரிமை தொடர்பான கருத்துக்களைப் பரப்புவதில் அது எடுத்திருக்கும் அக்கறை எல்லோராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

இராணுவமும் பொலிசும் அதை தடைசெய்யவும், குழப்பவும் அந்தச் செயலில் ஈடுபட்டோரை மிரட்டவும் எடுக்கும் நடவடிக்கைகளே அந்த நிகழ்ச்சியின் அரசியல் முக்கியத்துவத்தையும், அதன் ஆதரவையும் தெளிவாக வலியுறுத்தும்.

ஆனால், அமைச்சர் தேவானந்தா அவர்களுக்கு இது ஏனோ பிடிக்கவில்லை.

சுயநிர்ணயம் கதைத்ததால் வந்தது அழிவு தான் என்று அவர் பாடசாலை அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார். இந்த நிகழ்வில் அர்த்தம் இல்லை என்பது அவரது வாதம்.

அரசின் அங்கமாக மாறினால், அரசைவிட அதிகமாக அரசசார்புக் கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்பது அவரதும் அபிப்பிராயமாகி விட்டது போலும்!

அமைச்சர் கதிர்காமரின் வழிகாட்டலை இந்த விடயத்தில் அவர் பின்பற்றுகிறார்.

அவருக்கு வாழ்த்துக்கள்.

ஆனால், ஒன்றை அவருக்கு ஞாபகப்படுத்துவது நல்லது.

இன்று அமைச்சர் பெற்றுள்ள பதவி, அதிகாரம் எல்லாம் கூட இந்த தேவையற்ற 'சுயநிர்யண உரிமையால்' கிடைத்தவை தான் என்பதை அவர் மறந்துவிடக்கூடாது.

ஆக, சுயநிர்ணய உரிமை அழிவை மட்டுமல்ல, அமைச்சர் பதவியையும் தரும் என்பதை மறப்பது தர்மமல்ல, இல்லையா?

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ் குடாநாட்டை புறக்கணிக்காதீர்கள்

## – யாழ் அரச வைத்தியர் சங்கம் கோரிக்கை!

அரச மருத்துவர் சங்கத்தின் யாழ் கிளை 'நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், எமது கோரிக்கைகளும்' என்ற தலைப்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு கடந்த டிசெம்பர் 29ம் திகதியிடப்பட்ட நீண்ட கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. யாழ் குடா நாட்டில் மொத்தமாகவும், யாழ் போதனா வைத்தியசாலையில் குறிப்பாகவும் நிலவும் சீர்கேடுகள், பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாமை போன்ற விடயங்களை விளக்கியுள்ள இந்தக் கடிதம் பல அதிர்ச்சி தரும் தகவல்களையும் அரசின் பாரபட்சமான போக்கையும் வெளிப்படுத்துகின்றது.

யாழ் குடாநாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட வைத்திய நிபுணர் வெற்றிடங்கள் 92ம், வைத்திய அதிகாரிகள் பதவியிடங்கள் 72இல் 67உம், வெற்றிடமாக உள்ளதாக இக்கடிதம் விளக்குகிறது. யாழ் போதனா வைத்தியசாலையில் மட்டும் 32 வைத்திய நிபுணர் பதவியிடங்களில் 28 வெற்றிடமாகவும், வைத்திய அதிகாரிகளுக்கான 6 வெற்றிடங்கள் நிரப்பப்படாமலும் இருப்பதை இக்கடிதம் சுட்டிக் காட்டுகிறது. அக்கடிதத்தின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

0 யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் இடமாற்ற உத்தரவு பெற்றவர்களை பதில் ஆள் நியமனமின்றி விடுவிக்க மறுத்து வருகின்றார்.

0 அண்மைக் காலங்களில் உள்ளகப் பயிற்சிக்குப் பின்னான நியமனங்களுக்காக விளம்பரப் படுத்தப்பட்ட வெற்றிடங்களிற்கான பட்டியலில் யாழ்மாவட்டம் குறிப்பாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளமையானது சுகாதார அமைச்சு யாழ் மாவட்டத்தில் நிலவும் வைத்தியருக்கான வெற்றிடங்களை நிரப்பாமல் தொடர்ந்து வெற்றிடமாகப் பேண முயல்வதாகவே கருதப்படுகிறது.

யாழ் மாவட்டத்தின் சகல வைத்தியசாலைகளிலும் மருத்துவ உபகரணங்கள், ஆய்வுக்கூட உபகரணங்கள், தளபாடங்கள். கட்டிடவசதிகள் ஆகியவற்றில் கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் விசேட சிகிச்சைப்பிரிவு ஒரு மாதத்துக்கு குறைந்த குழந்தைகளுக்கு சிகிச்சைப் பிரிவுகளான அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, ஒரு மாதத்துக்கு குறைந்த குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான பிரிவு மற்றும் சத்திரசிகிச்சைக் கூடம் போன்றவற்றில் சகல விதமான உபகரணங்களும் முற்றாக இல்லாமலோ அல்லது தேவைக்குக் குறைவாகவோ தான் உள்ளன.

X கதிர் பிரிவில் 04 இயந்திரங்களுக்குரிய இடத்தில் ஒன்று மட்டுமே இயங்குகின்றது. முன்னர் இயங்கிய அதிதீவிர சத்திர சிகிச்சைப்பிரிவு, சிறு நீரகத்துக்கு மாற்றீடான இரத்த சுத்திகரிப்பு பிரிவு என்பன முற்றாக இயங்காமல் உள்ளன. மருத்துவ ஆய்வு கூடத்தில் முன்னர் செய்யப்பட்ட பல பரிசோதனைகள் ஆள், உபகரண இரசாயன பொருள் பற்றாக் குறையால் செய்யமுடியாமல் உள்ளது. இயங்கும் சில பிரிவுகள் கூட அவ்வவ்போது X கதிர் பிரதிகள், இரசாயன பொருட்கள் கொண்டுவருவதில் பாதுகாப்பு அமைச்சினால் ஏற்படுத்தப்படும் தடைகளாலும் பழைய உபகரணங்கள் அடிக்கடி பழுதடைவதாலும் செயலற்ற நிலைக்கு தள்ளப்படுகின்றன.

நாட்டின் ஏனைய போதனா வைத்தியசாலைகளில் எல்லாம் புதிதான கட்டுமானப் பணிகளையும், நவீன ஆய்வு உபகரணங்களின் வினியோகத்தையும் செய்யும் சுகாதார அமைச்சு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கென கடந்த 10 வருடங்களாக எதையும் செய்யவில்லை. இது மட்டுமல்லாது அன்பளிப்பாக கிடைத்த ஒரு சில உபகரணங்களைக்கூட கொண்டு வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காது இழுத்தடித்து வருகின்றது.

> நாட்டின் ஏனைய போதனா வைத்தியசாலைகளில் எல்லாம் புதிதான கட்டுமானப் பணிகளையும், நவீன ஆய்வு உபகரணங்களின் வினியோகத்தையும் செய்யும் சுகாதார அமைச்சு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கென கடந்த 10 வருடங்களாக எதையும் செய்யவில்லை. இது மட்டுமல்லாது அன்பளிப்பாக கிடைத்த ஒரு சில உபகரணங்களைக்கூட கொண்டு வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காது இழுத்தடித்து வருகின்றது.

சுகாதார அமைச்சு தனது 1998 ஆண்டின் அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான நூலில் (பக்கம் 31) யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை நாட்டின் ஏனைய போதனா வைத்தியசாலைகளைப் போல் தரமாக இல்லையென்றும், சகல பிரதான பிரிவுகளுக்கும் மேலதிக நிதி ஒதுக்கீடும் கவனிப்பும் தேவையென்றும் தெரிவித்துள்ளது. ஆனால், வருடாந்த நோயாளர் வருகையிலும் கட்டில் எண்ணிக்கையிலும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையைவிட சிறிய வைத்தியசாலைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியிலும் விட குறைந்தளவு நிதியே யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தின் சகல வைத்தியசாலைகளிலும் பல்வகை மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. (இவை வலி நிவாரணிகள், மயக்க மருந்துகள், சில வகை உயிர் கொல்லிகள், ஒட்சிசன், கட்டுத் துணிகள், எனப்பல) இதற்கு சில காரணங்கள் உள்ளன. இங்கிருந்து கேட்கப்படும் அளவை விட குறைவான அளவில் விநியோகமும் செய்யப்படுவதும் யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்ட பின்பும், மருந்துகளைக் கொண்டு வருவதற்கான பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற விதி நிலவுவதும் பாதுகாப்பு அமைச்சு வேண்டுமென்றே செய்யும் தாமதமுமே அவையாகும். அவசர தேவைகளுக்காகக்கூட தனிப்பட்ட முறையில் (வைத்தியர்கள் கூட) மருந்துப் பொருட்கள் கொண்டுவர தடை விதிக்கப்பட்டுள்ளது. போதனா வைத்தியசாலையின் அவசர தேவைகளுக்காகக் கூட விமானம் மூலம் மருந்து பொருட்கள் கொண்டுவர பாதுகாப்பு அனுமதி கோரப்படுவதால் தாமதம் ஏற்படுகின்றது. இதே வேளை தனியார் வாணிப நிலையங்களிலும் மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு தொடர்கிறது.

வைத்தியர்களும், குடாநாட்டுக்கு வெளியே செல்வதாயின், பாதுகாப்பு அனுமதியை பெறுவதற்கும் விமான, கப்பல், பயணச் சீட்டுக்களைப் பெறுவதற்கும் அலைந்து திரிய வேண்டியுள்ளது. வைத்தியர்கள் மேற்படிப்புக்கான பரீட்சைளுக்காகவும், இடமாற்றத்திலும் தனிப்பட்ட தேவைகளுக்காகவும் பயணம் செய்ய வேண்டியேற்படும்போது கடுமையான வேலைப் பளுவுக்கிடையில் பல நாள் விடுப்பில் இராணுவ முகாமுக்கும் பயணச்சீட்டு பெறுவதற்கும் அலைய வேண்டியிருப்பதுடன் உரிய நேரத்தில் பயண அனுமதியும் பயணவாய்ப்பும் பெறமுடியாமலும் உள்ளது.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பிரேத அறையிலிருந்து உடல்களை அகற்றுவதற்கான பாதை கடந்த 05 வருடங்களாக தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் உடல்கள் நோயாளர் விடுதிகளுக் கூடாக எடுத்துவரப்பட்டு வைத்தியர்களின் வதிவிட விடுதிக் கருகில்வைத்தே வாகனங்களில் ஏற்றப்பட வேண்டியுள்ளது. இதனால் சுகாதார விதிகள் மீறப்பட்டு நோயாளர்களும், வைத்தியர்களும் ஏனைய ஊழியர்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

கடந்த 5 வருடங்களாக மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை அவசர தேவைக்குக் கூட யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியும் ஆய்வுக்கூடமும் பாவனைக்கு தடை செய்யப் பட்டுள்ளது. பிரேத அறைக்கு செல்வதும் இந்த நேரத்தில் தடைசெய்யப்பட்டுள்ளதால் இரவில் இறக்கும் நோயாளர்களின் உடல்களை விடியும்வரை விடுதியிலேயே வைத்திருக்க வேண்டியுள்ளது.

இந்தக் குறைபாடுகளின் அடிப்படையில் வைத்தியர்களுக்கான வெற்றிடங்கள், குடா நாட்டின் வைத்தியசாலைகளுக்கும், தரத்திற்கேற்ப உடனடியாக வைத்திய உபகரங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், தளபாடங்கள் வழங்கப்படல் வேண்டும், ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள், X கதிர் படங்கள், மருந்துப் பொருட்கள் சத்திரசிகிச்சைப் பொருட்கள் கோரப்படுவை முழுவதுமாக வழங்கப்பட வேண்டும். மேலும் குறைந்தது அரச வைத்தியசாலைகளுக்காவது இவற்றை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அனுமதி பெறப்பட வேண்டும் என்ற விதி உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும், யாழ் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் இருந்து உடல்களை அப்புறப்படுத்த பழைய பாதையை பாவிக்க அனுமதிக்கப்படல் வேண்டும். அல்லது நோயாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் வைத்தியர்களுக்கும் அசௌரிய மேற்படுத்தாதவேறு பாதை ஏற்படுத்தப்பட வேண்டும், என்பன உள்ளிட்ட 21 கோரிக்கைகள் இக்கடிதத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. நடவடிக்கை எடுப்பாரா பணிப்பாளர்?

# அதற்கும் தடை தான்!

யாழ்ப்பாணத்திலிருந்து எந்தெந்தப் பொருட்களை நீங்கள் கொண்டு வரலாம்?

பலாலி இராணுவ முகாமூடாக விமானத்தில் வரும் பயணிகள் கொண்டு வரக்கூடிய பொருட்கள் கொண்டு வரக்கூடாத பொருட்கள் என்று சில இருக்கத் தான் செய்கின்றன. இவற்றில் சில பொதுவான விமான சேவை விதிகளுக்குட்பட்டவை. இன்னும் சில இலங்கை அரசின் பாதுகாப்பு அமைச்சின் சட்டத்துக்குட்பட்டவை.

இவற்றையும் விட இன்னும் சிலவும் உள்ளன. இவை அவ்வப்போது விமான நிலையத்தில் கடமைபுரியும் இராணுவ சிப்பாய்களின் மனதில் தோன்றும் எண்ணப்படி நடப்பவை.

அண்மையில் பதவியுயர்வுக்கான ஒரு நேர்முகப்பரீட்சைக்காக கொழும்புக்கு வந்த எனது நண்பரான அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு கிடைத்த அனுபவத்தை அவர் என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

விமான நிலையத்தில் பொதிகள், பொதிகளிலுள்ள பொருட்கள் பொருட்களின் உள்ளிருக்கக் கூடிய பொருட்கள் எல்லாவற்றையும் 'உள்ளிருக்கும் எனக்கருதி உட்புகுந்து தடவிய' இராமனது பாணம்போல அக்குவேறு ஆணிவேறாக துருவித்தேடியபின் அவரது கைப்பையிலிருந்த டயறி, கல்வி மற்றும் தொழிற் சான்றிதழ்கள், அதனுள் இருந்த கடிதங்கள் ஒவ்வொன்றையும் பற்றிக் கேள்வி கேட்டபடியே தேடினானாம் ஒரு சிப்பாய். கடிதங்கள் கடதாசிகள் முகவரிகள் எவற்றையும் அவன் தப்பவிடவில்லை. இறுதியாக அவனிடம் அகப்பட்டது பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்.

'இது என்ன?', - கேள்வி சிங்களத்தில் தான் என்பதை சொல்லத் தேவையில்லை. 'பேர்த் சேர்ட்டிபிக்கட்' - நண்பர் பதில் சொன்னார்.

"அப்படி என்றால்"

"உபன் சாதிக்கய" பிறப்புச் சான்றிதழ் என்பதன் சிங்களச் சொல்லை சொன்னார் அவர்.

"அதிலே ஏன் இரண்டு வைத்திருக்கிறாய்? மற்றது யாருடையது?"

-அப்போது தான் நண்பர் அதைக் கவனித்தார். ஒன்று அவருடையது. மற்றையது அவரது தகப்பனாருடையது. முன்பு ஏதோ ஒரு காரணத்திற்காக எடுத்து வைத்தது அப்படியே அவரது சான்றிதழுடன் கிடந்து விட்டது. தகப்பனார் இப்போது காலமாகி நான்கு வருடங்களுக்கு மேல் ஆகியும் விட்டது.

'இது எனது அப்பாவினுடையது' என்றார் நண்பர்.

'இதை ஏன் எடுத்துப் போகிறாய்?'

-நண்பர் காரணத்தைச் சொன்னார்.

-அதையெல்லாம் அவன் கேட்பதாக இல்லை. 'வேறை ஒருவருடைய சாமான் நீர் கொண்டு போகேலாது' என்றான் அவன்.

நண்பருக்கு சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை. அவர் முடிந்தளவு விளக்கி அதைத் தருமாறு கேட்டார். அவன் நண்பரை ஒரு அதிகாரியிடம் கூட்டிச்சென்றான். அதிகாரியும் விசயத்தைக் கேட்டுவிட்டு உதட்டைப் பிதுக்கினார்

'மற்றவர்களுடைய ஆவணங்களை நீர் கொண்டு போக முடியாது...'

-பதில் ஆங்கிலத்தில் வந்தது. மொழி தான் வேறே ஒழிய பதில் அதேதான்.

'நண்பர் சரி அப்படியானால் வைத்திருங்கள்' என்று சொல்லிவிட்டு வந்தார். என்றாலும் அவருடைய தகப்பனாரின் பிறப்புச் சான்றிதழை இப்படி விட்டுவிட்டு வருவது. என்னவோ போல இருந்திருக்கிறது அவருக்கு. வரிசையாக நின்ற பயணிகள் மத்தியில் நின்ற நண்பருக்கு தெரிந்த ஒரு நீதிபதி என்ன விஷயம் என்று இவரிடம் கேட்டார். நண்பர் விஷயத்தைச் சொன்னபோது, 'எந்தச்சட்டத்தின் கீழ் இதை அவன் தரமறுக்கிறான் என்று கேளும்' என்றார் அவர்.

ஆனால், நண்பர் கேட்கவில்லை. சட்டம் கதைத்து கொழும்புக்கே போகாமல் விட வேண்டி வந்தாலும் என்ற கவலையுடன் அவர் கேட்காமல் இருந்து விட்டார்.

விமானத்தில் ஏறும் பயணிகள் போகத் தயாராகிக் கொண்டிருக்கையில் அந்தச் சிப்பாய் நண்பரைக் கூப்பிட்டான்.

நண்பருக்கு பயமாக இருந்தது. "ஐயோ.. என்ன நடக்கப்போகிறதோ' என்ற அச்சத்துடன் அவனருகாகச் சென்றான்.

சான்றிதழை அவரது கையில் கொடுத்து அவன் சொன்னான். 'பரவாயில்லை கொண்டு போ... உனக்கெண்டபடியால் தான் தாறன்'

நண்பருக்கு தூக்கிவாரிப் போட்டது. எனக்கு மட்டும் செய்ய இவனுக்கு அப்பிடி என்ன விசேட அக்கறை என் மீது? அவருக்கு புரியவே இல்லை. நன்றி சொல்லிவிட்டு அதை வாங்கிக் கொண்டு வந்தார் அவர்.

ஆக, மற்றவரின் பிறப்புச் சான்றிதழைக் கொண்டு போகக் கூடாதென்றும் ஒரு சட்டம் இருக்கிறதா? அதுவும் பாதுகாப்புக்கு எதிரானதா?

நண்பருக்கு புரியவே இல்லை. எனக்கும் தான்!

ஆனால், கூட வந்த ஒரு பயணி இதற்கு என்ன காரணம் என்று சொல்லியிருந்தாராம்.

"தமிழராக இருக்கிறீங்களே நீங்கள். அதுதான். தமிழர் என்றாலே எந்தக் காரணமும் நியாயமும் இல்லாமல், அவர் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் மிரட்டலாம்... அதுதான் காரணம்!"

- இல்லை என்று சொல்ல எனக்கும் முடியவில்லை!

நன்றி - நூலகத்திட்டம்



# வேதம் ஓதும் சாத்தானின் கதை!


– நாசமறுப்பான்

நான்கு வருடங்களுக்கு முன்பு அலங்காரமாக ஒலித்த இந்த முழக்கம் இன்று பார்ப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் சிரிப்பையும், எரிச்சலையும், ஏன் அருவருப்பையும் ஊட்டும் ஒன்றாக மாறிவிட்டது.

சமாதானத்திற்கான யுத்தம் என்பதை விட கேலிக் கூத்தான ஒரு விஷயம் இந்த தசாப்தத்தில் வேறொன்றும் இருக்க முடியாது என்று, நாம் இந்தப் பத்தியில் அதை விமர்சித்த போது எம்மைப் பார்த்து எரிச்சலடைந்தவர்களே இப்போது ஒப்புக்கொள்ளத் தொடங்கியுள்ளார்கள்.

'யுத்தம் சமாதானத்தை அடைவதற்காக' என்ற கருத்தை இலங்கை அரசு வெளிப்படுத்திய போது, அதற்கு அரசால் சொல்லப்பட்ட பொழிப்புரை 'புலிகளுடன் யுத்தம் செய்து அவர்களை வழிக்குக் கொண்டு வராமல் சமாதானத்தை காண முடியாது. ஏனென்றால் அவர்கள் தான் சமாதானத்தின் எதிரிகளாக உள்ளனர். சமாதான முயற்சிகளைக் குழப்புகின்றனர்' என்பது.

இந்தக் கருத்தை 'மனித உரிமைக்கட்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் (UTHR) என்ற அமைப்பு உள்ளிட்ட சில தமிழ்ப் புத்திஜீவிகளும் ஆதரிக்கவே செய்தனர். புலிகளது செயற்பாட்டின் மீது கொண்டுள்ள விமர்சனம் / எதிர்ப்புணர்வு என்பன காரணமாக அவர்கள் இந்தக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டனர். அரசுடன், அண்டிப் பிழைக்க விரும்பிய சிலரும் கூட இதை வழி மொழிந்தனராயினும் அவர்களது கருத்துக்களை நாம் கவனத்திலெடுக்கவும் தேவையில்லை.



ஆனால், முன்னைய அணியினர், மனித உரிமைகள், ஜனநாயகம், என்பவற்றுக்காகக் குரல் கொடுப்பவர்கள் என்ற தமது முகத்துடன் இதனை ஏற்றுப் பிரச்சாரம் செய்த போது, அவர்கள் செய்த பாதிப்பு மிகவும் பெரியது. புலிகளாலும் சிவிலியன்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மாற்றுக் கருத்துள்ளவர்கள் அழிக்கப்பட்டுள்ளார்கள் என்ற உண்மையை அவர்கள் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான சரியான செந்நெறியை தீர்மானிப்பதற்கான விமர்சனத்துக்காகப் பயன்படுத்தவில்லை. மாறாக, இந்த உண்மையை அவர்கள் அரசாங்கத்தின் யுத்தத்தையும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும் வாழ்வுரிமைகளையும் ஒவ்வொன்றாக அது கபளீகரம் செய்வதை நியாயப்படுத்தவே பயன்படுத்தினார்கள்.

ஆனால் இன்று?

யாழ். பல்கலைக்கழக சமூகம், தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைக் கோரிக்கையைப் பிரச்சாரம் செய்யவும், மக்களை அந்த உரிமை தொடர்பான கல்வியூட்டலுக்கு உள்ளாக்கவும், எடுக்கும் முயற்சிக்கு இராணுவ பலத்தினைக் காட்டித் தடை செய்துள்ளது அரசு. சமாதான பேச்சுக்கள் அவசியம் என்று சொல்வதற்கும் அதற்காக பிரச்சாரம் செய்வதற்கும் பல்கலைகழக சமூகத்திற்கும், மக்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சமூகம் செய்ய நினைத்த 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சியை எதிர்க்கின்ற, அதற்கான விளம்பர சுவரொட்டிகளை ஒட்டிய மாணவர்களை கைது செய்கின்ற அதிகாரமும், நியாயமும் படையினருக்கு வழங்கப்பட்டது எவ்வாறு?

ஏற்கெனவே மட்டக்களப்பிலும் மற்றும் கிழக்கின் பிற பகுதிகளிலும் படையினர் துண்டுப் பிரசுரம் விநியோகித்ததும் ஒலி பெருக்கி மூலம் அங்குள்ள மக்களுக்கு யுத்த நிறுத்தத்திற்கு ஆதரவாகவும், சமாதானப் பேச்சை வலியுறுத்தியும் செயற்பட வேண்டாமென்று அறிவிப்புச் செய்து வருவதும் தெரிந்ததே.

சமாதானம் தேவை, அதற்காகவே யுத்தம் செய்கிறோம் என்ற கதை போய் இப்போதெல்லாம் சமாதானம் வேண்டாம் என்று சொல்லுவதில் அரச படைகள் ஈடுபட்டு வருகின்றன.

உண்மையில் அரசாங்கத்திற்கு சமாதானம் தான் இறுதி இலக்காக இருக்கிறது என்றால், சமாதானத்திற்கு எதிரான பிரச்சாரத்தைச் செய்யும் அனுமதி எவ்வாறு இராணுவத்திற்கு கிடைத்தது?

யாழ் பல்கலைக்கழக சமூகம் யாழ் மாவட்டத்திலுள்ள 50க்கும் மேற்பட்ட. மனித நேய அமைப்புக்களும், மதத் தலைவர்களும் இணைந்து நடந்த இருந்த பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு முழுக்க முழுக்க அஹிம்சை வழியிலான சட்ட வரையறைக்குட்பட்ட ஒரு நிகழ்ச்சி என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

சமாதானத்திற்காகவும், யுத்தத்துக்கு எதிராகவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும் குரலெழுப்புவது எந்த விதத்திலும் சட்ட விரோதமான ஒன்று அல்ல.



ஆனால், இலங்கை அரசுப் படைகளுக்கு அது சட்ட விரோதமாக இருக்க வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை. அவர்களுக்கு அது தமது இராணுவ நடவடிக்கைகட்கு எதிராக அமையும் என்ற எண்ணம், வெறும் சந்தேகம் இருந்தாலே போதும். அது சட்ட விரோதமாகிவிடும்.

இந்த நிகழ்ச்சியைப் புலிகளின் சதி என்றும், இதற்கு மக்களை அழைப்பது பல விதமான அசம்பாவிதங்களை ஏற்படுத்தும் என்றும் கூறி இராணுவத்தினர் நிகழ்ச்சியில் மக்கள் கலந்து கொள்வதைத் தடை செய்துள்ளார்கள.

ஆக, சமாதானத்திற்காக யுத்தம் என்ற நோக்குடன் யாழ் நகரில் நிலைகொண்டுள்ள படையினர் சமாதானம் எனக் கருதுவது எதனை?

படையினருக்கு, மக்கள் தமது அரசியல் உரிமைகட்காக செயற்பட விரும்புவதை தடை செய்யும் அதிகாரம் அரசின் இந்த 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற கோட்பாட்டிலிருந்து எப்படி பிறக்க முடியும்?

உண்மையில் இந்த நிகழ்ச்சிகள், சமாதானம் என்றால் என்ன?, யுத்தம் என்ன? இவை இரண்டையும் அரசு எப்படிக் கருதுகிறது என்பதை தெளிவாக விளக்கி விட்டிருக்கின்றன.

சமாதானம் என்பது புலிகள் ஆயுதங்களை வீசிவிட்டு யுத்தமிடாமல் இருப்பது, தமிழ் மக்கள் தமது அபிலாஷைகளைப் பற்றி மூச்சுவிடாமல் இருப்பது, இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு. அதில் வாழும் சிங்கள மக்கள் 'பூமிபுத்திரர்கள்'. தமிழ் மக்கள் அங்கே வாழும் பிற இன மக்கள் என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளல். தாம் ஒரு தேசிய இனம். தமக்கு ஒரு பாரம்பரிய தாயகப் பிரதேசம் இருக்கிறது என்பவற்றை மறந்து விட்டு சிங்கள இனத்துடன் சேர்ந்து கலந்துவிடுவது.... என்பது தான் - இலங்கையில் வாழ்கின்ற பெரும்பாலான இனவாதிகளது அபிப்பிராயமாகும். ஏன், இன்றைய அரசாங்கத்தின் பிரதம மந்திரியினது அபிப்பிராயம் கூட அதுதான்.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்மற்ற கருத்தும் இதுதான்.

யுத்தம் என்றால் தமிழர்களை அடிமைப்படுத்துவதற்காக நடாத்துவது, அவர்களை தமது உரிமைகளைப் பற்றி வாய் திறக்காமல் பண்ணுவது, வாய் திறப்பவர்களை, நியாயம் கேட்பவர்க்ளை புதை குழியில் போட்டுமூடுவது. ஆயுதமில்லாத மக்களை பயணம் வைத்து, அவர்களது வீடுகள் நிலங்களை துவம்சம் செய்து, அவர்களது பெண்களை வல்லுறவுக்குள்ளாக்கி சிங்கள வீரத்தை நிலை நாட்டுவது என்பது பேரினவாதிகளது எண்ணம். அரசுக்கும் அதை விட வேறு எண்ணம் இருப்பதாக தெரியவில்லை.

சுருக்கமாக சொல்வதானால், எவ்வளவு அமைதியாக இருந்த நாடு இது. இதை இந்தத் தமிழர்கள் வந்து குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அடித்து நொருக்கி ஒரு வழிக்கு கொண்டு வந்தால் நாடு சமாதானமாகவும், நிம்மதியாகவும் இருக்கும்' என்று அது சொல்லாத குறைதான்.

ஆனாலும், அதை அது சொல்ல அதிக காலம் எடுக்காது. ஒரு வேளை ஆனையிறவை கினிஹர பிடித்து விட்டபின், அல்லது முழுக் குடாநாட்டையும் கைப்பற்றிய பின், போனால் போகுது என்று சமாதானமாக இருக்கத் தான் தயார் என்றும், சண்டை பிடிக்காமல் இருங்கோ என்றும் அது மனமிரங்கிச் சொல்லக்கூடும்.

அதுவரை அவர்களால் யுத்தத்தை நிறுத்த முடியாது. யுத்தத்தை நிறுத்தினாலும் அது நிரந்தமாக நிற்பதற்கு ஏற்ற விதத்தில் புலிகளுடனோ, தமிழ்த் தரப்புடனோ எந்த உடன்படிக்கைக்கும் அவர்கள் வரப்போவதில்லை.

சமாதானத்தை இனங்களுக்கிடையிலான நல்லுறவு, விட்டுக் கொடுப்பு, சமத்துவம், பலஸ்பர அங்கீகாரம், அதிகாரப் பகிர்வு என்பவற்றின் அடிப்படையில் கட்டி எழுப்பப்படும் ஒன்று என்று இது காலவரை நம்பிக் கொண்டிருந்தவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் குறித்துக் கொள்ளலாம்.

இலங்கை அரசாங்கம் - இன்றைய அரசாங்கம் - உங்கள் சமாதானத்திற்கு ஒரு போதும் வரப்போவதில்லை.

யுத்தம் யுத்தம் என்று சொல்லியே அது தனது பதவிக் காலத்தை ஓட்டிவிடும். யுத்தவெறி பிடித்த ஒரு சமுதாயத்திடம் தனது பணியைத் தொடரும் பொறுப்பை வழங்கிவிட்டு வெளியேறுகையில் இந்த நாடு ஆசியாவின் புதிய நோயாளியாகக் காட்சியளிக்கும் நிலை உருவாகும்.

யுத்தத்தில் இந்த அரசு வெல்லப் போவதும் இல்லை. அதைக் கைவிடப் போவதும் இல்லை.

நாளது வரை சமாதானம் பற்றிய அதன் கோட்பாடு கொஞ்சமும் மாற்றமடையவில்லை என்பதால் அது தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் யுத்தத்தைத் தொடர்ந்து செய்யாமல் சமாதானம் பற்றி எண்ணப் போவதில்லை.

இந்த நாட்டின் மக்கள் அனைவரின் மத்தியிலிருந்தும் எழுந்து வரப்போகும் பொங்கு தமிழ் போன்ற பல்வேறு எழுச்சிகளின் உக்கிரம் தான் அதை சமாதானத்தை நோக்கி நகர்த்த முடியும்.

யுத்தத்தை கைவிடச் செய்ய முடியும்.

அதுவரை சமாதானம் பற்றிய அதன் பேச்செல்லாம் வேதம் ஓதிய சாத்தானின் கதைதான்!

நன்றி - நூலகத்திட்டம்



# மூன்று மாதங்களுக்கு முன் என்றால் ஜனாதிபதிப் பதவி!

**- இடையன்**

கடந்த டிசம்பர் மாதம் 9ம் திகதி அட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் மலையக பட்டதாரிகள் ஒன்று-கூடல் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. தொண்டமான் பயிற்சி நிலையத்தின் அதிபர் கே.மெய்யநாதனும் அட்டன் உதவிக் கல்விப் பணிப்பாளரான ஏ.இராசையாவுமே இதன் பிரதான ஏற்பாட்டாளர்களாகவும் விளங்-கினர். இந்நிகழ்வு, கருத்துப் பரிமாறலாகவும் எதிர்கால முயற்சிகளுக்கு துணையாகவும் இருக்கும் என்பது ஏற்பாட்டாளர்களின் கருத்து.

சமுதாயம் எதிர்நோக்கும் பிரச்சினை-கள், மாற்றத்தின் தேவை, நிகழ்கால, எதிர்கால மலையக அரசியல் போக்கு என்பனவற்றிற்கான கருத்து பரிமாற்றலுக்-கான ஒரு களமாக இருக்கும் என எதிர்-பார்த்துச் சென்ற பட்டதாரிகளுக்கு வெறும் ஏமாற்றமே எஞ்சியது.

மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்து வரும் இ.தொ.கா. மலையக சமூகப் பிரிவினரிடையே குறிப்பாக ஆசிரியர்கள், அதிபர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், தொழிலாளர்கள் என தனது செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்வ-தற்காக இவ்வாறான நிகழ்ச்சிகளை தொடர்ச்-சியாக செய்து வருகின்றது. இதன் ஒரு அம்சமாகவே இப்பட்டதாரிகள் ஒன்றுகூட-லும் இடம்பெற்றது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதற்காக இலட்சக்கணக்-கில் அமைச்சு நிதியை கருத்தரங்கு, பட்ட-றைகள் என செலவழித்து வருகின்றது. இந்நிதி மலையக தோட்ட உட்கட்டமைச்-சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்தே பெறப்படுவதாகவும் அறிய முடிகின்றது. தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் கீழ் இயங்கும் அட்டன் தொண்டமான் தொழிற்-பயிற்சி நிலையமே இதற்கான தளமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஆசிரியர் பயிற்சிக்கென ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 60 இலட்சம் பயிற்சிக் கருத்தரங்குகள், பாசறை-கள் என்ற பெயரில் இ.தொ.கா. பிரச்சார ,மற்றும் அதிகார வெளிப்பாட்டுக் களங்க-ளாகவே நிறைவுபெறுகின்றன என்பது பங்குபற்றுனர்களின் கருத்தாக உள்ளது.

சுதந்திர கருத்தாடல் பற்றி பேச இளம் பட்டதாரிகள் தாங்கள் எதிர்நோக்கும் தொழில் பிரச்சினைகளை பேச முதுநிலை பட்டதாரிகள் உயர்கல்வி வாய்ப்பு மற்றும் மறைமுக இ.தொ.கா புராணம் பாட என்று அன்றைய நிகழ்வு தொடர்ந்தது.

ஆரம்ப உரை நிகழ்த்திய மெய்யநாதன் தொடக்கம் உரையாற்றிய அனைவருமே மலையக மக்களின் தேவைகளுக்கு பதிலாக இ.தொ.கா. பஜனையாகவே இருந்தது.

ஜெகதீஸ்வரன் (பா.உ) உரையாற்று-கையில் "400 பட்டதாரிகள் கலந்து கொள்-வார்கள் என தாம் எதிர்பார்த்ததாகவும் ஆனால் 55 பேரே வருகை தந்திருப்பதாக-வும் இதிலிருந்து ஏனையோருக்கு பிரச்சினைகளே இல்லையென்பது புலனா-கிறது" எனவும் தெரிவித்தார்.

"நான் உங்களது குறைகளையோ பிரச்சினைகளையோ கேட்க வரவில்லை, எமது சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு கேட்கவே உங்களை அழைத்தேன்" என இ.தொ.கா. பொதுச் செயலாளர் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் குறிப்பிட்டார். மேலும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திலுள்ள வெற்றிடங்களுக்கு இருமுறை நேர்முகப் பரீட்சை நடாத்தப்-பட்டதாகவும் அதை ரத்து செய்து, அவ் வெற்றிடங்களை இந்தியாவிலிருந்து பொருத்தமானவர்களை அழைத்து பூர்த்தி செய்யப் போவதாகவும் மிரட்டினார்.

இ.தொ.கா.தலைமையானது மலையகப் பட்டதாரிகள் தொடர்பில் தெளிவான கொள்கையைக் கடைப்பிடிக்க தவறின் எதிர்காலத்தில் மலையகத்தில் அனைத்துப் பட்டதாரிகளும் இ.தொ.கா.விற்கு எதிராக-வே நிற்பர் என்பதில் சந்தேகமில்லை. ஏனைய சமூகத் தலைவர்கள் போல் மலையக தலைமைகளும் மலையகப் பட்டதாரிகளுக்கு நிருவாக சேவை, அஞ்சல் தொலைதொடர்பு, வங்கி, அமைச்சு செயற்திட்டங்களில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க துணை நிற்க வேண்டும். பல்கலைக்கழகத்தில் மலையக மாணவர்களுக்கு உள்ள அடிப்-படை வசதிகளை பெற்றுக் கொடுக்க அரசுக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும். சென்ற வருடம் தொடக்கம் மலையக மாணவர்களுக்கு பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்கள் அருகில் இருந்த போதிலும் வயம்ப (வடமேல்) தென்கிழக்கு, மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களில் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. அங்கு சென்று கற்பதிலுள்ள சிரமங்களினால் பல்கலைக்கழக கல்வியை கைவிடவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. திட்டமிட்ட முறையில் மலையக மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்கள் பறிக்கப்படும் நிலைக்கெதிராக அரசுக் நெருக்கடி கொடுக்க வேண்டும். தொடர்ந்தும் மலையக சமூகத்தை ஏமாற்றி பிழைப்பு நடத்தலாம் என்ற காலம் கடந்து விட்டது என்பதே அங்கு கூடிய பட்டதாரிகளின் கருத்தாக இருந்தது.

இறுதியாக அன்றைய நிகழ்வில் அமைச்சர் தெரிவித்த மிகப்பெரிய ஜோக் இது. மூன்று மாதங்களுக்கு முன் கேட்டி-ருந்தால் தனது அமைச்சு பொறுப்பையும் ஆறுமாதத்திற்கு முன் கேட்டிருந்தால் ஜனாதிபதி பதவியையும் பெற்றுக் கொடுத்-திருப்பேன் என்று கூறினார். அவருக்கு இத்தருணத்தில் ஒரு தாழ்மையான வேண்டு-கோள் இன்னும் நேரம் கடந்துவிடவில்லை. அமைச்சர் ஆறுமுகம் அவர்கள் ஜனாதிபதிப் பதவியைத் தரத்தேவையில்லை, மலைய-கத்திலுள்ள வேலையற்றப் பட்டதாரிகளுக்கு குறைந்தபட்சம் ஒரு அரச உத்தியோகத்தை-யாவது வாங்கித்தர முடியுமா? ⊙

---

# திரைவிலகும் நேரம் தீர்விற்கு தயாரில்லாதவர்களா நாம்?

நமது அரசியல் என்ன? நாம் எதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம்? நமது வெளிச் சூழலில் சக தேசங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? நாம் மட்டும் ஏன் வாய் மூடி மௌனிகளாக காலம் கடத்துகிறோம்? என்ற வினாக்கள் நமக்கு மிக முக்கியமாகின்றன. இவ்வினாக்-கள் மட்டுமன்றி இவ்வினாக்களை ஒவ்-வொரு தனி முஸ்லிமும் தனக்குள் எழுப்பி அதற்குக் கிடைக்கும் விடைகளும் நமக்கு முக்கியமாகிறது.

அவ்விடைகளில் இருந்து தான் நமது செயற்பாடுகள் தொடங்கப் படப் போகிறது. நாளை நமது வாழ்வின், நமது பிற்கால சந்ததிகளின் வாழ்வின், விதி எது என்பதை தீர்மானிக்கும் மிகப் பெரும் பலமுள்ள சிந்தனைகளும் அப் பதில்களினுள் தான் அடங்கி இருக்கின்றன என்ற ஆசிரியர் குறிப்புடன் வெளிவந்துள்ளது 'விடியல்' என்கிற முஸ்லிம்களின் விடுதலைக்கான மார்க்கம் பற்றிப் பேசுகின்ற ஒரு பிரசுரம். அதனதுமுதல் இதழ் ஜன. முதல் வாரம் வெளியாகியுள்ளது. இரண்டு வாரங்களுக்-கொருமுறை வெளிவரும் என்ற குறிப்பும் காணப்படுகிறது.


மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் மௌனம் கலைவது ஒரு வகையான ஆறுதலைத் தருகிறது. நமக்குள் பொத்தி பொத்தி வைத்து பேசாமல் இருந்த "நமது அரசியல் விடுதலை" பற்றிய விடயங்களை மனம் திறந்து பேசுவதற்கான ஒரு வாய்ப்பு "விடியல்" ஏட்டின் மூலம் தொடங்கி வைக்கப்படுகிறது என்றும் தொடர்கிறது அக்குறிப்பு. அப்பிரசுரத்திலிருந்து ஒரு கட்டுரையை இங்கு தருகிறோம்.

சிங்களத் தேசமும் தமிழ்த் தேசமும் தங்களுடைய இன அதிகாரப் பங்கீட்டுக்-கான தொடர்ச்சியான மோதலில் இரண்டு தசாப்தங்களைக் கடந்து விட்ட இன்றைய சூழலில் - அரசியல் பேச்சுவார்த்தை என்ற அரங்குக்குள் காலடி எடுத்து வைக்கும் இக்கட்டான நிலைக்கு அரசும் விடுதலைப் புலிகளும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

அதிகாரங்களை அடைந்து கொள்வதற்-கான இலக்குடன் தமிழ் இனப்பாதுகாப்பை முன்வைத்து போராடிவரும் விடுதலைப் புலிகள் தமிழர்களுடைய அரசியல் நிலைப்-பாட்டை பகிரங்கமாக முன்வைத்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏனைய தமிழ்க் கட்சிகளும், தமிழ் ஈழத்தை வலியுறுத்தா விட்டாலும் வடக்கு கிழக்கு இணைந்த தனிமாநில அதிகார அலகும், சுயாட்சிக் கோரிக்கையையும் முன்வைத்து வருகின்றன. இக் கோரிக்கையில் எவ்வித விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லை என விடுதலைப் புலிகள் உட்பட ஏனைய தமிழ்க் கட்சிகள் உறுதியாக தெரிவித்துள்ளன.

வடக்கு கிழக்கை தங்கள் வாழ்-விடமாகவும், தாயகமாகவும் கொண்ட பாரம்பரிய இனத்துவ முஸ்லிம்களும் நமது அரசியல் தலைமையும் இனப் பிரச்சி-னைக்கான தீர்வில் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களின் இருப்பிற்கும், வாழ்விற்குமான எந்த உருப்படியான தீர்வையோ, திட்டத்தையோ கொண்டில்-லாமல் தமிழ்த் தேசியத்திற்கும் சிங்களத் தேசத்திற்குமிடையே நடக்கும் சுய அதிகார-



த்திற்கான இனப்போரில் கண்ணாமூச்சி ஆட்டம் போடும் கூட்டமாகவே தங்கள் காலத்தை கடத்தி வருகின்றது.

சர்வகட்சி மாநாடுகள் தொடக்கம், 1987இல் ஏற்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம், 1994இல் சந்திரிகா அரசு முன்வைத்த தீர்வுத் திட்டம் போன்றவற்றில் முஸ்லிம் மக்களின் மிகப் பலவீனமான அரசியல் கோரிக்கையின் வெளிப்-பாட்டையே நாம் காட்டிவந்துள்ளோம்.

முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வு என்ன என்பதில் முஸ்லிம் மக்களிடையே ஒரு பலமான வெகுசன மயப்படுத்தப்பட்ட எந்தத் தீர்வையும் நமது முஸ்லிம் தேசத்தின் சார்பில் நாம் உறுதியாக முன்வைக்கத் தவறியே வந்துள்ளோம்! இப்பலவீனமான அரசியல் போக்கு வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் இருப்பையும் வாழ்வையும் மிகப் பெரும் ஆபத்திற்குள் தள்ளி விடும் அபாயத்தின் உச்சக் கட்டத்தை இன்று எட்டியுள்ளது.

வடக்கு கிழக்கில் நடைபெறும் அரசியல் இராணுவவாத யுத்தம் இன்று சர்வதேச சமூகத்தின் கைகளுக்குப் போய்விட்டது. வடக்கு கிழக்கில் தீவிர போராட்டத்தில் ஈடுபட்ட விடுதலைப் புலிகள் இன்று தங்களுடைய அரசியல் ராஜதந்திர முதிர்ச்சி-யின் காரணமாக தமிழர்களுடைய அரசியல் போராட்டத்தை சர்வதேச மயப்படுத்தி தீர்விற்கான நிர்ப்பந்தத்தையும் சர்வதேச அனுதாபத்தையும் இன்று பெற்றுவிட்டனர்.

இலங்கை அரசு சந்தித்துவரும் மிகப் பெரும் மோசமான பொருளாதார வங்கு-ரோத்து, மனித உரிமைகள் மீறல்களின் காரணமாக தமிழ்த் தேசியத்தின் அரசியல் கோரிக்கைகள் தொடர்பாக தங்களுடைய ஆதிக்க நிலைப்பாடுகளிலிருந்து இறங்கி வரவேண்டிய நிலைக்கு இன்று சிங்கள இனவாத அரசு தள்ளப்பட்டுவிட்டது.

இந்த மிக முக்கியமான நிலையில் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் தங்களுடைய இனத்துவ - தேச எதிர்காலம் பற்றிய சிந்தனைக்கு அப்பாற்பட்டு - இனப்பிரச்சினை தீர்வில் சம்பந்தப்படாத வெளிச் சக்திகளாக நின்று முஸ்லிம் காங்கி-ரசுக்குள் உட்கட்சி அதிகாரத்திற்காக சண்டை பிடிக்கும் சந்தி சிரிக்கும் மிக மோசமான நிலையில் உள்ளோம். இந்த மிகப் பெரும் பலவீனமாக போக்கு நாளைய தீர்வில் முஸ்லிம்களை எங்கு கொண்டு நிறுத்தும் என்பதை நமது இளைஞர்கள், யுவதிகள் புத்திஜீவிகள், இனத்துவ அக்கறையுள்ளோர் சிந்திக்க வேண்டும்.

முஸ்லிம் சமூகத்திற்குள் முஸ்லிம்க-ளுக்காகப் போராடுகிறோம் என "டூப்" அடித்துக் கொண்டிருக்கும் இன்றைய நமது அரசியல்வாதிகளிடம் நமது தீர்விற்கான மார்க்கத்தையும், அரசியல் குரலையும் பாரம் சாட்டிவிட்டு மக்களாகிய நாம் இப்பிரச்சி-னைக்கு வெளியில் கைகட்டி பார்த்துக் கொண்டிருக்கும் பார்வையாளர்கள் என்ற நிலைப்பாட்டிலிருந்து முதலில் விடுபட வேண்டும்.

மக்கள் மயப்படுத்தப்பட்ட விட்டுக் கொடுக்க முடியாத அரசியல் கோரிக்கையின்

## இனப்பிரச்சினைத் தீர்வில் சூன்யமான முஸ்லிம்களின் நிலை!

ஊடாக முஸ்லிம் தேசம் - சிங்கள - தமிழ் தேசங்களுக்கிடையேயான அதிகாரப் பங்கீட்டில் முஸ்லிம்களுக்கான நியாயமான கௌரவத்துடன் கூடிய ஒரு தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கு தயாராக வேண்டிய இறுதிச் சந்தர்ப்பத்தில் இன்று உள்ளது.

காலத்தைக் கடத்தி கைசேதப்பட்டவர்-களாக அல்லாடி நிற்கும் ஒரு தேசமாக நாம் மாறுவதற்கு முன், நிகழ்காலத்தில் எமது மண்ணில் எமது கால்களையும், கரங்களையும் உறுதிப்படுத்த வேண்டிய முன்னெடுப்புகளை உடனடியாக மேற்கொள்ளும் சக்தியாக மாறுவோம்! மாற வேண்டும் என்பதே இன்றைய அரசியல் சூழலில் எமது தலைவிதியாகும்.

நன்றி : விடியல்

நன்றி - நூலகத்திட்டம்



### உயிர் - தொழில்நுட்பவியல் ஏகாதிபத்தியவாதம் - 03

# உயிர் - தொழில்நுட்பவியல் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான மக்கள் எதிர்ப்பியக்கங்களும், அதற்கான வெற்றியும்

– றியாஸ்

பூமியில் வளங்கள் மனித இனத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் சொந்தமானது என்றால், அதை நீதியாக, சரிநிகராக எல்லோருக்கும் பங்கிட்டுக் கொள்வதற்கு, சர்வதேச சோஷலிசம் மலராமல் சாத்தியமில்லை என்கின்றார் கார்ல் மார்க்ஸ்.

இன்று நடைமுறையில் இருக்கும் பொருளாதார அமைப்பு, உறுதியானதாக இருக்கலாம். ஆனால் அதனை நிர்வாகம் செய்பவர்கள் முட்டாள்களோ அல்லது கற்பனை வளம் இல்லாதவர்களோ அல்ல. அவர்கள் எதிர்ப்புக்களை சமாளிப்பதில் சிறப்பான தேர்ச்சிகளைப் பெற்றுள்ளனர். முற்போக்கான கருத்துக்களை முளையிலேயே கிள்ளியெறிய நன்றாகவே அறிந்துள்ளனர். அவர்கள் எப்போதும் சூழலியல் கோரிக்கைகளை தங்களுக்குச் சாதகமாகவே வளைக்க முற்படுவர்.


என்வே இதற்கெதிராக திரண்டெழக் கூடியவர்கள் மக்களே. இதற்கு முதன் முதலாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இந்த விழிப்புணர்வுக் கருத்துக்கள் ஒரு வலுவான எதிர்ப்புக் குரலாக உருவாக வழி வகுக்க வேண்டும். சுற்றுச்சூழற் சங்கங்கள், சூழலுக்கு ஆதரவு தரும் தொழிற் சங்கங்கள், அணுசக்தி எதிர்ப்பு அமைப்புக்கள் போன்ற பலவும் நிறைய உருவாகி தொடர்ந்து போராட வேண்டும். இத்தகைய போராட்டங்கள் பல வெற்றி பெற்றுள்ளன. வெற்றி பெற்றும் வருகின்றன. இவை நமக்கு மிகுந்த தெம்பை அளிக்கின்றன. நம்பிக்கையும் அளிக்கின்றது.

இந்த உயிர்-தொழில் நுட்பவியலிற்கு எதிரான மக்கள் எதிர்ப்பியக்கத்தையும், மக்கள் எதிர்ப்பையும் நோக்குவோம்.

உணவுற்பத்தியில் பரம்பரையியல் தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்தே அதற்கு எதிராக மக்கள் எதிர்ப்புக்களைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வகையில் மழுங்கடிக்கப்பட்ட விதைகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்ததே மிக அண்மைக்கால நிகழ்வாகும். இந்த எதிர்ப்பியக்கம் இயக்கத்திற்குள்ளாகத் தொடங்கியது ஐரோப்பாவிலே தான் (குறிப்பாக அமெரிக்காவிற்கெதிராக). உணவுற்பத்தியில் பரம்பரையியல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கு ஆதரவாக சட்டங்களைக் கொண்டு வரும் அரசாங்கங்களுக்கும் மக்கள் நேரடியாக எதிர்ப்பைக் காட்டவும் தொடங்கி விட்டனர்.

மழுங்கடிக்கப்பட்ட விதைகள் அறிமுகமானதைத் தொடர்ந்து மக்களின் உலகளாவிய எதிர்ப்பும் தொடங்கியது. இந்த எதிர்ப்புச் சக்திக்கு முகம் கொடுக்க முடியாமல் மழுங்கடிக்கப்பட்ட விதைகளை வியாபார நோக்கில் உற்பத்தி செய்வதில்லை என்று மொன்சன்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பில் நம்பிக்கை வைக்க முடியாமல் இருக்கின்றது. ஏனெனில் அந்தக் கம்பனியின் பேச்சாளரின் தகவலின்படி வர்த்தக நோக்கைக் கைவிட்டாலும் ஆய்வுகள் தொடரும் என்று கூறப்படுவதே சந்தேகத்திற்கு காரணமாகும்.

மேலும் இந்த நிறுவனங்களில் பணி செய்யும் விஞ்ஞானிகள் 'எதில் ஆபத்தில்லை. வீதியைக் கடப்பதில் கூட ஆபத்திருக்கிறது' என்ற வாதத்தை எழுப்பி புத்திசாலித்தனமாக உயிர்-தொழில் நுட்ப ஏகாதிபத்தியவாதத்திற்கு எதிரான கோசத்தை அடக்கப் பார்க்கிறார்கள். அடிப்படை மனித உரிமைகள், மிருகவதைத் தடுப்பு என்றெல்லாம் மூன்றாம் மண்டல நாடுகளைப் பூச்சாண்டி காட்டும் ஏகாதிபத்தியவாதிகள், ஸ்கொட்லாந்தின் றொஸ்லின் நிறுவனத்தின் - ஒரு வளர்ந்த ஆட்டின் பால்மடிக் கலத்திலிருந்து ஒரு முழு ஆட்டுக்குட்டியை உருவாக்கி விட்டோம் - என்று அறிவித்தவுடன், அவர்கள் அடைந்த புளகாங்கிதத்திற்கு அளவேது.



ஆனால் அந்த ஒரு ஆட்டை உருவாக்குவதற்கு 300 ஆட்டு முதிர்மூலவுருக்கள் அல்லது இளங்குட்டிகள் சிதைக்கப்பட்டன என்பதே அந்தப் புளகாங்கிதத்திற்குப் பின்னால் இருந்த சோகமாகும். இது மிருகவதையின் உச்சக் கட்டம் தான் என்பது வெளிப்படை. இதனை இவர்களால் உருவாக்கப்பட்ட உயிரியல் ஆராய்ச்சிகளின் அறவியலில் எந்த வகுதிக்குள் சேர்ப்பது என்று தெரியவில்லை. தற்போது ஏகாதிபத்தியவாதிகளின் நிலக்கீழ் சோதனை அறைகளில் மனிதக் குழந்தையை உருவாக்கும் முயற்சியில் எத்தனை ஆயிரம் இளம் குழந்தை குஞ்சுகள் அழிந்தனவோ தெரியாது.

உண்மையில் உயிர் - தொழில்நுட்பவியலிற்கு அந்தக் கைத்தொழிலுக்கு வெளியேயுள்ள நுகர்வோர்கள், நுகர்வோர் சங்கங்கள், சூழலியற் சங்கங்கள், சுயாதீனமான மனித நேயமுள்ள ஆய்வாளர்கள், விஞ்ஞானிகள், விவசாயிகள், பொது மக்கள் சுகாதார நல ஸ்தாபனங்கள் போன்றவைகளே பாரியளவில் எதிர்ப்புக்களைக் காட்டி நிற்கின்றன.

பரம்பரை உருமாற்றம் செய்யப்பட்ட உணவுகளை எடுத்துக்கொண்டால், ஐரோப்பாவில் 80% மான மக்கள் இந்த உணவுப் பொருட்களை வெறுப்பதாக அண்மைக்கால கணிப்பீடு ஒன்று குறிப்பிடுகிறது. ஆஸ்திரியாவில் 12 இலட்சம் பேர் கையெழுத்திட்டு பரம்பரை உருமாற்றப்பட்ட உணவையும், அங்கிகளையும் தடை செய்யுமாறு அரசாங்கத்திற்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தார்கள்.

சமீபத்திய கணக்கெடுப்பொன்று நோர்வேயில் 100% மானோரும், ஜேர்மனியில் 95% மானோரும் இந்த உணவு, உயிரினங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று கூறுகிறது. Womens Environmental Network, Friends of the Earth, Green Peace, The Soil Association, Earth First!, Genetic Forum, SAFE Alliance, The Natural Law Party, Genetic Engineering Network, Lobbying for GMO Labeling போன்ற நிறுவனங்களும், சமூகநல ஸ்தாபனங்களும் பலமாக எதிர்ப்பியங்களை நடாத்தி, மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

ஐரோப்பிய அரசுகள் கூட இந்த எதிர்ப்பியங்களுக்கு செவிசாய்த்து, பாராளுமன்றத்தில் அதிக வாக்குகள் பெற்று, இந்தப் பரம்பரை உருமாற்றப்பட்ட உணவுகளுக்கெதிராகவும், மழுங்கடிக்கப்பட்ட விதைகளுக்கு எதிராகவும் சட்டங்களை உருவாக்கியுள்ளன.

பரம்பரையியல் தொழில்நுட்பங்கள் சம்பந்தமாக ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக ஆய்வுகளைச் செய்துவரும் Dr.Jane Rissler 'மக்களின் எதிர்ப்புக்கு அடிபணிந்து மொன்சன்ரோ பின்வாங்கிய சம்பவமும், இந்தப் பரம்பரை உருமாற்றப்பட்ட உணவுகளுக்கெதிராக உலகம் பூராகவும் எழுந்து வரும் எதிர்ப்புணர்வுகளும் மக்கள் சக்தியின் மாபெரும் மதிப்பைக் காட்டுகின்றது. இந்தத் தொழில் நுட்பத்தின் போக்கு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டியவர்களும் மக்களே. மேலும் அமெரிக்க விவசாயத் திணைக்களம் இத்தகைய ஆய்வுகளுக்கு நிதி உதவி செய்வதும் தவறானது' என்றும் கூறுகிறார்.

ஏகாதிபத்தியத்தின் தொழில்நுட்பத்தின் மீது நம்பிக்கை வைப்பதற்கோ அல்லது நம்பிக்கை இழப்பதற்கோ இன்று நேரம் இல்லை. நாம் உடனே நடவடிக்கையில் இறங்க வேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்துத் தான். அதற்கு முதன் முதலாக மக்களாகிய எம்மீது நாம் ஏற்றிக் கொள்ளும் விழிப்புணர்வு தான், வலுவான எதிர்ப்புச் சக்தியாக மாறி ஏகாதிபத்தியத்தின் சுரண்டல்களிலிருந்தும், அடிபணிய வைத்தல்களிலிருந்தும் எம்மைக் காப்பாற்றும் என்றால் அது மிகையாகாது.

– ரவி


ஜனவரி 24க்குப் பிறகு

# யுத்த நிறுத்தமா யுத்த நீடிப்பா?

எதிர்வரும் 24ம் திகதியுடன் புலிகளின் போர் நிறுத்தக் காலக்கெடு முடிவடைகிறது. இந்தக் காலக்கெடு முடியும் தறுவாயில் வடக்கில் அரசாங்கத்தின் படையெடுப்பு மும்முரம் அடைந்துள்ளது. ஆனையிறவை கைப்பற்றிவிடும் நோக்குடன் அது தனது முழுச்சக்தியையும் போர் முனையில் குவித்துசெயற்பட்டு வருகிறது.

நோர்வேயிலிருந்து சமாதானப் பேச்சுக்காக வந்த சொல்ஹெய்ம் அமைச்சர்கள், ஜனாதிபதி ஆகியோரைச் சந்தித்து உரையாடியதும், வன்னி செல்லும் தமது எண்ணத்தை மாற்றிக் கொண்டு நாடு திரும்பினார். புலிகளின் யுத்த நிறுத்தத்தை அரசு கொஞ்சமும் பொருட்படுத்தாதது மட்டும்லாமல் அதை தனது படைநடப்புக்கு சாதகமாக பயன்படுத்துவதிலேயே அதிக ஆர்வம் காட்டியது.

அரசு நோர்வேயின் சமாதான முயற்சியை, தற்காலிகமாக யுத்த நிறுத்த ஆலோசனையை மறுத்து விட்டது என்று சந்தோசத்துடன் சிங்களப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.



இலங்கையிலிருந்து நாடு திரும்பிய சொல்ஹெய்ம் லண்டனிலுள்ள புலிகளின் தலைமைக் காரியாலயத்துடனும், இந்தியாவுடனும், பேச்சுக்களை நடாத்தியிருக்கிறார். அரசின் இந்தத் தாக்குதல் முயற்சி தமது நிலைகளை நெருங்குவதால் தாம் தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாகும் என ஏற்கெனவே அன்ரன் பாலசிங்கம் அறிவித்திருந்தார்.

சொல்ஹெய்ம் மீண்டும் இலங்கைக்கு எதிர்வரும் 20ம் திகதி வருகிறார். 24ம் திகதிக்குள் எப்படியாவது யுத்தத்தை நிறுத்தத்தை ஒரு சாதகமான வழியில் கொண்டுவரச் செய்ய வேண்டும் என்பதில் அவர் காட்டும் அக்கறையில் ஒரு பகுதியையேனும் சம்பந்தப்பட்ட தரப்புக்களில் ஒன்றான அரசாங்கம் காட்டவில்லை.

யுத்த நிறுத்தத்திற்குப் பதில், யுத்தம் தொடர்வதையே அரசு தரப்பு விரும்புவதாக அதன் செயற்பாடுகள் தெளிவுபடுத்துகின்றன. யுத்தமுனையில் தனக்கு கிடைக்கும் வெற்றிகளை அது அறிவிக்கிற விதத்தைப் பார்த்தால் இது தெளிவாகும். எத்தனை புலிகள் கொல்லப்பட்டார்கள் எத்தனை போர் பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள் என்பது பற்றி விலாவாரியான தகவல்களை வெளியிடும் அரசும், அரச ஊடகங்களும் சமாதானம் பற்றி எதுவும் பேசுவதில்லை.

இவையெல்லாம் சொல்ஹெய்மின் 20ம் திகதிய வருகையைக் கூட பயனற்றதாக்கி விடுமாவென்று எண்ணத் தோன்றுகிறது. சொல்ஹெய்மின் சமாதான முயற்சியையும், அவரது தனிப்பட்ட வாழ்வையும் கீழ்த்தரமாக பாராளுமன்றத்தில் கூட விமர்சிக்கும் இனவாதப் போக்குகளுக்கு அரச தரப்பிலும் எந்த அர்த்தமுள்ள எதிர்ப்பும் வெளிப்படவில்லை.

பயங்கவாதத்தை ஒழித்தல் என்ற கோட்பாட்டின் பின்னால் நின்று யுத்தத்தை நியாயப்படுத்தும் அரசுக்கு சமாதானப்பற்றி அக்கறை வருவது சாத்தியமில்லைதான். உண்மையில் பயங்கரவாதிகளுடன் எப்படி ஒரு அரசு சமாதானத்திற்குப் போக முடியும் என்ற கேள்வியை பிரதமரே கேட்டுள்ள நிலையில் சொல்ஹெய்மின் முயற்சி கேள்விக்குறியாகவே உள்ளது.

சொல்ஹெய்மின் முயற்சியும், சரி எந்த மூன்றாந்தரப்பின் முயற்சியும் சரி வெற்றி பெறுவதற்கு முதலில் சம்பந்தப்பட்ட போரிடும் தரப்புக்கள் சமாதானம் தேவை என்ற ஒப்புதலுக்கு வர வேண்டும். அரசும் அதன் படைகளும் சமாதானத்திற்கு எதிராகவே இப்போதெல்லாம் செயற்பட்டு வருகின்றன. சமாதானம் வேண்டாம் என்று சொல்லாமல், பயங்கரவாதத்தை எதிர்த்து அவை யுத்தமிடுகின்றன.

ஆக, யுத்த நிறுத்த அவசகாசம் முடியும் 24ம் தகிதி இன்னொரு பாரிய யுத்தத்தின் ஆரம்பமாக இருக்கப் போகிறதா அல்லது சமாதானம் உருவாகும் வாய்ப்பு இருக்கிறதா என்ற கேள்விக்கு, யுத்தமே என்ற பதில் தான் பெருமளவு சாத்தியப்பாடுள்ளதாக தெரிகிறது.

யுத்தத்தை நிறுத்துமாறு கோருபவர்களை புலிகளின் சார்பாளர்கள் என்று கூறியபடி யுத்தத்தை நடாத்தும் அரசு ஒரு போதும் இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர ஆர்வம் காட்டப் போவதில்லை என்றே தோன்றுகிறது.

அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் அமைச்சர்களுக்கும் பிற அரச எடுபிடிகளுக்கும் அரசு சமாதானம் பேசுவதாக நம்ப ஏதாவது இருக்கலாம்.

ஆனால், தமிழ் மக்களுக்கு?

யுத்தம் ஒன்று தான் அவர்கள் முன் பூதாகரமாக எழுந்து நிற்கிறது!

நன்றி - நூலகத்திட்டம்



# "அரசாங்கம் அக்கறையாக இருந்திருந்தால் நாட்டின் நெருக்கடியை சமாளித்திருக்கலாம்"!

## மொஹான் சமரநாயக்க

இப்போதெல்லாம் நாட்டு மக்கள் விரக்தியுற்ற மனநிலையில் காணப்படுவதனை பெரும்பாலும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இன்று நாட்டில் என்ன தான் நடைபெறுகின்றது என்பது பலருக்கும் ஒரு பிரச்சினைக்குரிய விடயமாக உள்ளது. இப்பிரச்சினைகளுக்கு தீர்வும் இருக்கின்றது. ஆனால் அவை எவை என்ற தெளிவு எவரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த வினா சமூக, அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து மட்டங்களிலும் வினவப்படுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு சமாதானமான தீர்வு காண்பது குறித்து பெரும்பாலும் பேசப்பட்டாலும், அதற்கான வழிமுறைகள் குறித்து தெளிவான அபிப்பிராயம், சிந்தனை எவரிடமும் இல்லை எனலாம். சமாதானத்தை ஏற்படுத்தும் தெளிவான கொள்கையோ, நிகழ்ச்சித் திட்டமோ எவரிடமும் இல்லை. அதற்கான தெளிவான ஈடுபாட்டையும் எவரிடமும் காணக் கிடைக்கவில்லை.

பொருளாதாரத் துறையை எடுத்துக் கொண்டால், பெரும்பாலும், இருக்கும் சிறிய எதிர்பார்ப்புகளைக் கூட சிதைக்கும் செயற்பாடுகளையே காணக் கூடியதாகவுள்ளது. அதேபோன்று சமூக நிலைமையை எடுத்துக் கொண்டாலும், வடக்கு கிழக்கு மட்டுமன்றி நாட்டின் பிற பிரதேசங்களிலும் சமாதானம் அற்ற, மக்கள் கைவிடப்பட்ட, தனித்து விடப்பட்ட ஒரு சூழ்நிலையே காணப்படுகின்றது.

பொலிஸாரின் கைதுக்குள்ளாகும் நபர்கள் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று குண்டை வெடிக்க வைத்துக் கொல்கின்றனர். வழக்கு விசாரணைகளின் போது குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக ஆஜராகும் சட்டத்தரணிகள் நீதிமன்ற வளாகத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்படுகின்றனர். சட்டத்துக்கு விரோதமாக செயற்படுபவர்கள், அப்பாவி மக்களை வெட்டியும், அடித்தும், துன்புறுத்தியும் கொலை செய்கின்றனர். இவை அனைத்தும் இரகசியமாக செய்யப்படும் காரியங்கள் அல்ல. பொலிஸ் பாதுகாப்புடன் செல்பவர் களைக் கூட வாகனங்களிலிருந்து வெளியே இழுத்து சுட்டுக் கொல்லும் அளவுக்கு குண்டர் களும், பாதாள உலகத்தினர்களும் அதிகரித்து விட்டனர்.

அன்றாட வாழ்க்கை சுமுகமாகவே உள்ளது என்றவாறு தோற்றமளித்தாலும், உண்மையில் மிகவும் பயங்கரமானதும் உறுதியற்றதுமான நிலைமையையே காணக் கூடியதாகவுள்ளது.

இவை அனைத்தையும் கருத்திற் கொண்டு பார்க்கும் போது இங்கு பொருளாதார விடயங்கள் குறித்தும் அவதானத்தைச் செலுத்துவது அவசியமாகவுள்ளது. 2000 மாம் ஆண்டில் மட்டும் டீசல் விலை நான்கு தடவைகள் அதிகரித்துள்ளன. 2000மாம் ஆண்டு ஆரம்பத்தில் டீசல் லீற்றர் ஒன்றின் விலை ரூ.13.20 ஆக இருந்த போதிலும், வருட இறுதியில் டீசல் லீற்றர் ஒன்றின் விலை ரூ.24.50 வரையில் உயர்ந்தது. டீசல் விலை அதிகரிக்கும் போது பிற பொருட்களினதும், போக்குவரத்து செலவுகளினதும் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த இயலாது.

வருடத்தின் மூன்றாவது காலப் பகுதி கோதுமை மாவின் விலை உயர்வுடன் ஆரம்பமானது. கோதுமை மா இந்நாட்டின் அத்தியாவசியப் பொருள் என்பதைப் புதிதாகக் கூற வேண்டியதில்லை. அதேபோன்று திரவ பெற்றோலிய வாயுவின் விலையும் மூன்று முறைகள் அதிகரித்தன. மேலும் காஸ் விலை வெறும் 5, 10 ரூபாவால் அதிகரிக்கவில்லை. 2001மாம் ஆண்டு பிறக்கும் போது 12.5 கிலோ காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை 39 ரூபாவால் அதிகரித்தது, ஷெல் காஸ் நிறுவனத்தின் சர்வாதிகாரம் நிறைவுற்றது, அதற்கு போட்டியாக நிறுவனம் ஒன்று பிரவேசித்துள்ளது என்று தகவல்கள் வந்தன. புதிய நிறுவனத்தின் வரவு காஸ் விலையைக் குறைக்கும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் காணப்பட்டது. ஆனால், சவர்க்கார விலையைப் போன்று காஸ் விலை போட்டி நிறுவனங்களின் வருகையால் குறைந்து விடும் என்பது தவறான அபிப்பிராயமாகி விட்டது.

2000மாம் ஆண்டில் டொலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பிறக்கம் மூன்று முறை நிகழ்ந்தது. மத்திய வங்கி இதனை எப்பெயர் கொண்டு அழைத்தாலும், இது நாணய மதிப்பிறக்கமே தான். மதிப்பிறக்கத்தில் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு.

ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பது நன்று என்றாலும், இறக்குமதிச் செலவுகள் அதிகரிப்பது பொருட்களின் விலையை அதிகரிக்கும். இந்த நட்டத்தை தேவையெனின் இலாபகரமான செயற்பாடாக மாற்றிக் கொள்ளலாம். எனினும் அரசாங்கம் யுத்தச் செலவு அதிகரிப்பையும், உலகச் சந்தையில் எண்ணெய் விலை அதிகரிப்பையும் காரணம் காட்டி பிற பொருட்களின் விலைகளை அதிகரித்து விடுகின்றது.

எதிர்க்கட்சிகள், அரசாங்கம் சிறந்த முகாமைத்துவத்தை கொண்டிராமையும், துஷ்பிரயோகங்கள், ஊழல்கள் காரணமாகவும், அமைச்சர் களின் அதிகரிப்பும் இதற்குக் காரணம் என்று கருத்துத் தெரிவித்துள்ளன. நாம் அவதானிக்கக் கூடிய வகையில் அரசாங்கத்தின் கருத்துக்களைப் போன்றே எதிர்க் கட்சிகளினதும் கருத்துக்களையும் முற்றாக நிராகரித்து விட முடியாது. அரசாங்கம் குறிப்பிடுவதைப் போன்று யுத்தச் செலவுகள் பெருமளவு அதிரித்துள்ளன. 2000மாம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுக்கென 52 பில்லியன்கள் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டன. எனினும் ஆனையிறவு முகாம் இழக்கப்பட்ட பின்னர் இச்செலவுகள் 77 பில்லியன்களாக அதிகரித்தன. இந்தவகையில் யுத்தச் செலவின் அதிகரிப்பு பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையில் செல்வாக்குச் செலுத்துவதைத் தவிர்க்க இயலாது.

உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரிப்பு ஏற்பட்டிருப்பது உண்மையே. 1999 ஒக்டோபர் மாதத்தில் 10 டொலர்களாக இருந்த மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 2000மாம் ஆண்டின் இறுதியில் டொலர் 34 தொடக்கம் 36 வரை அதிகரித்தது. எனினும் அரசுக்கு தெளிவான திட்டம் இருந்திருக்குமாயின், தூர நோக்கான செயற்பாடுகள் இருந்திருக்குமாயின் இந்த விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்திருக்கும். எண்ணெய் விலை ஓரிரண்டு நாட்களில் அதிகரித்து விடவில்லை. எண்ணெய் விலை அதிகரீப்பு குறித்தான எதிர்வுகூறல்கள் குறிப்பிடத்தக்க காலம் வரை காணப்படவே செய்தது. இது பற்றி அரசாங்கம் அவதானமாக இருந்திருந்தால் விலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கலாம். இன்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஊழல்கள் மலிந்த ஒரு நிறுவனமாகியுள்ளது. அது அரசியல்வாதிகளின் ஊழல் பிரதேசமாகி விட்டது. அரசாங்கத்தினது பிற நிறுவனங்கள் மற்றும் பிற செலவுகளை எடுத்துக் கொண்டாலும், அவற்றில் தர்க்க ரீதியான விளக்கங்கள் காணப்படுவதாகத் தெரியவில்லை. முக்கியத்துவத்தின் அடிப்படையில் அரசாங்கத்தின் செலவீனங்களை நிரல்படுத்தும் போக்கும் இல்லை.

அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைத்திருக்கலாம். இதனால் செலவீனங்கள் அதிகரித்தன. மேலும், இதனை ஒரு வகையில் ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகின்றது. மறுபுறம் முகாமைத்துவம் சரியில்லை எனக் கூறும் எதிர்க்கட்சிகளினதும் காலத்திலும் பொருட்கள் சேவைகளின் அதிகரிப்பினால் வறியவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர் என்பதை மறந்து விடக் கூடாது. ஊழல், துஷ்பிரயோகங்கள் அக்காலத்திலும் காணப்பட்டன. உலகச் சந்தையை காரணம் காட்டி பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டன. எவ்வாறாயினும் கடந்த அரசாங்கமும், இந்த அரசாங்கமும் எந்தத் திட்டமிடல்களும், தெளிவான கொள்கைகளும் இன்றி பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

உண்மையில் இவை அரசாங்கத்தின் கொள்கைகள் அல்ல. இவை உலகின் செல்வந்த நாடுகள் அனைத்தும் ஏற்படுத்திக் கொடுத்த திட்டங்களாகும். அதனை நவீன பொருளாதார வியாக்கியானங்களுக்கேற்ப தாராளவாத பொருளாதாரக் கொள்கைகள் எனலாம். ராகவன், சம்ஸ்கி, குருப்மன் போன்ற பொருளியல் விஞ்ஞானிகள் இதனையே "வொஷிங்டன் உடன்படிக்கை" எனக் குறிப்பிட்டுள்ளனர். எம்மால் உலக யதார்த்தத்துடன் முரண்பட முடியாது என்பது உண்மை தான். எனினும் இந்த யதார்த்தங்களை விளங்கிக் கொண்டு எமக்குப் பொருத்தமான முறையொன்றினை தழுவிக் கொள்ள இயலாது என்றில்லை. அவ்வாறன்றி, கண்மூடித்தனமாக புதிய லிபரல் திட்டங்களை பின்பற்றுபவர்கள், பின்பற்றும் நாடுகள் இவ்வாறான மோசமான விளைவுகளையே சந்தக்கின்றன: சந்திக்கப் போகின்றன! ⊖

# தொலைக்காட்சியின் தொல்லையும் அரசின் மெத்தனமும்!

தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் உட்கார்ந்திருப்பவர்கள் யாராவது தங்களுடைய நேரம் பற்றி அக்கறைப்படுவதுண்டா?

தங்களுடைய நேரத்தை முழுமையாக விழுங்குவது மட்டுமல்லாமல், முழுக்க முழுக்க அது தங்களை மூளைச்சலவை செய்து கொண்டிருப்பது பற்றி யாராவது யோசித்ததுண்டா?

வயோதிபர் முதல் சிறியோர்-பாடசாலை மாணவர்கள் உட்பட எல்லோரும் தொலைக்காட்சி முன்னால் மணிக்கணக்கில் உட்கார்ந்திருக்கின்றனர். திரைப்படம், தொலைக்காட்சி, நாடகம், சின்னத்திரை, திரைப்பாடல்கள், விளம்பரங்கள் என்று மாறி மாறி இவற்றைச் சளைத்துப் போகாமல் பார்த்துத் தீர்க்கிறார்கள் இவர்கள்.

இவை குழந்தைகளின் மன வளர்ச்சியிலும் பழக்கவழக்கங்களிலும் பாரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றன. ஏதாவது ஒரு அலைவரிசையில் அத்திபூத்தாற் போல் ஏதாவது நல்ல நிகழ்ச்சி நடந்தாலும், அதை விட்டு அடுத்த அலைவரிசையில் சினிமாவுக்காக ஓடுகிறார்கள் சிறார்கள்.

குழந்தைகள் இந்திய சினிமாத் தமிழின் கீழ்த்தர மொழிக்கும் பாவனைக்கும் பலியாகி வருவது புதிதாக சொல்லப்பட வேண்டிய ஒன்றல்ல.

இங்கே சிங்களப் பத்திரிகையான லக்பிமவில் பிரங்க என்பவர் எழுதிய ஒரு குறிப்பை கீழே தருகிறோம். இந்திய அரசு பற்றி இவர் உயர்வாகப் பேசுவது ஒப்புக் கொள்ள முடியாத ஒன்றென்றாலும், கூட இலங்கை பற்றி அவர் சொல்வது அத்தனையும் உண்மை.

இந்திய அரசும் அமைச்சர்களும் கூட இதைத் தான் செய்கின்றனர். ஆனால் பஷன் நெட்வெர்க்கை அவர் தடை செய்ததிற்கு இந்தியப் பிராமணியப் பண்பாட்டை அது குழப்புகிறது என்பதைத் தவிர வேறு காரணம் இல்லை.

இந்தியப் பிராமணியம் ஏற்கெனவே இந்தியாவை விழுங்கி விட்டது. அவர் காப்பாற்ற நினைத்தது இந்திய மக்களை அல்ல: பிராமணியத்தை. அது இப்போது இலங்கைத் தமிழ் பார்வையாளர்களையும் விழுங்கிக் கொண்டிருக்கின்றது.

நாம் எப்போது தப்பப் போகிறோம்?

பிரங்கவின் குறிப்பு இதோ:-

''பஷன் நெட்வர்க் டெலிவிஷனை கடந்த வாரம் இந்தியா தடை செய்திருந்தது. செய்திகள் குறித்து பொறுப்பு கொண்ட அமைச்சர் ஒருவர் இந்த முடிவை எடுத்திருந்தார். சிங்கப்பூரில் இருந்து ஒளிபரப்பப்படும் இந்த அலைவரிசை பாரதத்தின் பண்பாட்டுக்கும் ஒழுக்கத்திற்கும் சவாலாக விளங்குகின்றது என காரணம் காட்டியே அவர் தடை செய்திருந்தார். இதற்கு முன்னரும் இவ்வாறான இன்னுமொரு அலைவரிசையை இந்திய அரசு தடை செய்திருந்தது.

ஜே.ஆர் ஜப்பானிலிருந்து கொள்வனவு செய்த தொலைக்காட்சி சேவைகள் இன்று எம்மை இருபத்து நான்கு மணி நேரமும் மகிழ்வித்துக் கொண்டிருக்கின்றன. உலகத்தில் வெகுவிரைவில் தொலைக்காட்சி அலைவரிசைகள் பரவிய ஒரே நாடு இலங்கை என அண்மையில் கட்டுரையொன்றில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவைப் போன்று அன்று, இன்று இங்கு பல தொலைக்காட்சி நிறுவனங்கள் தன் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப நடனங்களையும், நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பு செய்து வருகின்றன. இவை பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கவோ, முறைப்பாடு செய்யவோ இலங்கையில் எந்தவொரு அமைப்பும் இல்லை, ஆட்களும் இல்லை.

எவ்வளவு தான் எழுதினாலும், இடித்துரைத்தாலும் பொறுப்பு கூற வேண்டியவர்கள் அமைதியாகவே இருக்கிறார்கள்.

குறிப்பிட்ட அந்த இந்திய அமைச்சர் இலங்கையில் இருந்திருந்தால் நிச்சயம் அனைத்து அலைவரிசை களையும் தடை செய்திருப்பார். ஏனெனில் அவர் தன் நாட்டின் மீது பற்றுக் கொண்டிருக்கின்றார். நாட்டு மக்களின் ஒழுக்கத்தை விரும்புகின்றார்.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது நமது அரசியல்வாதிகளை என்னவென்று சொல்வது? இன்று அமைச்சரவையில் இருக்கும் அமைச்சர்கள் தனது அமைச்சுகளைக் கூட சரியான முறையில் அறியாததாலோ என்னவோ ஜனாதிபதி ஒரே அமைச்சை பல அமைச்சர்களுக்கு பகிர்ந்தளித்துள்ளார். இவ்வாறான வர்களிடமிருந்து நாட்டுக்கான சேவையை எவ்வாறு எதிர்பார்ப்பது?

இவையெலாம் நம் அரசியல்வாதிகளுக்கு நமது நாட்டைப் பற்றியோ, கலாசரத்தைப் பற்றியோ எந்தவித அக்கறையும் இல்லை என்பதையே தெளிவுறுத்துகின்றது. இதனை கடந்த தேர்தல் செயற்பாடுகளின் போது அறிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது.

அப்பாவி இளம்பெண்ணை

⇨ 20

நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு தமிழீழப் போராளியின் கதை -13

## முட்டாள்தனமான தலைமை விசுவாசம் எனக்கு அச்சத்தைக் கொடுத்தது!

ஏறக்குறைய சுமார் 300-450 பேர் வரையில் இருந்த கொட்டிலில் சாப்பாடு சமைப்பதென்பது இலகுவானதொன்றல்ல. சுகாதார வசதிகளை யாரும் கணக்கெடுத்துக் கொள்வதில்லை. சோற்றின் கஞ்சியை வடிப்பதற்கு சாக்கினைப் பயன்படுத்துவர். கஞ்சி வடித்த பின் சாக்கினை கொட்டிலின் மேலோ புல்லின் மீதோ போட்டு விடுவார்கள். அதனில் ஈ, இலையான் முதலியன உட்கார முடியும். அடுத்த நாள் மீண்டும் அந்தச் சாக்கினையே கஞ்சி வடிப்பதற்கு உபயோகிப்பர். இந்தச் சமையல் முறையையும் அதன் கேவலங்களையும் அறிந்து போராளி ஒருவர் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்ததாகக் கூறினார்கள். இரண்டாவது சம்பவம் காலையிலோ இரவிலோ சுண்டல் கடலை சாப்பாடு சம்பந்தப்பட்டதாகும். கடலையில் நாலு தரங்கள் உள்ளன. தரங்குறைந்த புழுத்துப் போன நாலாவது தரமான கடலையைத் தான் எமக்குச் சாப்பாடாகத் தந்தார்கள். நாம் இருந்த கொட்டில்களுக்கு அண்மையில் பலவகையான வீடுகளும் கட்டப்பட்டுக் கொண்டிருந்தன. எமது சாப்பாடுகளும் நாம் விரும்பிய இடங்களில் சாப்பிடக் கூடியதாக இருந்தது. இவ்வாறு கடலையைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு போராளியின் கடலையைப் பார்த்த வீடு கட்டும் கூலித் தொழிலாளியான ஒரு பெண் மாட்டிற்குப் போடும் கடலையை மனிதன் சாப்பிடுகிறானே என்று கவலைப்பட்டு தான் கொண்டு வந்த தோசையை அவருக்குக் கொடுத்ததாகவும் அதைச் சாப்பிட்ட அந்தப் போராளி அந்தக் கதையை எல்லோருக்கும் சொல்ல பலரும் சாப்பிடும் நேரத்தில் சாப்பாட்டினை அந்தக் கூலித் தொழிலாளர்களின் பார்வையில் படக் கூடியதாகச் சாப்பிடத் தொடங்கினர். அவர்களின் நோக்கம் மற்றைய போராளிக்கு நடந்த மாதிரி தங்களை யாராவது கவனிப்பார்களா என்பதாகும். சாப்பிடுவதற்கும் சரி தேநீர் குடிப்பதற்கும் சரி கியூவில் நின்று சிறைக் கைதிகள் போல் சாப்பிட வேண்டியிருந்தது. இதனை தட்டிக் கேட்ட ஒருவரை நாலு நாட்களுக்கு மேல் மலசலகூடத்தில் அடைத்து வைத்திருந்தார்கள்.

### பசியும் பசியைப் போக்க நாம் கையாண்ட தந்திரமும்

நாம் ஈ.பி.ஆர்.எல்.எஃவ் இன் தகவல் நிலையத்திற்கு (ஈ.பி.ஐ.சி.) வாரத்திற்கு ஒரு தடவையாவது சென்று எமது தொடர்புகளை அவர்களுடன் வைத்திருந்தோம். ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையத்திற்கு (EPIC) மத்தியான சாப்பாட்டு நேரம் பார்த்து செல்லத் தொடங்கினோம். அவர்கள் எம்மைக் கண்டவுடன் சாப்பிடச் சொல்லுவார்கள். அவர்களின் சாப்பாடு எமது நிலைமையை விடக் கொஞ்சம் வசதியானது, மற்றும் அவர்களும் எமது நிலைமையை அறிந்து உதவி செய்தார்கள். ஒரு கட்டத்தில் அவர்களும் கஷ்ட நிலையில் கஞ்சி குடிக்கின்ற நிலையில் இருந்தனர். அதற்குப் பின் அவர்களை நாம் கஷ்டப்படுத்தவில்லை. எமக்கு உதவி செய்த அரசியலுக்குச் சம்பந்தமில்லாத இந்தியாவில் படித்துக் கொண்டிருந்த மாண்வர்களையும் நான் குறிப்பிட வேண்டும். சிலர் கல்லூரி அனுமதிக்காகக் காத்துக் கொண்டும் இன்னும் சிலர் கல்லூரியில் படித்துக் கொண்டும் இருந்தனர். அவர்கள் எமது நிலைமையினை அறிந்து எமக்கு சாப்பாடு தந்தார்கள். தற்காலிகமாக தங்குமிட வசதிகளையும் செய்து தந்தார்கள். உதாரணமாக, சிலவேளைகளில் இலங்கை மாணவர்கள் தங்கி இருந்த இடங்களில் ஒன்றான தங்கநல்லூர் பழவந்தாங்கல் பிரதேசங்களில் நாம் போகும் போது என்னுடன் படித்தவர்களோ அல்லது ஊரவரோ என்னைக் கண்டால் தமது இருப்பிடத்திற்கு என்னைக் கூட்டிச் சென்று சாப்பிடச் சொல்வார்கள். ஆரம்பத்தில் இது தற்செயலான சம்பவமாக நடந்தது. என்றாலும் ஒரு கட்டத்தில் நானே இவ்வாறு அவர்களை சந்திக்கக் கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொண்டேன்.

**அவர்களது இரண்டாவது எச்சரிக்கை என்னவென்றால், "எனது அக்காவை வேண்டுமானால் பாலியல் வல்லுறவு செய்யலாம். அதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் சிறி சபாரெத்தினம் அண்ணாச்சியைப் பற்றி எதுவும் கதைக்கக் கூடாது என்பதும் கதைத்தால் நான் உயிருடன் இருக்க முடியாது" என்பதுமாகும்.**

### பயந்தவனைப் பயந்தவன் துரத்தும் கதை

புலிகளிலிருந்து பிரிந்த தோழர்களுக்கு எமது சமையல் முறை சாப்பாட்டின் வகை என்பன ஆரம்பத்தில் பெரிய பிரச்சினையாக இருந்தது. இவர்கள் இதுவரை இவ்வாறான கஷ்டங்களை அனுபவித்திருக்கவில்லை என்பதே அதற்கு ஒரு காரணம். நாம் அவர்களை ஒரு சில வாரங்களுக்குள் எம்மைப் போலச் சமைப்பதற்குப் பழக்கி விட்டோம். இந்தக் கால கட்டங்களில் ஒருநாள் நான் தி.நகர் பகுதியில் மரக்கறிகளை




வாங்கிக் கொண்டிருக்கும் போது என்னை நோக்கி ஒரு ரெலோ உறுப்பினர் வந்தார். அந்த நபர் என் சைக்கிளைப் பிடித்து நிறுத்தும் போது தான் அந்த நபரைக் கண்டேன். அந்த நபருக்கு நான் ரெலோவை விட்டுப் பிரிந்தது தெரியும். நான் நினைத்தேன் இன்றைக்கு எனக்குப் பிரச்சினை தான் என்று. ஆனால் வந்த நபரோ என்னுடன் தனியாகக் கதைக்க வேண்டும் என்றும், தேநீர் கடைக்குப் போய் கதைப்போம் என்றும் சொன்னார். நான் எதுவாக இருந்தாலும் இப்போது வர முடியாது எனவும், நாளை இதே நேரம் சந்திப்போம் எனக் கூறி விட்டு ஒருவாறு தப்பி விட்டேன். அடுத்த நாளிலிருந்து தி.நகர் சந்தைக்குச் செல்லுவதைத் தவிர்த்து விட்டேன். பின்னர் ஒருநாள் மீண்டும் அவரைத் தற்செயலாகச் சந்திக்க வேண்டி நேர்ந்தது. நான் அவரைக் கண்டதும் ஓடவும் அவர் என்னைத் துரத்தவும் ஒருவாறாகத் தப்பி விட்டேன். இதில் உள்ள முக்கியத்துவம் என்னவென்றால் அவர் ரெலோவை விட்டுத் தப்பியோடி தலைமறைவாக வாழ்பவர் என்பதும் அவர் என்னுடன் கதைக்க முற்பட்டது தனக்கு ஏதாவது உதவிகளை நாம் செய்வோம் என்று எதிர்பார்த்தும் தன்னை ரெலோவிடமிருந்து பாதுகாக்க வழியில்லாமல் கஷ்டப்பட்ட நிலையில் தான் என்னைத் துரத்தியதாகவும் சில மாதங்களின் பின்பு தான் நான் அறிந்தேன்.

### மீண்டும் மிரட்டல்

ஒரு சில மாதங்களின் பின்பு ஒரு கடைசி இரவுப் படக்காட்சிக்கு ஒரு நண்பர் எம் எல்லோரையும் கூப்பிட்டார். நானும் மற்றும் புலிகளிடமிருந்து பிரிந்தவர்களுமாக ஒரு 10 பேரளவில் படத்திற்குச் சென்றோம். ரெலோவைச் சேர்ந்த எனது ஊரவர் ஒருவரும் இடைவேளையின் போது என்னை அடையாளம் கண்டு கதைத்தார். அவருக்கு நான் ரெலோவை விட்டுப் பிரிந்தது தெரியும் என்பதாலும் அரசியலைத் தவிர்த்து மற்ற எனது ஊரவர்கள் ரெலோவினுள் இருந்தவர்களைப் பற்றியும் விசாரித்து விட்டு மீண்டும் படம் பார்த்தேன். படம் முடிவடைந்தபின் நானும் மற்றவர்களும் வெளியேறும் போது எனது பெயரைச் சொல்லி என்னை ரெலோவினர் கூப்பிட்டனர். எனவே என்னுடன் வந்த புலியிலிருந்த உறுப்பினர்களை உசார்ப்படுத்தி விட்டு நான் அவர்களை நோக்கிச் சென்றேன். இந்த நேரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃவ் உறுப்பினர்கள் சிலரும் அந்தத் தியேட்டரை விட்டு வந்தனர். அவர்களை எனக்குத் தெரியும் என்பதாலும் நான் ரெலோ உறுப்பினர்களை நோக்கிச் செல்வதைக் கண்டு நிலைமைகளை அவதானித்தனர். காந்தி என அழைக்கப்பட்ட ரெலோவின் உறுப்பினர் என்னை நோக்கிப் பல கேள்விகளைக் கேட்டார். அவரின் கேள்விகள் எதுவும் சரியானதாக எனக்குப் படவில்லையாதலால் எனக்குள் பயம் ஏற்பட்டது. எனினும் எனக்குத் துணையாக புலிகளிடமிருந்து வெளியேறியவர்களும் ஈ.பி.ஆர்.எல்.எஃவ் இன் சில உறுப்பினர்களும் நடப்பதை அவதானித்துக் கொண்டிருப்பதால் ஒரு துணிவு வந்தது. எனினும் நாளைக்கு நான் இதே பக்க பலத்துடன் செல்ல முடியாது. எனவே அவர்களுடன் முரண்படுவதைத் தவிர்த்துக் கொண்டேன். அவர்களின் கேள்விகளுள் முதலாவது, ரெலோ பிழை என்று சொல்லிப் புறப்பட்டீர்கள். பிறகு ரெலோவுக்கு எதிராக வேலை செய்யலாம் தானே? என்றவாறு அவர்களின் பதிலும் அமைந்தது. இதற்கு எனது பதில், நான் அரசியலில் இருந்து ஒதுங்கி விட்டேன் என்பதாகும். அவர்களது இரண்டாவது, எச்சரிக்கை என்னவென்றால் 'எனது அக்காவை வேண்டுமானால் பாலியல் வல்லுறவு செய்யலாம். அதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் சிறி சபாரெத்தினம் அண்ணாச்சியைப் பற்றி எதுவும் கதைக்கக் கூடாது என்பதும் கதைத்தால் நான் உயிருடன் இருக்க முடியாது' என்பதுமாகும். இதைக் கேட்டவுடன் எனக்குச் சிரிப்பு வந்தது. இவ்வாறு பெரிய முட்டாள்தனமாகக் கதைப்பதையும் எச்சரிக்கை செய்வதையும் நான் அதைக் கண்டு பயந்து நடக்க வேண்டும் என்பது போலும் அவரின் எச்சரிக்கை இருந்தது. நான் எதுவும் கூறாமல் திரும்பும் போது மீண்டும் காந்தி இப்ப வேண்டுமென்றாலும் தாம் விரும்பினால் என்னைப் பிடித்துக் கொண்டு போக முடியும் என்றும் பாவம் என்று விட்டு விடுவதாகவும் சொன்னார். இதில் கவனிக்க வேண்டியது: இன்று என்னைப் பிடிக்க முடியாவிட்டாலும் அவர்கள் விரும்பினால் இன்னுமொரு நாள் என்னைப் பிடிக்கலாம் என்பது தான். இது எனது உயிருக்கு மீண்டும் உத்தரவாதம் இல்லாத நிலையைத் தோற்றுவித்திருந்தது. நான் அவர்களின் கடைசி வார்த்தைக்குப் பதில் எதுவும் சொல்லாமலும் அவர்களைத் திரும்பிப் பாராமலும் என்னுடன் வந்தவர்களுடன் வந்து விட்டேன். அன்று நான் வீடு திரும்பும் போது எம்மை நோக்கி வரும் வாகனங்கள் எல்லாம் ரெலோவின் வாகனங்கள் போல எனக்குத் தெரிந்தது. அன்றிரவு முழுவதும் தூக்கமில்லாமலே கழிந்தது. ஒரு பக்கம் அவர்களின் எச்சரிக்கையும், மறுபக்கம் அவர்களின் முட்டாள்தனமான தலைமை விசுவாசத்தினையும் யோசித்துப் பயத்தினால், சிரிக்க முடியாமல் தவித்தேன்.

### புலிகளிடமிருந்து பிரிந்தவர்களுக்குப் புலிகள் கொடுத்த தண்டனை

புலிகளிடமிருந்து வெளியேறியவர்களைப் பற்றிச் சிலவற்றைக் கூறவேண்டும். வெளியேறியவர்களில் ஒரு சிலரே எம்முடன் அரசியல் வேலைகள் அரசியல் நிலைமைகள், இயக்கங்களில் உள்ள நிலைமைகள் என்பவற்றைப் பற்றிக் கலந்துரையாடுவார்கள். ஒரு சிலர் எதைப் பற்றியுமே கதைப்பதில்லை. அவர்களை நீங்கள் ஏன் வெளியேறினீர்கள்? உங்களுக்கும் தலைமைக்கும் உள்ள பிரச்சினைகள் என்ன? என்று கேட்டதற்கு, அதற்குப் பதில் பிரபாவின் கலியாணம் போன்றவை பிரச்சினைகளாகவும் தாம் ஹோர்லிக்ஸ் கேட்டதாகவும் அவர்கள் பூஸ்ற் (Boost) தந்ததாகவும் கூறினர். இவ்வாறு அரசியல் ரீதியாகக் கதைப்பதை அவர்கள் தவிர்த்தார்கள். அதற்குக் காரணம் ஒன்று அரசியல் தெரியாதது. மற்றது பிரச்சினைகளைக் கதைத்தால் தமக்கு ஏதாவது நடக்கலாம் என்ற பயமாகக் கூட இருக்கலாம். இதில் பலர் வெளிநாடுகளுக்கு போவதற்குரிய ஏற்பாடுகளையும் சிலர் புதிய ஸ்தாபனம் அமைப்பது பற்றியும் வேலை செய்வது பற்றிய நிலையிலும் இருந்தனர். இந்த நிலையில் அரசியல் வேலை செய்ய முற்பட்டவர்கள் ஒரு பகுதியாகவும் வெளிநாடு செல்வதற்கு இருந்தவர்கள் மறுபகுதியாகவும் வேறு இடங்களுக்கு மாறி விட்டனர்.

இவ்வாறு வேலை செய்ய முடிவு செய்தவர்களில் ஒருவர் வேதாரண்யத்தில் புலிகளினால் பிடிக்கப்பட்டு பொட்டம்மான் என்பவரின் பொறுப்பின் கீழ் விடப்பட்டு அடித்துச் சித்திரவதை செய்யப்பட்டார். அதாவது உழன்றி ஒன்றில் அவரைக் கட்டிப் பாறைகளின் மேல் அடிபட விடுவதும் எடுப்பதுமாகவும் சித்திரவதை செய்யும் போதே அவர் உயிரை விட்டார். இந்த நிகழ்ச்சியானது எமக்குப் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியது.

*தொடரும்*

ஜீவமகன்

யாழ் பல்கலைக்கழக பொங்கு தமிழ் எழுச்சி விழா

# படையின் தடையையும் மீறி நடந்தேறியது!

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களை 'தாம் திறந்த வெளிச் சிறைச்சாலையில்' வைத்திருப்பது போன்றே வைத்துள்ளோம் என்பதை இராணுவத்தினர் உலகிற்கு மீண்டுமொருமுறை எடுத்துக் காட்டியுள்ளனர். தமிழர் மீது தமது துப்பாக்கிகள் திரும்பும் என்பதை படைத்தரப்பு தெட்டத் தெளிவாக தெரிவித்திருப்பதை யாழ். பல்கலைக்கழக சமூகம் ஒழுங்கு செய்த "பொங்கு தமிழ்" நிகழ்விற்கு தடை விதித்ததன் மூலம் வெளிக்காட்டியுள்ளனர்.

கடந்த ஜன 17ம் திகதி யாழ். பல்கலைக்கழக சமூகம் தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளியுலகிற்கு வெளிக்காட்டும் ஒரு நிகழ்வாக "பொங்கு தமிழ்" என்னும் ஒரு நிகழ்வை நடாத்தியது. இதில் யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து மக்களும் ஓரணியில் திரண்டு தமிழ் மக்களின் அபிலாசை, சுயநிர்ணய உரிமையே என்பதை வெளி உலகிற்கு வெளிப்படுத்தும் நிகழ்வாகவே இந் நிகழ்வு நிகழவிருந்தது.

ஆனால், யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டினை முன்பே அறிந்த படைத்தரப்பு அவ்வாறான ஒரு நிகழ்வில் பொது மக்கள் கலந்து கொண்டு தமது அபிலாசைகளைத் தெரிவிப்பார்களேயானால் அது வெளி உலகிற்குத் தெரியவர, இதனால் தம்க்கு பல்வேறு நெருக்குதல்கள் ஏற்படும் என்பதனால் அந்நிகழ்விற்கு பொதுமக்கள் கலந்து கொள்வதனைப் பெரும் பிரயத்தனப்பட்டுத் தடுத்து, யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆட்சியே நடக்கின்றது என்பதை நிரூபித்துள்ளளது.

இந்த 'பொங்கு தமிழ்' பற்றி பல்கலைக்கழக மாணவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று மக்கள் மத்தியில் கடந்த மூன்று கிழமைகளாக பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இதனை அறிந்த படைத்தரப்பின் 511வது பிரிவின் கட்டளை அதிகாரி பல்கலைக்கழக மாணவர் தலைவர்கள் சிலரைக் கூப்பிட்டு எச்சரித்திருந்தார். எவ்வாறெனில், பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் சார்பானவர்கள் தான். இவ்வாறான போராட்டத்தை நீங்கள் நடத்த விரும்பினால், நீங்கள் மட்டும் நடத்துங்கள். பொது மக்களை இதற்குள் சேர்க்காதீர்கள். உங்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை. அவ்வாறு இதையும் மீறி நடத்தினால் மக்கள் வருவதை நாம் தடை செய்வோம் எனவும் கூறியிருந்தார். அவர் இதனைக் கூறி ஒரு சில தினங்களில் வடபகுதிக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா இந்நிகழ்விற்கு அனுமதி வழங்க முடியாது எனப் பகிரங்கமான அறிக்கை விட்டிருந்தார். அதற்கு அவர் கூறிய காரணம் இது ஒரு புலிசார்பு பிரச்சாரம் என்பதால் இது மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதாகும்.

ஆனால் பல்கலைக்கழக சமூகத்தின் இந்நிகழ்விற்கு யாழ்ப்பாணத்திலுள்ள 47 மனித உரிமை அமைப்புகளும் தமது ஆதரவினைத் தெரிவித்துள்ளன. கூடவே இந்து, கிறிஸ்தவ மதத் தலைவர்கள், மற்றும் கல்வியாளர்களுடைய ஆதரவும் இதற்குக் கிடைத்தது. இதனால் வெகுண்ட இராணுவத் தரப்பு இதனை எப்படியாவது குழப்புவது என்னும் கங்கணத்துடன் களத்தில் இறங்கியது. இதற்கு ஆதரவாக அரசுடன் இணைந்துள்ள தமிழ்க் கட்சியான ஈ.பி.டி.பியும் இணைந்து கொண்டது. அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமும் புனரமைப்பு அமைச்சுப் பதவியில் இருப்பவருமான டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை அதிபர்கள் அனைவருக்குமான ஒரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தார். இதில் அவர் உரையாற்றுகையில் சுயநிர்ணய உரிமை எங்களுக்குத் தேவை தான். ஆனால், இதைக் கேட்பவர்களின் முகத்திரையை நாம் கிழித்துப் பார்க்க வேண்டும். எனவே இவர்களுககு நீங்கள் யாரும் ஆதரவினை அளிக்கக் கூடாது எனக் கூற, கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரு அதிபர் எங்களுக்குத் தேவை சுயநிர்ணய உரிமையே. அதை யார் கேட்டாலும் அதற்கு நாம் ஆதரவு அளிப்போம் எனக்




கூற வாயடைத்துப் போய் எதிர்ப்பிரச்சாரத்தை கை விட்டார் அமைச்சர். ஆனால், அக்கட்சி அத்துடன் நிறுத்தவில்லை. "சுதந்திர மாணவர் வட்டம்" என உரிமை கோரும் ஒரு துண்டுப் பிரசுரம் மூலம் எழுச்சி நிகழ்வை முன்னெடுக்கும் முக்கியஸ்தர்களுக்குக் கடிதம் அனுப்பியதுடன் அரச நிறுவனங்கள், திணைக்களங்களில் வேலை செய்வோருக்கு இவ் எழுச்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டாம் எனவும் துண்டுப் பிரசுரம் அனுப்பியிருந்தார்.

ஆனால், மக்களின் உணர்வலைகள் இவற்றை எல்லாம் முறியடித்துவிட நேரடியாகப் பொலிசார் களத்தில் இறங்கினர். இந்த பொங்கு தமிழ் நிகழ்வில் பொது மக்கள் யாரும் கலந்து கொள்ள வேண்டாம் என்றும், அவ்வாறு கலந்து கொண்டால் தடியடி, கண்ணீர் புகைக்குண்டு, துப்பாக்கிப் பிரயோகம் என்பன மூலம் தாம் அதை கலைக்க இருப்பதாகவும், இதற்கென விசேட பயிற்சி பெற்ற பொலிசார் கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்டிருப்பதாகவும், உதயன் பத்திரிகையில் பகிரங்க அறிக்கை ஒன்றினை பொலிஸ் தரப்பு விடுத்திருந்தது. ஆனால், மாணவர்கள் இதையெல்லாம் சட்டை செய்யாமல் தமது பிரச்சார வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். இதனால் ஆத்திரமடைந்த படைத்தரப்பு மாணவர்களுடன் நேரடியாக முரண்படத் தொங்கியது. மாணவர்கள் பொங்கு தமிழ் பற்றிய துண்டுப் பிரசுரம் கொண்டு சென்றால், அவற்றைப் பறிமுதல் செய்ததுடன் அவற்றைக் கொண்டு செல்லும் மாணவர்களின் அடையாள அட்டைகளும் பறிமுதல் செய்யப்பட்டன. அத்துடன் காவலரண்களில் மாணவர்கள் பல மணி நேரம் தடுத்தும் வைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவங்களினால் மாணவர்கள் உத்வேகமடைந்தனரே ஒழிய சோர்ந்து விடவில்லை. இதனால் படைத்தரப்பு கடந்த ஜன.14ம் திகதி முதல் பல்கலைக்கழக வளாகத்தைச் சுற்றியுள்ள வீதிகளில் இராணுவத்தினர், பொலிசாரைக் குவித்ததுடன், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்களைத் தவிர்த்து எவரையும் அவ்வீதிகளில் செல்ல அனுமதிக்கவில்லை. இதன் மூலம் மக்கள் பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொள்வதை நேரடியாகவே தடுக்க படைத்தரப்பு முனைந்தது. அத்துடன் நிற்கவில்லை. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திற்கு (UTA) நேரடியாகப் பல மிரட்டல்களையும் விடுத்தது. அதாவது பொங்கு தமிழ் நிகழ்வில் பொது மக்களைக் கலந்து கொள்ள வேண்டாம் எனப் பத்திரிகைகளில் அறிவிக்குமாறே அந்த மிரட்டல் அமைந்தது. இதனால் பயந்துபோன UTA 14ம் திகதி மாலை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் "பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்நிகழ்வில் பொது மக்களைக் கலந்து கொள்ள வேண்டாம்" என்ற கருத்துப்படும்படியான ஓர் அறிக்கையினை பத்திரிகைக்கு விடும்படி வற்புறுத்தியதுடன், அவ்வாறு அறிக்கை விடாத பட்சத்தில் தாம் இதிலிருந்து விலகுவ்தாகவும் எச்சரித்திருந்தது. 15ம் திகதி மாலை உதயன் பத்திரிகைக்கு "பாதுகாப்புக் காரணங்களுக்காக பொதுமக்களை வரவேண்டாம்" எனக் கூறப்படும் அறிக்கையைக் கொடுக்க மாணவர் ஒன்றியம் முன்வந்தது. ஆனால், மாணவர்கள் எல்லோரும் இதை ஆட்சேபித்ததுடன் இவ்வாறு அறிக்கையானது கொடுக்கப்பட்டால் அது எமது மக்களின் உணர்வலைகளை மழுங்கடித்து விடும் எனத் தெரிவித்ததால் அந்த அறிக்கையை மாணவர் ஒன்றியம் கொடுக்காமல் விட்டது. இதனால் வெகுண்ட UTA அப்படி ஒரு அறிக்கை கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால், தாம் எழுச்சி நிகழ்விலிருந்து விலகப் போவதாக மீண்டும் எச்சரித்தது. இதனால் எழுச்சி நிகழ்விலிருந்து UTAஐ விலக விடக்கூடாது என்ற ஒரே நோக்கத்திற்காக மாணவர்களின் விருப்பமின்றியே 16ம் திகதி மாலை உதயன் பத்திரிகைக்கு பாதுகாப்புக்' காரணங்களுக்காக எழுச்சி நிகழ்விற்கு வர வேண்டாம்" எனப் பொருள்படும் அறிக்கையினை மாணவர் ஒன்றியம் கொடுத்தது.

இது இவ்வாறிருக்க பல்கலைக்கழகத்தினுள் ஒலி பெருக்கி, பிரசுரங்கள், பதாகைகள் கொண்டு செல்ல படையினர் தடை விதித்தனர். இதனால் மாணவர்கள் இவற்றை வீடுகளுக்குள்ளால் களவாக கொண்டு வந்து சேர்த்தமை குறிப்பிடக்கூடியது. அத்துடன் 15ம் திகதி மதியம் பல்கலைக்கழக மதில்களில் பொங்கு தமிழ் பற்றிய சுவரொட்டிகளை மாணவர்கள் ஒட்டியபோது படையினர் அவற்றை மாணவர்களிடம் அகற்றுமாறு கூற, மாணவர்கள்

⇨

## பொங்கு தமிழ் எழுச்சி விழா பிரகடனம்!

இங்கு கூடியிருக்கும் நாம் எல்லோரும் ஒருமித்து எமது உள்ளத்தின் குரலாய் வெளிப்படுத்துவது:

இலங்கை அரசாங்கம் இந்த அழிவுத் தன்மை வாய்ந்த ஆபத்தான யுத்தத்தை உடனடியாக நிறுத்தி, நியாயமாதும், அர்த்தமுள்ளமானதுமான ஒரு பேச்சுவார்த்தையை புலிகளுடன் ஆரம்பிக்க வேண்டும்.

இந்தப் பேச்சுவார்த்தையின் ஊடாக காணப்படும் அரசியல் தீர்வு, தமிழ் மக்களின் அபிலாசைகளை பின் வரும் கோட்பாடுகளை அங்கீகரிப்பதன் அடிப்படையில் திருப்தி செய்வதாக அமைய வேண்டும்.

1. தமிழ்த்தேசியவாதம்
2. பாரம்பரிய தமிழ்த் தாயகம்
3. சுயநிர்ணய உரிமை.

எமது மக்களின் உணர்வுகள் நீண்டகால அடக்குமுறை காரணமாக உறைந்துபோய் உள்ளன. எமது மக்களின் சத்தியமான உணர்வுகளையும், அபிலாசைகளையும் தயவு செய்து ஒரு தெளிவான தூரநோக்குடன் புரிந்து கொள்ளுங்கள். அதன் மூலம் எமது வாழ்க்கைக்கு முழுமையான பிரக்ஞையுடன் நியாயமானதும், நிலையானதுமான தீர்வை காண்பதற்காக குரல் கொடுங்கள்.

## பேச்சுவார்த்தைக்கு அரசை நிர்ப்பந்தியுங்கள்!

### வவுனியா கிராமிய பண்பாட்டு அரங்கக்குழ கோரிக்கை

யாழ் பல்கலைக்கழக சமூகத்தின் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவாக வவுனியா வளாக சமூகமும், கல்வியியல் கல்லூரி மாணவர்களும் புதனன்று பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வை மேற்கொண்டிருந்தார்கள்.

இதனையொட்டி துண்டுப்பிரசுரம் ஒன்று வவுனியா கிராமியப் பண்பாட்டு அரங்கக் குழுவினால் வெளியிடபட்டுள்ளது.

அத்துண்டுப் பிரசுரத்திலிருந்து சிலபகுதிகள்:

'தமது இருப்பைத் தொலைத்துவிட்டு இன்று நடைப்பிணங்களாய் முகாம்களுக்குள் முடங்கியுள்ள தமிழ் மக்கள் அங்கு எதுவித குளையுமின்றிச் சந்தோஷமாக வாழ்வதாக அரசு பொய்ப்பிரசாரம் செய்து உலகெங்கும் உதவி கேட்டுப் போர் புரிகின்றது.

'விடுவிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் பிரதேசங்களில் தமிழ் மக்கள் பயமே வாழ்வாகி உறைந்து போயுள்ளனர்.

'இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் தமிழ் மக்கள் இன்றும் சுதந்திரமாகவே வாழ்கிறார்கள் என்ற உண்மையை இந்த உலகம் இன்னும் முழமையாகப் புரிந்துகொள்ளவில்லை. 'வவுனியாவில் இருந்து வன்னிக்குச் சென்றுவர விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் வரலாற்றில் பறை படிந்தவை. அரச அதிகாரிகள் தராசு வைத்திருந்து எடைபார்த்து பாருட்களை அனமதிக்கும் காரியம், நாளை தமிழ் மனிதர்களை எடைபார்த்து அனுமதிக்கும் கைங்கதியமாக மாறப்போகும் அபாயத்தை யார் தடுப்பது?

'தெற்கிலும் வடக்கிற்கும் இடையில் கடவுச்சீட்டுக்கும் கடினமா அனுமதிப்பத்திர (Pass) நடைமுறையை அமுல்படுத்தும் அரசு தமிழர் தம் உணர்வுகளை அங்கீகரிக்கமட்டும் ஏன் தயங்குகின்றது?

'தமிழ் மக்கள் எல்லோரும் தங்களது சுயநிர்ணய உரிமை பற்றிய அபிலாஷைகளை பகிரங்கமாக வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டனர் என்ற உண்மையை அசியல் சக்திகளும் சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

'நீண்டகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து இந்தத் தேசத்தை அழிவுப்பாதையில் இருந்து மீட்டெடுக்க வேண்டும் என்ற எண்ணம் உண்மையிலேயே அரசுக்கு இருக்குமென்றால், இந்த நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். யுத்த கோஷங்களோடும் இனவாத பேதங்களோடும் முழக்கமிடுவது பிரச்சினைத் தீர்வுக்கு வழியல்ல.

'விடுதலைப்புலிகள் அறிவித்திருக்கும் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை நல்ல சகுனமாய் பயன்படுத்த முயற்சிப்பது தான் பொறுப்பு வாய்ந்த அரசின் கடமையாகும்.

சர்வதேச சமூகத்திடம் தமிழ் மக்கள் இன்று ஒரு முக்கிய விடயத்தை வேண்டி நிற்கின்றார்கள். இந்த நேரத்தில் அந்த வேண்டுதலை நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கும் உண்டு. அந்த வேண்டுதல் மிகத் தெளிவானது

விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பைப் பயன்படுத்தி உடனடிப் பேச்சுவார்த்தையில் இறங்க இலங்கை அரசை சர்வதேச சமூகம் அழுத்த வேண்டும் என்று வேண்டுகின்றோம். தமிழர் தம் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக்கூடிய ஒரு தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்காக அரசை நிர்ப்பந்திக்க வேண்டிய பொறுப்பை சர்வதேச சமூகம் சரவரச் செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றோம்.

இவ்வாறு அந்த துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்



அதை மறுக்க படையினருக்கும் மாணவர்களுக்குமிடையே வாய்த் தர்க்கங்களும் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து பொங்கு தமிழ் பற்றி சிங்கள மொழியில் அமைந்த துண்டுப் பிரசுரங்களை மாணவர்கள் படையினருக்கு வழங்கியும் இருந்தனர். படையினரின் நேரடியான மற்றும் மறைமுகமான பல தடைகளையும் அழுத்தங்களையும் மீறி கடந்த 17ம் திகதி பொங்கு தமிழ் நிகழ்ச்சி நடைபெற்றுள்ளமை இங்கு குறிப்பிடக்கூடியது.

17ம் திகதி காலை பல்கலைக்கழக முன்றல் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு அங்கு புரட்சிப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால், படையினர் பல்கலைக்கழகத்திற்கு செல்லும் சுமார் நான்கிற்கு மேற்பட்ட வீதிகளையும் முட்கம்பிகளைக் கொண்டு தடை செய்திருந்ததுடன், பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் விரிவுரையாளர்கள், ஊழியர்கள் தவிர எவரும் அனுமதிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டனர். ஆனால், உணர்ச்சிபூர்வமான பல நூற்றுக் கணக்கான பாடசாலை மாணவர்களும், வெளி ஆட்களும் வீதிகளைப் பாவிக்காமல், உள் வீடுகளுக்குள்ளால் மதில்களைத் தாண்டி பெரும் சிரமத்தின் மத்தியிலும், மைதானத்தில் திரண்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. மைதானத்தில் ஆயிரக் கணக்கானோர் குழுமியிருந்ததையும் காணக் கூடியதாக இருந்தது. அத்துடன் வீதி வழியாக வந்த பல நூற்றுக் கணக்கான பாடசாலை மாணவர்கள், பொது மக்கள், மதகுருமார், பொலிசாரினால் உள்ளுக்குள் விடாமல் வீதிகளில் மறித்து வைக்கப்பட்டிருந்தனர்.

பொங்கு தமிழ் நிகழ்வானது காலை 10.30மணிக்கு ஆரம்பமாகியது. இதில் ஆசியுரையை துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்தினார். இவர் தன் உரையில் இவ் எழுச்சியானது தொடர்ந்து நடைபெற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக சமூகத்தைச் சேர்ந்த பலரும் அபிலாசைகள் பற்றிய தமது உரையினை நிகழ்த்தினர். அத்துடன் சுவிஸ் சூரிச்சில் இயங்கும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் மாணவர் அமைப்பு அனுப்பிய அறிக்கையும் வாசிக்கப்பட்டது. இடையிடையே பல்கலைக்கழக சமூகத்தால் இயற்றப்பட்ட பாடல்கள் இசைக்கப்பட்டன. அத்துடன் யாழ் மக்கள் திறந்த வெளிச் சிறையில் இருப்பதைச் சித்திரிக்கும் நாடகம் ஒன்றும் இடம் பெற்றது. இதில் கலந்துகொண்ட மாணவர்கள், மக்கள் அனைவரும் தமது வாய்களுக்கு கறுப்பு பட்டி அணிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழக சமூகத்தால் பாடப்பட்ட கவிஞர் சேரனின் பாடல் பின்வருமாறு அமைந்திருந்தது.

துயரத் தாமரை படிந்த முகங்களை
தாங்கிய காலங்கள் - நாம்
தாங்கிய காலங்கள்
தொடரும் என்னும் துணிவே வளரும்
இதயம் நமதாகும்.
கொடுமைச் சிறைகள் உயிரைக் குடித்த
கதைகள் மறப்போமா - துயர்
கதைகள் மறப்போமா
உருகித் திரியில் எரியும் மெழுகின்
ஒளியாய் திகழ்வோமே - நாம்
ஒளியாய் திகழ்வோமே...
தீயே பரவும் தேசம் மீது பாசம் எழுகிறது.
நம் பாசம் எழுகிறது.
விழி மூடும் வரையில் வாழும் துடிப்பில் வார்த்தை அலைகிறது.
நம் தேசம் மலர்கிறது...

எனத் தொடர்கின்றது அப்பாடல். அதனைத் தொடர்ந்து சுமார் 12.00 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்திலுள்ள பரமேஸ்வரன் கோயில் மணி ஒலிக்கவிடப்பட அங்கு குழுமியிருந்தவர்கள் அனைவரும் தமது அபிலாசைகளை ஒருமித்த குரலில் "தமிழ் தேசிய இனம், மரபு வழித் தாயகம், சுயநிர்ணய உரிமை" ஆகியன அடங்கிய ஓர் அரசியல் தீர்வையே நாம் விரும்புகின்றோம் என உரத்துக் குரல் கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து பொங்கு தமிழ் நிகழ்வுகள் 1.30 மணிக்கு நிறைவுற்றன. ஆனால், நிகழ்வில் கலந்துகொண்ட பல பாடசாலை மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகள் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. இருந்த போதும், மாணவர் ஒன்றியத் தலைவர் பொலிசாருடன் கதைத்ததைத் தொடர்ந்து, காற்றுகள் அற்ற நிலையில் துவிச்சக்கர வண்டிகள் திருப்பி ஒப்படைக்கப்பட்டன. அத்துடன் வீதிகளில் மறித்து வைக்கப்பட்டிருந்த மாணவர்களும் பொலிசாரால் விடுவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவென வடமராட்சியிலிருந்து வந்த பல பல்கலைக்கழக மாணவர்கள் பின் விடுவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான பல தடைகளையும் தாண்டி பொங்கு தமிழ் நிகழ்வின் மூலம் யாழ் சமூகம் தமது அபிலாசைகளை வெளி உலகிற்கு தெரிவித்தது மெச்சக்கூடிய ஒன்றே ஆகும்.

நிகழ்வு முடிந்து வீதியால் சென்று கொண்டிருந்த மாணவர்கள் பாடிய பாடல்கள் நிகழ்வு முடியவில்லை உண்மையில் இப்போது தான் ஆரம்பித்திருக்கிறது என்பதனை வெளிப்படுத்தி நின்றது.

– சரிதன்

கிழக்குப் பல்கலைக்கழகம்:

# நசிந்தினிக் கிடக்க மாட்டோம்! நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்!!

பல்கலைக்கழகம் ஒட்டு மொத்த சமூகத்தின் உணர்வு மையம் என்பதை பொங்கு தமிழிற்காய் பொங்கி கொண்டிருந்த உணர்வுகளின் அகவெளிப்பாட்டில் இருந்து நாம் காணக்கூடியதாக இருந்தது. சில சுயநலவாதிகளுக்கு பல்கலைக்கழகம் என்பது பதுங்கு குழியாக இருந்தாலும் கூட ஒடுக்கப்பட்ட உள்ளங்களின் உள்ளக்கிடக்கைகளை வெளிக்கொணர்வதற்கான களமாகவும் பல்கலைக்கழகம் இருக்கத்தான் செய்கின்றது.

இதனைக் கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், யாழ் பல்கலைக்கழகத்திலும் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வுகள் கோடிட்டுக் காட்டியுள்ளன. பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பல்கலைக்கழக சமூகமும் தமது உள்ளக் கிடக்கைகளை வெளிக்கொண்டு வந்துள்ளது.

தமிழ் மக்கள் நிரந்தர சமாதானம் நிலவும் சூழலில் அமைதியாக வாழ விரும்புகின்றார்கள். அந்த சமாதானம் அவர்களது அபிலாசைகள் அங்கீகரிக்கப்படுவதனூடாகவே அடையப்படவேண்டும். நீண்டகால ஒடுக்குமுறை வாழ்வின் காரணமாக பயத்தால் உறைந்து போய் நடைப்பிணமாக வாழும் தமிழ் மக்கள் தமது உண்மை உணர்வை அபிலாசைகளை வெளிக்காட்டாமல் அல்லது மறந்துபோய் வாழ்கின்றார்கள் என்ற தொனிப்பட அச்சமூகத்தின் வெளிப்பாடுகள் அமைந்திருந்தன.

சமாதானம், அரசின் யுத்தநிறுத்தம், சுயநிர்ணய உரிமை என்ற மூன்று அம்சங்களின் அடிப்படையிலேயே இப் பொங்கு தமிழ் நிகழ்ச்சி இடம் பெற்றது. இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருடைய வெளிப்பாடுகளும் தமிழ் மக்களினுடைய அபிலாசை சுயநிர்ணய உரிமை என்னும் தாகத்தை மிகவும் ஆணித்தரமாக பறைசாற்றி நின்றன.

பல்கலைக்கழகத்துக்கு வெளியே கழுகுக்கண்களுடன் நோட்டமிட்டு கொண்டிருக்கும் இராணுவத்தினர் ஒருபுறம், இதை விரும்பாதவர்கள் மறுபுறம் நிற்க தொடர்ந்து எதற்கும் அஞ்சாமல் கருமமே கண்ணாயிருந்து சொல்ல வேண்டியதைச் சொல்லித்தான் போட்டார்கள். 'அரசே யுத்தத்தை நிறுத்து', 'தமிழ் மக்களின் அபிலாசை, சுயநிர்ணய உரிமை, எங்களுக்கு வாழும் உரிமை வேண்டும்' என்ற பதாதைகளை தாங்கிய வண்ணம் கறுப்புத் துணிகளை கட்டிக் கொண்டும் கோசங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர். இராணுவத்தினர் ஒலிபெருக்கியை நிப்பாட்டச் சொல்லியும் அதையும் ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு செயற்பட்டனர்.

தொடர்ந்து 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்று தொடங்கும் பாரதியின் பாடலுடன் மாணவர்களின் உள்ளக்




கிடக்கைகளை கொட்டினர். பல்கலைக்கழக சமூகத்தை சேர்ந்த மாணவியொருவர் "இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன என்னும் மனநிலைக்கு இன்று எம்மில் பலரை போரின் கொடூரம் இட்டுச்சென்றுள்ளது. அத்தகையதா எமது இனம். இன்று போய் நாளை வா எனப் பேராண்மை கொண்டது தமிழினம்" என்று தன் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தினார்.

அம்மாணவி மேலும் சொல்கையில் இந்த பூமித்தாய் முட்கம்பிகளால் கீறப்பட்டு இரத்தக் கறை படிந்து போயுள்ளதால் இந்தப் போரில் நாம் இழந்தது கொஞ்சநஞ்சமல்ல. உயிர்கள் உடமைகள் உறவுகள், உணர்வுகள் கூடத்தான். பிஞ்சுகள் பிறக்கும் போதே ஷெல்லடியோசையில் தான் கண்விழிக்கின்றனர். அவர்கள் தாலாட்டில் தூங்கவில்லை துப்பாக்கி வேட்டில்தான் தூங்குகின்றார்கள். அதனால், இந்த போரின் கொடூரங்கள் இனிமேலும் வேண்டாம் என்கின்றோம் என ஆக்ரோசமாகக் கூறினார்.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவரும் பேரினவாதத்தின் பார்வையில் அடிமைகளாகவே நோக்கப்படுகின்றோம். படித்த புத்திஜீவிகள் தொடக்கம் பாமரர் வரை பேரினவாதத்தின் பார்வைக்கு அடிமைகளாகவே பார்க்கப்படுகின்றோம் என மாணவர் ஒருவர் குறிப்பிட்டார்.

இந்த மாணவன் குறிப்பிட்டது போன்று தமிழ் மக்களுக்கு வாழும் உரிமை கூட மறுக்கப்பட்டு அரசியல் அநாதைகளாக்கப்பட்டு, கொடுக்கின்றதை வேண்டி வயிற்றைக் கழுவும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். 'இம்' என்றால் வனவாசம். 'ஏன்' என்றால் சிறை வாசம் என்ற சூழ்நிலையில் எமது தமிழ் மக்கள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலைமைக்கு எம் மத்தியில் காணப்படும் அரசியல் மலட்டுத்தன்மையும் பகுத்தறிவற்ற தன்மையுமே காரணமாகும். இவ்வாறான ஒரு நிலைமையை தம்மைப் புத்திஜீவிகள் என அடையாளம் காட்டிக் கொள்பவர்கள் உருவாக்கி வருகின்றார்கள் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. இவர்களைப் பொறுத்தமட்டில் இவ்வாறான மக்கள் எழுச்சிப்பட்ட நிலைமைகள் வேலையில்லாதவன் செய்கின்ற




வேலையெனக் கருதுகின்றார்கள்.

இவர்களுடைய பாணியைச் சொல்லப்போனால் 'வைக்கோற் பட்டறையில் ஏறிய நாய்கள் மாதிரி' - அதாவது தானும் தின்பதில்லை, தின்னவரும் மாட்டையும் விடுவதில்லை - என்று சொல்வதில் எந்த பிழையும் இருக்காது.

இன்று வடக்கு கிழக்கிலுள்ள சகல மாணவ சமூகமும் தங்களுடைய சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளது. ஆனால், இராணுவத்தினர் 'இவ்வாறான போராட்டங்களில் ஈடுபட்டு அரசை போர் நிறுத்தத்துக்கு வற்புறுத்தினால்' அரசுக்கு எதிராகச் செயற்பட்ட குற்றவாளியாகி விடுவீர்கள் என்று மிரட்டியுள்ளனர். இந்த நிலையில் நமது மக்கள் பிரதிநிதிகள் என்ன சொல்லப் போகின்றார்கள் என்பதுதான் தெரியவில்லை.

உண்மையில் அவர்கள் சொல்லப்போவது தமிழ் மக்களுடைய விருப்பங்களைச் சொல்வது நியாயமானது அல்லது நியாயமில்லை என்ற இரண்டிலொன்றைத்தான். ஆனால், இன்று இவர்களில் பலர் மௌனவிரதம் கடைப்பிடிக்கின்றார்கள். இவர்கள் எல்லோரும் திரைமறைவில் தமிழ் தேசியத்துக்கு விலை பேசுகிறவர்கள்.

மட்டக்களப்பைப் பொறுத்தமட்டில் அண்மைக்காலமாக மக்கள் மத்தியில் இயங்கு நிலை ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. இது வளமான முறையில் வழிப்படுத்தப்பட வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமை. இந்நிலைமை கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் தொடரப்பட வேண்டும். மாணவர்கள் என்பவர்கள் பள்ளிப் பாடத்தை மட்டும் படித்தால் போதாது பகுத்தறிவுக்காக சமூகத்தையும் படிக்கத்தான் வேண்டும்.

ஆனால், இன்றைய மாணவ சமூகத்தைப் பொறுத்தமட்டில் சமூகத்துக்குள் தாங்கள் நுழைவதற்கான ஏணியாகவே பல்கலைக்கழகத்தைப் பார்க்கின்றார்கள். கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தமட்டில் பல்கலைக்கழகத்துக்கும் சமூகத்துக்குமான தொடர்பு என்பது மிக மிகக் குறைவென்றே சொல்ல வேண்டும். இதில் மாணவர்களைக் குறை கூறுவதில் எந்தவித அர்த்தமும் இருக்காது. அவர்களை வழிநடத்துபவர்களிலேயே தங்கியுள்ளது. விடுதலை என்பது வெறுமனே ஆயுதம் தூக்கி போராடுவது மட்டும் தான் என்றில்லை அதற்கப்பால் விவேகம் கூட அடிமைத்தனத்தில் இருந்து விடுதலையடையச் செய்யும்.

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்ச்சியின் இறுதியில் 'உயர்ந்தவர்கள் நாமெல்லோரும் உலகத்தாய் வயிற்று மைந்தர், நசிந்து இனி கிடக்க மாட்டோம், நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம், என்று பாடி எமது போராட்டம் இத்துடன் முடிந்துவிடவில்லை இதுவே ஆரம்பம் எனக் கூறியது, எதிர்காலத்தில் மாணவர்கள் எல்லோரும் நிமிர்ந்து நின்று சுயநிர்ணய உரிமைக்காக குரல்கொடுக்கப் போகும் காலம் மிக அண்மித்துள்ளது என்பதற்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு."

– வி.ஜே.கே.

நன்றி - நூலகத்திட்டம்



**அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்த ஒரு இளைஞனின் கதை இது. இதில் வரும் இடங்களின் பெயர்களையும், நபர்களின் பெயர்களையும் ஈழத் தமிழர்களுடையதாக மாற்றினால் நம்மவரின் புலம் பெயர் அவலம் அப்பட்டமாக வெளிப்படும். இத்தாலிக் கடலில் கொல்லப்பட்டோரினதும், ஹொலண்டில் ஆற்றோடு போனவரினதும் கதையாக இது மாறிவிடும்.**

# உலக மயமாக்கல்

# மனிதச் சரக்கின் துயரக்கதை

**– சூரியன்**

*உன்னுடைய மாத வருமானம் ஆயிரம் ரூபாயா? அமெரிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அன்றாடம் பார்ப்பாயா? அப்படியானால் நீ வலையில் சிக்குவதைக் தடுக்க முடியாது.*

**– ஒரு ஹாங்காங் கப்பல் முதலாளி**

சென்கான்திங் 20 வயது இளைஞன். அவனது மாத வருமானம் ஆயிரமல்ல. ஆறாயிரம் ரூபாய். சீனாவின் பியூஜியான் மாநிலத்திலுள்ள ஒரு சிற்றூரில் உணவு விடுதி நடத்தி வந்தான். மீன் மொத்த வியாபாரம் செய்து பணக்காரனாகி விடலாம் என்று முயன்று சேமித்த பணத்தைத் தோற்றான்.

எனினும், சோற்றுக்கே வழியில்லாமல் போய் விடவில்லை. சொந்தவீடு, தொலைபேசியுடன் தொலைக் காட்சிப் பெட்டியும் இருந்தது. எனவே அந்தக் கப்பல் முதலாளி சொன்னதைப் போல "வலையில்" விழுந்தான். எப்படியாவது அமெரிக்கா சென்று முன்னேறிவிட வேண்டும் என்ற வெறி அவனைப் பிடித்துக் கொண்டது.

சட்டபூர்வமான முறையில் தன்னை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து கொள்வதற்கு அவன் ஒரு மருத்துவரோ, கணணி வல்லுனரோ அல்ல, சாதாரண தொழிலாளி. எனவே கள்ளத்தோணி தான் தன்னைச் சொர்க்கத்தில் சேர்க்க முடியும் என்று முடிவு செய்தான்.

பாஸ்போட்டும், விசாவும் இல்லாமல் அமெரிக்க சொர்க்கத்திற்கு மனிதர்களை ஏற்றுமதி செய்யும் தொழிலில் கைதேர்ந்தவர்களான "பாம்புத் தலையர்கள்" (snake heads) என்ற சீன மாஃபியாக் கும்பலை அணுகினான்.

17 ஆயிரம் கிலோ மீட்டர் கடல் பயணம். 18 லட்சம் ரூபாய் கட்டணம், அமெரிக்காவில் ஆள் இறங்கியவுடன் பணத்தை சீனாவில் தந்துவிடவேண்டும். இந்த அபாயகரமான பயணத்திற்குத் தன் தாய் சம்மதிக்க மாட்டாள் என்பதால் மகனும் தந்தையும் சேர்ந்து ரகசியத் திட்டம் தீட்டினர். ஒரு நாள் இரவு கடையை மூடியவுடன் நேரே கடற்கரைக்குக் கம்பி நீட்டினான்.

000

அது ஒரு பழைய சண்டைக்கப்பல். அந்தக் கப்பலில் ஒரு சரக்குப் பெட்டகத்தை வாடகைக்குப் பேசியிருந்தார்கள் பாம்புத் தலையர்கள். 40 அடி நீள சரக்குப் பெட்டகத்தில் 100 பேர். அவர்கள் யாருக்கும் ஒருவரை ஒருவர் அறிமுகம் கிடையாது. எனினும், அவர்களின் லட்சியம் ஒன்றே. அமெரிக்கா - பணம் - முன்னேற்றம். இந்த 'லட்சியவாதிகளில்' சில பெண்களும் ஒரு மூன்று வயதுக்குழந்தையும் அடக்கம்.

சரக்குப் பெட்டிக்குச் சன்னல் கிடையாது. ஒரு மின்விசிறி மட்டும் உள்ளிருந்து காற்றை வெளியேற்றிக் கொண்டிருந்தது. இரண்டே கழிப்பறைகள். எக் காரணம் கொண்டும் பெட்டிக்கு வெளியே யாரும் வரக்கூடாது. ஒருவர் மீது ஒருவர் அடுக்கி வைத்தாற்போல் தான் தூங்க முடியும். சில நாட்களுக்கு ஒரு முறை உணவுப் பொட்டலத்தையும், தண்ணீரையும் உள்ளே எறிவார்கள். வாரத்திற்கு ஒரு முறை மேல்தளத்திற்கு வந்து உப்புத் தண்ணீரில் குளித்துக் கொள்ளலாம்.

தினமும் இரவு நேரத்தில் இரண்டு பெண்களை மேல் தளத்திற்கு வரச்சொல்வார்கள் பாம்புத் தலையர்கள். காலையில் அவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள். என்ன நடந்திருக்கும் என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால், யாரும் எதுவும் கேட்க மாட்டார்கள். அது தங்கள் இலட்சியத்திற்கு அவர்கள் கொடுக்கும் விலை.

தாங்கள் ஏற்றிச் செல்லும் சரக்குகள் மனிதர்களாயிற்றே என்பதற்காக அந்த மாஃபியாக் கும்பல் இரக்கமெதுவும் காட்டவில்லை. மனைவி குழந்தையுடன் அமெரிக்க சொர்க்கத்திற்குப் பயணம் புறப்பட்ட கணவன் ஒருவன் வாந்திபேதி கண்டு இறந்தான். அழுகிய தக்காளியைப் போல் கடலில் வீசப்பட்டான். என்றாலும், என்ன? அநாதைகளான மனைவியும் குழந்தையும் சொர்க்கத்தை நோக்கி தம் பயணத்தைத் தொடர்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

இந்தப் பயணம் முடியவே முடியாதோ என்ற அச்சம் சென்னுக்கு ஏற்பட்டது. புயலுக்கும், சூறாவளிக்கும், இடையில் மரணத்துடன் போராடியபடியே 35 நாட்கள் இடைவிடாத பயணம். இறுதியாக வட அமெரிக்கக் கண்டத்தின் தென்முனையில் உள்ள கவுதமாலா நாட்டின் கடல் பகுதிக்கு வந்து சேர்ந்தது கப்பல்.

இடுப்பளவு தண்ணீரில் எல்லோரும் இறக்கி விடப்பட்டனர். நள்ளிரவில் நடுக்கடலில் குளிரில் விறைத்தபடியே படகுகள் வருவதற்காகக் காத்திருந்தனர்.



ஐந்து படகுகளில் அனைவரும் ஏற்றப்பட்டனர். படகுகளை அந்நாட்டின் கடற்காவல் படை துரத்தத் தொடங்கியது. ஒரு படகு கவிழ்ந்து 12 பேர் இறந்தார்கள். மற்றவர்களுக்கோ அவர்களைத் திரும்பிப் பார்க்கக்கூட நேரமில்லை. இன்னொரு படகு கரை சேர்ந்தவுடனே பொலிஸ் 38 பேரைக் கைது செய்தது.

மீதமிருந்தவர்கள் ஒரு மாஃபியாத் தலைவரின் மாளிகைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே நிலவறையில் அடைக்கப்பட்டனர். பொலிஸ் கெடுபிடி குறையும் வரை வெளியே வரமுடியாது என்பதால் ஒரு மாதம் சென்னுக்கும் மற்றவர்களுக்கும் அங்கே சிறைவாசம்.

சீன விவசாயிகளின் வாழ்க்கையைக் காட்டிலும் படுமோசமான வாழ்க்கையை கவுதமாலா விவசாயிகள் அனுபவிப்பதை சென் அங்கே கண்டான். சீன விவசாயிகளைக் காட்டிலும் தனது ஊரில் சென் பெற்றிருந்த வசதிகள் எவ்வளவோ அதிகம். ஆனால், சோற்றைத் தேடியா அவன் அமெரிக்கா போகிறான்? சொர்க்கத்தைத் தேடியல்லவா இந்தப் பயணம்!

ஒரு மாதம் நிலவறையில் சிறைவாசம். பிறகு சென்னும் அவனுடன் 24 பேரும் ஒரு லொறிக்குள் திணிக்கப்பட்டனர். அது மெக்சிக்கோவுக்கு திராட்சைப் பழம் ஏற்றிச் செல்லும் லொறி. லொறி நிறைய சரக்கிருந்தது. ஒரு ரகசிய தளம். அதில் மல்லாந்து படுத்தபடியே 40 மணி நேரப்பயணம். தண்ணீர் உணவு எதுவுமில்லை. கை காலை அசைக்கவும் முடியாது. முகத்துக்கு இரண்டங்குலம் மேலே லொறியின் தளம். முதுகுக்குக் கீழே கரடுமுரடான சாலையால் பதம் பார்க்கப்படும் பலகைகள்.

சென்னுக்கு மூச்சு முட்டத் தொடங்கியது. நாட்டை விட்டுக் கிளம்பியதே தவறோ என்று தோன்றத் தொடங்கியது. ஒரு வேளை அமெரிக்கா போய்ச் சேர்ந்து விட்டால், மறுகணமே பயணத்தொகை 18 லட்சம் ரூபாவை வசூல் செய்யப் பாம்புத் தலையர்கள் தன் பெற்றோரிடம் போய் நிற்பார்கள். வட்டிக்கு வாங்கிக் கொடுத்து விடுவதாக அப்பா சொல்லியிருந்தார் அப்பா. ஒருவேளை அவரால் பணம் தர முடியாவிட்டால்? நினைக்கவே அவனுக்குக் குலை நடுங்கியது. பணம் தராதவர்களை போதை மருந்துக்கும்பலிடம் விற்றுவிடுவார்கள் பாம்பு தலையர்கள். போதை மருந்துக் கும்பலிடம் சிக்கினால் மீட்சியே கிடையாது. கோஷ்டி மோதலில் சாகலாம். பொலிசில் சிக்கினால் 20, 30 ஆண்டுகள் சிறை.

இல்லையென்றால், பணம் தராத பயணிகளை பாம்புத் தலையர்கள் சுட்டுக் கொன்று விடவும் வாய்ப்புண்டு. மூச்சுத்திணறி லொறியிலேயே சாகப போகிறோமா, சுட்டுக்கொல்லப்படுவோமா - என்ன வகையான மரணம் என்று அவனது மனம் அலை பாய்நது கொண்டிருந்த போதே லொறி நடுக்காட்டில் ஓரிடத்தில் நின்றது.

சென்னும் மற்றவர்களும் மெக்சிக்கோவைச் சேர்ந்த மாஃபியாக் கும்பலிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஏற்கெனவே கவுதமாலாவில் 12 பேர் இறந்து, 24 பேர் கைது செய்யப்பட்டிருந்த-தால் மெக்சிக்கோ - அமெரிக்கா எல்லை-யில் பொலிஸ் கெடுபிடி அதிகமாகி இருந்தது. எனவே இரண்டு மாதங்கள் நடுக்காட்டில் தங்க வைக்கப்பட்டனர். பின் திடீரென்று துவங்கியது பயணம். மெக்சிக்கோ பாலைவனத்தில் ஜனவரி மாதக் கடுங்குளிரில் கால்நடையாகவே பயணம். குளிர் உறை நிலைக்கும் கீழே போனது. எனினும், தீக்குச்சியைக் கொளுத்தவோ, சிகரெட் பிடிக்கவோ கூட அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. கிளம்பும்போது, அணிந்திருந்த பாண்ட் சட்டை தவிர யாரிடமும் வேறு உடையில்லை. குளிரைச் சமாளிக்க ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டனர்.

ஆறுநாட்கள் நடந்து சோர்ந்த பின் அமெரிக்க எல்லையின் முள்வேலி கண்ணில் பட்டது. கம்பியை வெட்டி 25 பேரையும் சொர்க்கத்திற்குள் தள்ளி விட்டார்கள் மெக்சிக்கோ மாஃபியாக்காரர்கள். கறுப்புநிற வேன் ஒன்று அவர்களை அள்ளிப் போட்டுக் கொண்டு பறந்தது.

முதன் முதலாக அமெரிக்க நகரமொன்றைப் பார்த்தான் சென். அது ஹூஸ்டன். அங்கிருந்து மறுநாள் லொஸ் ஏஞ்செல்ஸ் பயணம். லொஸ் ஏஞ்செல்ஸை அடைந்தவுடன் ஒரு அறைக்குள் அவனைச் சிறை வைத்தார்கள். பாம்புத் தலையர்கள். அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்துவிட்ட செய்தியை தொலை-பேசி மூலம் சீனாவில் உள்ள பெற்றோ-ருக்குத் தெரிவிக்கச் சொன்னார்கள்.

மகனுடைய குரலைக் கேட்டவுடனே தொலைபேசியிலேயே கதறி அழத் தொடங்கினாள் அவன் தாய். கள்ளத்தோணியில் சென்ற 12 சீனர்கள் கவுதமாலா அருகே கடலில் மூழ்கி இறந்தனரென்று செய்தித்தாளில் படித்தது முதல், தனது மகனும் இறந்திருப்பானோ என்று இரண்டு மாதங்களாக அழுது கொண்டிருந்த தாய்க்கு மகனின் குரல் ஒரு ஆறுதல். தந்தைக்கோ அச்சம்.

பாம்புத் தலையர்களின் ஆட்கள் வருவார்கள். அமெரிக்காவில் ஆளைச் சேர்த்தவுடனே 18 லட்ச ரூபாய் தந்துவிட வேண்டும் என்பது பழைய ஒப்பந்தம். இப்போது தங்களது சரக்குகளில் 12 பேர் இறந்து போய்விட்டதாலும், 26 பேர் பொலிசில் பிடிபட்டு விட்டதாலும் கட்டணத்தைக் கூட்டி விட்டார்கள் பாம்புத் தலையர்கள். 25 லட்சம் ரூபாய் தரவேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் சென்னுக்கு ஆபத்து.

அலைந்து திரிந்து கந்து வட்டிக்குக் கடன்வாங்கி 25 லட்சம் ரூபாவைக் கொடுப்பதற்கு அவருக்கு இரண்டு வாரங்கள் தேவைப்பட்டது. அதுவரை லொஸ் ஏஞ்செலில் சிறை வைக்கப்பட்டிருந்த சென், பணம் கைமாறியவுடனே நியூயோர்க்கில் கொண்டு வந்து விடப்பட்டான்.

நகரம் முழுவதும் அலைந்து திரிந்து சீனர்கள் வசிக்கும் பகுதியைக் கண்டு பிடித்து, ஒரு சீன முதலாளி நடத்தும் உணவு விடுதியில் வேலைக்கும் சேர்ந்து விட்டான். பாத்திரம் கழுவ வேண்டும். தரை துடைக்க வேண்டும். காய்கறி நறுக்க வேண்டும். ஒரு நாளைக்கு 13 மணி நேரம் வேலை. மாதம் 1400 டாலர் (70,000 ரூபாய்) சம்பளம்.

வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி கடன் அடைக்க பெற்றோருக்கு பணம் அனுப்பு-கிறான். 25 லட்சம் ரூபாய் கடனும், வட்டியும் எப்போது அடையும்? மிக வேகமாக அடைத்தாலும் 8 அல்லது 10 ஆண்டுகள் ஆகலாம்.

அமெரிக்க அரசைப் பொறுத்தவரை அவன் ஒரு கள்ளத்தோணி. பிடிபட்டால்

நன்றி - நூலகத்திட்டம்



திருப்பி அனுப்பி விடுவார்கள். என்ன கொடுமை நடந்தாலும் கடை முதலாளியை எதிர்த்துப் பேச முடியாது. எதிர்த்தால் அவன் பொலிசுக்கு காட்டிக் கொடுத்து விடுவான்.

எனினும், சென்னுக்கு மட்டும் இந்த நிலைமை இல்லை. அந்தச் சிறிய கடையில் அவனுடன் வேலை செய்யும் 17 சீனர்கள், 5 வங்காள தேசத்துக்காரர்கள், ஒரு இந்தியன் எல்லோரும் 'கள்ளத்தோணிகள்' என்பதில் அவனுக்கு ஒரு ஆறுதல்.

நினைத்துப் பார்த்தால் நாம் தான் இந்தச் சாகசத்தைச் செய்தோமா என்று அவனுக்கே சந்தேகம் வருகிறது. 14 ஆயிரம் கிலோ மீற்றர் கடல் பயணம் - கவுதமாலாவில் சிறை - மெக்சிக்கோ காட்டில் இரண்டு மாதம் - பாலைவனத்தில் நடைப் பயணம் - கடையில் மொழி தெரியாத - பண்பாட்டால் வேறுபட்ட - அறிமுகமான மனிதர்களே இல்லாத இந்த நாட்டில் - அமெரிக்காவில் ஒரு வேலை!

இனி வாழ்க்கை எப்படிச் செல்லும்?

குடியுரிமை கிடைக்குமா?, திருமணம் உண்டா?, குழந்தைகள் பிறந்து கொண்டால் அவர்களை என்ன செய்வது?, வாழ்க்கையில் மீண்டும் ஒரு முறை தாய்நாடு செல்ல முடியுமா?, பெற்றோர்களைப் பார்க்க முடியுமா?... தெரியாது. இந்தக் கேள்விகள் எதற்கும் அவனுக்கு விடை தெரியாது.

இப்போதைக்கு அவனுக்குத் தெரிவது ஒன்று மட்டும் தான். அவன் வெற்றிகரமாக வந்து சேர்ந்து விட்டான். டாலரைத் தொட்டுப் பார்த்து விட்டான்.

0 0 0

ஒரு வகையில் சென் அதிஷ்டசாலி என்றே சொல்ல வேண்டும். அதே பியூஜியான் மாநிலத்திலிருந்து கடந்த ஏப்ரல் மாதம் புறப்பட்ட 18 வயது ஜின்சிகாய் ஒரு துரதிருஷ்டசாலி.

தொலைபேசி மெக்கானிக்கான ஜின் தரைவழியே இங்கிலாந்து செல்ல பாம்புத் தலையர்களிடம் 15 லட்ச ரூபாய் கொடுத்திருந்தான். பீஜிங்கிலிருந்து ரயிலில் மாஸ்கோ, அங்கிருந்து லொறி, குதிரை வண்டியில், செக்கொஸ்லோவாகியா, அங்கிருந்து அப்படியே ஜெர்மனி, ஹொலண்ட், தேவையான போலி ஆவணங்களைத் தயாரித்திருந்தார்கள் பாம்புத் தலையர்கள்.

கைச் செலவுக்குப் பணம் அனுப்புமாறு ஜூன் 10ம் திகதி ஹொலண்டிலிருந்து வீட்டுக்கு போன் செய்தான் ஜின். "தொண்ணூறு சதவீதம் பயணம் முடிந்து விட்டது. ஹொலன்டிலிருந்து பெல்ஜியம். பிறகு இடையிலிருப்பது ஆங்கிலக் கால்வாய். அதைக் கடந்தால் இங்கிலாந்து தான்" பெற்றோர்களுக்குப் பெருமகிழ்ச்சி.

ஆனால், ஜூன் 18ம் திகதி இங்கிலாந்திலிருந்து வெளியான செய்தி சீனாவையே அதிர்ச்சியிலாழ்த்தியது.

பெல்ஜியத்திலிருந்து தக்காளி ஏற்றிவந்த சரக்குப் பெட்டகத்தைச் சந்தேகத்தின் பேரில் சோதனை போட்டார்கள் பிரிட்டிஷ் சுங்க இலாகா அதிகாரிகள். தக்காளிகளை நகர்த்தி விட்டுப் பார்த்தால் ஒன்றன்பின் ஒன்றாக 54 மனித உடல்கள். அனைவரும் சீனர்கள்.

பெட்டகத்திலிருந்து ஒரேயொரு சன்னலும் வெளிப்புறமாக மூடிக் கொண்டு விட்டதால், மூச்சுத்திணறி பெட்டகத்தின் சன்னலை மோதித் திறக்க முயன்று தோற்று, உடலில் நீர்வற்றி, அதைச் சமாளிக்க தக்காளிகளைக் கடித்து உறிஞ்சி அதுவும் பயனின்றி மூச்சுத்திணறி துவண்டு செத்திருக்கின்றார்கள்.

செத்தவர்கள் பெயரென்ன, ஊரென்ன. இந்தப் பெட்டகத்தை யார் யாருக்கு அனுப்பினார்கள் என்று எந்த விவரமும் தெரியாது. பிணங்களின் புகைப்படத்தைப் பார்த்துத் தான் தன் மகனின் மரணத்தை உறுதி செய்து கொண்டார்கள் ஜின்னின் பெற்றோர்கள்.

இது ஒரு துரதிருஷ்டசாலியின் கதை.

பிரான்சு நாட்டின் மேற்குக் கடற்கரையில் உள்ள கிராமம் சான்கேட். ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் புனித யாத்திரைக்கு வந்த பக்தர்கள் போல அந்தக் கிராமத்தில் குழுமியிருக்கிறார்கள். ஒரே கூரையின் கீழ் உலகின் அனைத்து மொழிகளும், கலாசாரங்களும் உயிருடன் காணக்கிடைக்கும் அருங்காட்சியகம் அது. உண்மையான உலக கிராமம்.

கடவுச் சீட்டும் நுழைவுச் சீட்டும் இல்லாமல் இங்கிலாந்துக்கும், அங்கிருந்து அமெரிக்காவுக்கும் செல்லக் காத்திருக்கும் அந்தப் பயணிகளுக்காக செஞ்சிலுவை சங்கம் ஒரு மண்டபம் கட்டிக் கொடுத்திருக்கிறது. இந்த பெட்டகச் சாவுகளைப் பார்த்த பிறகும், இத்தகைய அபாயகரமான பயணம் குறித்து அவர்கள் அஞ்சவில்லையா?

**இந்த மரணங்கள் மரத்து விட்டன. எல்லைக் காவற் படையிடமிருந்து தப்பிப்பதற்காகப் படகின் எடையைக் குறைத்து, உறைபனி நீரில் வீசியெறியப்பட்டு விறைத்துச் சாவோர் ஒவ்வொரு ஆண்டும் பலநூறு பேர். இவை கணக்கில் வராத சாவுகள்.**

**இத்தாலியின் கடற்பரப்பில் மட்டும் இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் 180 பேர். டோவர் நகரின் இந்தப் பெட்டகச்சாவு நடப்பதற்கு நான்கு நாட்கள் முன் ஒரு டச்சு அமைப்பு "ஐரோப்பாவில் நுழைய முயன்று இறந்தோர் இதுவரை 2000 பேர்" என்று புள்ளிவிவரம் வெளியிட்டிருந்தது. டோவர் சாவுடன் சேர்ந்து 2054.**



இந்த மரணங்கள் மரத்து விட்டன. எல்லைக் காவற் படையிடமிருந்து தப்பிப்பதற்காகப் படகின் எடையைக் குறைத்து, உறைபனி நீரில் வீசியெறியப்பட்டு விறைத்துச் சாவோர் ஒவ்வொரு ஆண்டும் பலநூறு பேர். இவை கணக்கில் வராத சாவுகள். இத்தாலியின் கடற்பரப்பில் மட்டும் இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் 180 பேர்.

டோவர் நகரின் இந்தப் பெட்டகச்சாவு நடப்பதற்கு நான்கு நாட்கள் முன் ஒரு டச்சு அமைப்பு 'ஐரோப்பாவில் நுழைய முயன்று இறந்தோர் இதுவரை 2000 பேர்' என்று புள்ளிவிவரம் வெளியிட்டிருந்தது. டோவர் சாவுடன் சேர்ந்து 2054.

"இது ஒரு வகையான 'சி.என்.என். விளைவு. (CNN அமெரிக்கத் தொலைக்காட்சி) தங்கள் எதிர்காலத்தை அமெரிக்கக் கண்ணாடியின் வழியே பார்க்கப் பழகிவிட்டதன் விளைவு" என்று விமர்சிக்கிறார் சான்கேட் நகரிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரி.

"வயது இருபதாகப் போகிறது. இன்னும் ஏன் இங்கேயே சுற்றிக் கொண்டி-ருக்கிறாய். அமெரிக்கா போக வேண்டியது தானே" என்று அறிவுரை கூறுவது சீனாவின் பியூஜியான் மாநிலத்தில் சகஜமாகி விட்டது என்கிறார் ஒரு சீனப் பேராசிரியர்.

அமெரிக்க மோகம் பிடித்தவர்களை இந்தச் சாவுகள் அச்சுறுத்துவதில்லை. சொர்க்கத்திற்குச் செல்ல விரும்புபவன் சாவுக்கு அஞ்சக்கூடாது" என்று எண்ணுகிறார்கள் போலும்!

ஐரோப்பாவிலோ இச்சாவுகள் அப்போதைக்கு ஒரு பரபரப்புச் செய்தி. திருவிழாவில் கூழ் ஊற்றும் பண்ணையாரின் பேரப்பிள்ளைகள், கூழுக்கு அடித்துக் கொள்ளும் ஏழைகளை எப்படிப் பார்க்கிறார்களோ அப்படிப் பார்ப்பதற்குத்தான் அமெரிக்க, ஐரோப்பிய மக்களைப் பழக்கியிருக்கின்றன தகவல் தொடர்பு சாதனங்கள்.

"உலகத்தில் உள்ள ஏழைகளுக்கெல்லாம் நாங்கள் உயிர் காக்கும் படகாக முடியாது" என்று சலித்துக் கொள்கிறார் பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் உழைப்பையும் இயற்கை வளங்களையும் இரண்டு நூற்றாண்டு காலம் சூறையாடிச் சேர்த்த சொத்தின் மீது அமர்ந்து கொண்டு இவ்வாறு பேசுவதற்கு எத்தனை திமிர் இருக்க வேண்டும்? உலகத்தையே பரிபாலனம் செய்யும் பெரும் பொறுப்பைக் கடுகளவும் விருப்பமில்லாமல் தன் தோளில் சுமந்து கொண்டிருப்பதாகக் கூறும் ஏகாதிபத்தியவாதியின் கருத்து இது.

18,19ம் நூற்றாண்டுகளில் ஆசிய ஆப்பிரிக்க அடிமைகளை வைத்துத் தான் தம் புதிய சாம்ராச்சியத்தை உருவாக்கிக் கொண்டன அமெரிக்காவும், பிரிட்டனும். இருபதாம் நூற்றாண்டில் கடினமான, 'தரம் தாழ்ந்த' வேலைகளைச் செய்ய கறுப்பு, பழுப்பு நிற மக்கள் இறக்குமதி செய்யப்பட்டனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் காலனி நாட்டு மக்கள் விடுதலைக்குப் போராடத் துவங்கிய பின், குடியேற்றத்தைத் தடுத்தது ஐரோப்பா. சமமான குடிமக்களாக ஆசிய ஆப்பிரிக்க மக்கள் தம்முடன் வாழ்வதை அவர்கள் விரும்பவில்லை. அவர்களுக்கு அடிமைகள் மட்டுமே தேவைப்பட்டனர்.

0 0 0

இப்போதோ மறுகாலனியாக்கக் காலம் தானே விரும்பி மனமுவந்து வருகிறார்கள் அடிமைகள். வேறு வழியின்றி ஏற்றுக் கொள்வது போலப் பாசாங்கு செய்கிறார்கள் ஏகாதிபத்தியவாதிகள்.

கள்ளத்தோணிகளிலும், சரக்குப் பெட்டிகளிலும் பயணம் செய்து சட்டவிரோதமாகத் தங்கள் நாட்டில் நுழையும் ஏழை நாட்டு உழைப்பாளர்களை அவர்கள் தடுக்கவில்லை. கள்ளச் சாராயத்தைப் பிடிக்கும் பொலிசைப் போல அந்தக் பக்கம் திரும்பிக் கொள்கிறார்கள். அவ்வப் போது கணக்குக்கு 'கேஸ்' பிடிக்கிறார்கள். சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தாங்கள் விரும்பாததைப் போல நடிக்கிறார்கள்.

ஈராக்கின் குழந்தைகளுக்கு ஒரு பால் பவுடர் டப்பாவோ, ஒரு மாத்திரையோ கூட செல்லவொட்டாமல், தடுத்து ஆயிரக்கணக்-கான குழந்தைகளைப் பட்டினி போட்டுக்-கொன்ற அமெரிக்கா, சதாம் உசேனின் மாளிகையை விண்ணிலிருந்து வேவுபார்த்து குண்டு வீசும் தொழில்நுட்ப ஆற்றல்பெற்ற அமெரிக்கா, சீனா - ரசியா போன்ற நாடுகளிலிருந்து ஒரு நபரோ ஒரு பத்திரி-கையோ கூடத் தன் நாட்டில் நுழைந்து-விடாமல் இரும்புத்திரை போட்டு வைத்தி-ருந்த அமெரிக்கா - இந்தக் கள்ளத்தோணி-களைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று கூறுவது எத்தகைய பித்தலாட்டம்?

"சொல்லப் போனால் இந்தச் சட்ட-விரோதக் குடியேற்றத்தால் அவர்களது பொருளாதாரத்திற்கு லாபம் தான். அவர்-களுக்கு மலிவான கூலியில் தொழிலாளர்கள் கிடைக்கிறார்கள். எதற்காக இந்த பிரிட்டிஸ்-காரர்கள் சும்மா அலட்டுகிறார்கள்?" என்று சர்வ சாதாரணமாக குட்டை உடைக்கிறார் சான்கேட் கிராமத்தில் காவல் இருக்கும் ஒரு பொலிஸ்காரர்.

ஏழை நாடுகளின் தொழிலாளர்களைக் குறைந்த கூலிக்கு வேலைவாங்க முடியு-மென்பதால் அங்கெல்லாம் மூலதனத்தை ஏற்றுமதி செய்கின்றன பன்னாட்டு நிறுவ-னங்கள். தம் சொந்த நாட்டில் குறைந்த கூலிக்கு எடுபிடி வேலை செய்வதற்காக ஏழை நாட்டுத் தொழிலாளர்களை இறக்கு மதியும் செய்கின்றன.

சீனா, பிலிப்பைன்ஸ், இந்தியா, வங்காளதேசம், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் அரசுகளோ தம் மக்கள் கள்ளத்தோணியேறி திரைகடலோடி திரவியம் தேடுவதையே விரும்புகின்றனர். அந்நியச் செலவாணி பற்றாக்குறையை ஈடுகட்ட அவர்களுக்கு டாலர் தேவை. கள்ளத்தோணியேறி அமெரிக்கா செல்லும் சீனர்கள், பியூஜியான் மாகாணத்திலிருந்து மட்டும் ஆண்டுக்கு ஒரு லட்சம் பேர்.

ஏகாதிபத்தியச் சுரண்டலால் ஏற்படும் அந்நியச் செலவாணி நெருக்கடியைச் சமாளிக்க இன்னும் கொடூரமான ஏகாதிபத்திய சுரண்டலால் கிடைக்கும் டாலர் பயன்படுகிறது. கந்துவட்டி கட்டமுடியாதவன் பெண்டாட்டியை அடமானம் வைத்த கதை இது.

என்ரான், போர்ட், மைக்ரோ சொப்ட் முதலாளிகள் எல்லை கடந்து எந்த நாட்டிற்குள்ளும் நுழையலாம். தொழில் தொடங்கலாம். ஆனால், தொழிலாளர்கள் எல்லையைக் கடக்கக் கூடாது. இதுதான் உலகமயமாக்கக் கொள்கையின் நீதி.


மூலதனத்திற்கு தேசம் இல்லை. அரசு இல்லை. உழைப்புக்குத் தேசம் உண்டு-சுரண்டுவதற்கு. அரசு உண்டு-அடக்குவதற்கு.

மூலதனச் சந்தையை கைப்பற்ற கள்ளத்தோணி ஏறினால், அதன் பெயர் ராஜதந்திரம் அல்லது போர். உழைப்பு தன்னைச் சந்தையில் விற்கக் கொள்ளக் கள்ளத் தோணி ஏறினால் அது குற்றம்!

குற்றவாளிகளை உள்ளூர் பொலிஸ்-காரன் நேசிப்பதைப் போலவே உலகப்-பொலிஸ்காரனும் நேசிக்கிறான். அவர்கள் அளிக்கும் இலஞ்சம் - மலிவான உழைப்பு.

உலகமயமாக்கமும் தகவல் தொழில்நுட்ப புரட்சியும் உலகத்தையே கிராமம் ஆக்கிவிட்டதாகச் சொல்கிறார்கள். உலகம் கிராமம் என்றால் நம்மைப் போன்ற நாடுகள் அந்தக் கிராமத்தின் சேரி.

நன்றி: புதிய கலாசாரம்




அண்மைக் காலத்தில் வன்னி நல்ல பல படைப்புக்களைத் தந்து கொண்டிருக்கிறது. கருணாகரனின் 'ஒரு பொழுதுக்குக் காத்திருத்தலில்' ஆரம்பமாகி அமரதாஸின் 'இயல்பினை அவாவுதல்', முல்லைக்கமலின் 'மனமும் மனதின் பாடலும்', சித்தாந்தனின் 'காலத்தின் புன்னகை' என்று தொடர்கிறது அப்போக்கு. அவ்வகையில் வன்னியிலிருந்து வெளியான இன்னொரு தொகுதி ஆரண்யக்கனவு. இளைய தலைமுறையைச் சேர்ந்த பிரதீபகுமரன் என்ற பெண் படைப்பாளியின் முதற் சிறுகதைத் தொகுதி இது. ஈழத்துப் படைப்புலகுக்கு ஒரு புதுவரவு இவர். ஒன்பது சிறுகதைகள் கொண்டது ஆரண்யம் என்கிற இத் தொகுப்பு. இதிலுள்ள சிறுகதைகள் அனைத்தும் கடந்த ஐந்தாண்டுகளுள் எழுதப்பட்டவை. 'வாழ்வு போர் மயமாகியது. இன்று போரே வாழ்வாகியது' என்று கூறும் இவர் தன்னுடைய பார்வையில் யுத்தத்துள் வாழ்தலைப் படைப்பாக்கியிருக்கிறார். அத்தொகுப்பிலிருந்து ஒரு சிறுகதையை நன்றியுடன் இங்கு மீள்பிரசுரம் செய்கிறோம்.

ஆ–ர்.

# வண்ணத்துப்பூச்சியின் காலங்கள்

## -பிரதீபகுமாரன்

இதழ்களை அசைத்தபடி ஒவ்வொரு பூவிலும் மாறி மாறிப் பூக்கிறதே. அது என்ன பூ?

சிவப்பில் கறுப்பு புள்ளிகள். மஞ்சளில் சிவப்பும் கறுப்பும் கலந்த புள்ளிகள். தனி மஞ்சளில் சிவப்பில் என இத்தனை வண்ணங்களில் கலப்பில் அவள் பூக்கள் பார்த்ததில்லை. மரங்கள் தானே பூக்கும் பூக்களும் பூக்குமா?

தம்மைச் சூழ உள்ள ஒவ்வொன்றிற்கும் விடைதேடும் அந்தச் சின்ன வயதில் இது பெரும் வினாவாகி அவளைச் சூழ்ந்தது. அவள் தேடலின் விடையாக அம்மா அதன் பெயர் சொன்னா.

"வண்ணத்துப்பூச்சி"

ஈர்க்கும் வண்ணங்களைக் கொண்ட அவை அவள் எண்ணங்களை நிறைத்தன.

ஒவ்வொரு இரவிலும் அவற்றின் நினைவுடனேயே படுக்கப் போகும் அவளது கனவிலும் வண்ணத்துப் பூச்சிகளே பறந்தன.

அம்மா - பொம்மைகள், சொக்கிளேற், என எல்லைப்பட்ட அவளது மகிழ்வு விரிந்து உயிர்ப்பான இதனோடும் பிணைந்து கொண்டது.

அதன் சுறுசுறுப்பும், அசைவுகளின் வசீகரமும் அவளை குஷி கொள்ள வைக்கும். கை கொட்டித் துள்ளுவாள்.

அவற்றை முழுவதுமாகப் புரிந்து கொள்ளும் ஆசையில் பிடிப்பதற்காக கை நீட்ட் பறந்து விடும்.

மறுபடியும் பூவில் வந்து அமர்ந்ததும் மெல்ல அருகே சென்று கைகளை உயர்த்த மறுகணம்...

சலிப்பூட்டாத இந்த விளையாட்டு முதலில் சந்தோசம் தந்தாலும், கடைசிவரை ஒன்றைக் கூடப் பிடிக்க முடியாத போது மனம் சோம்பி, அழுகை வந்தது. அம்மாவை பிடித்து தரும்படி அடம் பிடித்தாள். எத்தனை சொல்லியும் கேட்க மறுக்கும் தன் சின்ன மகளின் கண்களை உற்றுப் பார்த்த அம்மா சொன்னா, "கடவுள் தான் வண்ணத்துப் பூச்சியாகி வானத்திலை இருந்து இங்க பறந்து வாறார்."

நாங்கள் எல்லோரும் சந்தோஷமாக இருக்கிறமோ என்று பார்ப்பதற்காக.

சுஜிக்குட்டி மாதிரி சின்னப் பிள்ளைகள் துக்கமாக இருந்தா அவருக்குப் பிடிக்காது.

அவையளை சந்தோசப்படுத்தத் தான் தன்ர சிறகுகளில் வடிவு வடிவான வண்ணங்களை உண்டாக்கி இருக்கிறார். விதம் விதமாக பறந்து காட்டுறார்.

நீங்கள் அவரை கையிலே பிடிச்சால் அவரின்ரை சிறகு முறிஞ்சிடும்.

பிறகு அவரால பறந்து உங்களை சந்தோசப்படுத்தவும் ஏலாது. வானத்திற்குத் திரும்பிப் போகவும் ஏலாது.

அம்மாவின் வார்த்தைகளை அக்குழந்தை மனம் முழுவதுமாக நம்பியது.

தூர இருந்தே தன் சந்தோசத்தை அவருக்கு சொல்லிக் கொள்ளவும் பழகினாள்.

0 0 0

நா வரண்டு தண்ணீருக்காக அவளுள் ஏதோ ஒன்று அவளைக் கெஞ்சியது.

தண்ணீர்க் 'கான்' வெறுமையாக ஓரத்தில் கிடந்தது.

காட்டின் வெம்மை உடலைப் பற்றி எரியச் செய்ய மரங்களின் இலைகள் அசைவற்று தவமியற்றின. வியர்வையில் நனைந்த சீருடை வேண்டாத ஒன்றாக வருத்தியது. கடைசியாக குளித்த நாளை எண்ண ஒரு கையின் விரல்கள் போதவில்லை.

உச்சந்தலை நெற்றி, கன்னங்கள், உடலெங்கும் என அனலினில் வேக, கண்கள் மட்டும் இடைவெளியின்றி இலக்கில் ஆழ்ந்திருந்தன.

சிறிய அசைவிற்கே பதில் தரும் தூரத்தில் எதிரி.

முதல் நாள் சண்டையில் ஒய்ந்து போய் விட்டானோ, என்னவோ அசுமாத்தமில்லாமல் இருந்தான்.

அது தான் இன்னும் சலிப்பூட்டியது.

அவளுடைய நிலையில் அவள் மட்டும் தான். குறிப்பிட்ட தூர இடைவெளியின் பின்பே ஏனைய போராளிகளின் நிலைகள். காடெங்கும் சூழ்ந்திருந்த வெறுமை அவளை



சோர்வடையச் செய்தது.

இதற்கு முன்னும் அவள் காடுகளுள் வாழ்ந்திருக்கிறாள். இத்தனை கொடூரமானதாகத் தன் முகத்தை எப்போதும் அது காட்டியதில்லை.

பசுமை, அமைதி, பட்சிகள் என காட்டின் மீது நகரத்தை விட அவள் நேசிப்பு அதிகமாகவே இருந்தது.

அமைதி போர்த்திய அக்காடுகள் ஓசைகளடங்கிய மெல் உணர்வை நெஞ்சினுள் நிறைக்கும்.

சிந்தனையின் தெளிவாக மகிழ்வின் புதிய முகமாக அப்பொழுதுகள் மகிழ்வால், அமைதியால் நிரம்பி வழியும்.

உயிர்ப்பின் சலனமற்ற முடிவற்ற சூனியம் போன்று இருள் சூழ்ந்த காட்டின் இந்தத் தோற்றம் புதியது. இடைவெளியற்ற வெடியோசைகளின் அதிர்வினால் காட்டு விலங்குகள் முற்றாக இடம்பெயர்ந்து விட உயிரின் சுவடிழந்த பூமியாக கோலம் காட்டியது அச்சூழல்.

சூரியக்கதிர்கள் சாட்டைகளாகி ஆவேசமாகப் பதிய நிசப்தமே மொழியாக காட்டின் கதறல் காதுகளில் எதிரொலித்தது.

எறிகணைச் சிதறல்கள் இடைவெளியின்றி காயப்பட்ட மரங்களின் பசிய இலைகள் கூட அனல் வீசும் தீயின் நாக்காக கோபத்தை அள்ளிச் சொரிந்தன.

பல நாட்களாக தூக்கமில்லாத விழியின் ஓரங்களை தூக்கம் பசையாக இழுக்க முதல் நாள் சமரில் எங்கோ அடிபட்ட கால் இடையிடையே வலித்தது.

முகம், கழுத்து எனப் பொங்கிய வியர்வையை துடைக்க மறந்தவளின் பார்வை அருகே கிடந்த கொப்பி மட்டையில் மோதித் திரும்பியது.

"வெக்கை கூடி விட்டா விசர்நாய் போல உறுமிக் கொண்டிருப்பாய். உனக்குக் கிட்ட இருக்க எனக்குப் பயம்". என்று கூறியபடி இவளுக்கே அதிக நேரம் விசிறி விடும் வைதேகியின் முகமே இலக்கின் திசை முழுவதும் நிறைந்திருந்தது.

வைதேகி தான் அவளுடன் நேற்று வரை அங்கே இருந்தவள். நேற்றைய சண்டையின் வெற்றிக்கான விதைகளாக அவளும், சில தோழர்களும்.

இந்நேரம் விதைத்திருப்பார்களா? ஒரு கணம் உள்ளம் மௌனிக்க ஊற்றென விழியினுள் நீர் நிறைந்தது.

அவளது இந்தப் போராளி வாழ்வு நெருங்கிப் பழகியவர்களின் சாவுகளைத் தாண்டியே நீண்டு வந்துள்ளது.

ஒவ்வொன்றாக எத்தனை பேரின் நினைவுகள், இந்த மண்ணைப் போலவே அவள் மனதிலும் படிந்து கிடக்கிறது.

நினைவின் திரைகள் இழுபடும் போதெல்லாம் துயரின் மொழியாக விழி நீரால் நிறையும்.

கோபம் அலையாக நெஞ்சினுள் சுழன்று எழ சினத்தின் உச்சமாக விண்தொடும் பெரு உருவாகி கைகளை அகல விரித்து கால்களின் கீழ் எதிரி நசிபட எமது பலத்தை அவனுக்கு உயர்த்தும் ஆவேச உயிர்ப்பின் தகிப்பில் விழிநீர் ஆவியாகி உறையும்.

'வெற்றியின் நிச்சயம்' பற்றிய அவர்களின் பேச்சுக்களும் எமது நிலம் மீதான ஆக்கிரமிப்பும் நெஞ்சினில் தீ மூட்டும்.

0 0 0

எண்ணங்களின் நீட்சியை நிறுத்தி அவை பார்வையில் பதிந்தன. இத்தனை நேரம் எப்படி அவள் பார்வையிலிருந்து ஒதுங்கின எனப் புரியவில்லை.

ஒன்றிரண்டாக, ஐந்தாக, பத்தாக அவற்றைப் பார்த்திருக்கிறாள்.

ஆனால் ஆயிரக்கணக்கில் காடெங்கும் மிதந்து வரும் அவைகளின் அணிவகுப்பு உற்சாக உலுப்பலாக இதயத்தை அசைத்தது.

எகிறி பட்டென்று விழிகளில் அறைகின்ற வண்ணங்களாக இல்லாமல் வெண்மை, வெளிர் மஞ்சள், லேசான சாம்பல் என மென்மையான விழி நுழையும் நிறங்களில் எம்மைச் சூழ்ந்து நிறைந்திருந்தன.

உயிர்ப்பின் சுவடழிந்திருந்த அப்பகுதியில் ஓராயிரம் உயிர்களின் ஆனந்த நடனம்.

லேசான சிறகின் விரிப்பில் அங்கும் இங்கும் அசையும் அவைகள் பறக்கும் மலர்களாகவே விழிகளை நிறைத்தன.

இத்தனை நேரம் அவளை அழுத்திய துயரின் கனமெல்லாம் மெல்ல மெல்லக் கரைய மிக மிக இலேசாகத் தன்னை உணர்ந்தாள்.

கொடிய அந்த தனிமை உணர்வை துடைத்தெறிய அவளை அமைதிப்படுத்தி இலக்கினில் ஆழ்ந்திருக்கச் செய்யவே அவை அங்கே நிறைந்தன போலத் தோன்றியது.

சின்ன வயதும் அம்மாவும் கண்களில் வந்து போயின. புதியவள் ஒருத்தி தன் நிலையை நோக்கி நீர் நிறைந்த 'கானு'டன் வருவது தெரிந்தது.

வேர்த்துக் களைத்த அவள் இவளை விட சின்னவளாகத் தெரிந்தாள். விளையாட்டுத் தனமாக அவைகளைப் பிடிக்கக் கை நீட்டிய அவளை நோக்கி இங்கிருந்து தன்னை மறந்து "பிடிக்கக்கூடாதம்மா, வைதேகி அக்காவின்ர சிறகு முறிஞ்சிடும்" எனக் கத்தினாள்.

அவை அக்காடெங்கும் இருளை விரட்டியபடி பறந்து கொண்டிருந்தன.

நன்றி - நூலகத்திட்டம்



## உயிர்த்தல் பிழையெனில்



கொன்று புதைத்ததோர் சடலத்தின் குருதி
கொப்பளித்து ஆர்ப்பரிக்கும் ஒரு
பேயிரவில்
என் வரலாற்றின் கடைசிச் சொட்டு
உயிரும்
எரித்து சாம்பலாக்கப்பட்டு விடும்.
யௌவன சௌந்தர்ய நிழலில்
யாத்ரீகம் செய்த எனது மண்ணீர்ப்பு
பொய்மைப்பட்டதால் சிலிர்த்துக்கொண்ட
மனசின் ஓங்காரத்தில்
மயானக் குருவியின் இடைவிடா ரீங்காரம்.
o o
எதைத்தான் விட்டு வைத்தார்கள்
இருப்பினை வெளிக்காட்டிக்கொள்ள
இருக்கின்ற உசிரும்
சுருக்கிட்டு செத்ததாய்
சொல்லிக்கொள்ளும் ஆரவாரத்தில்
சப்தங்களைக் கிழித்து
சந்நியாசிக் கோலம் பூணும் ஆன்மா.
o o
எனது தேசத்தில் அவர்கள்
ஜனநாயக அரிதாரத்தை
பூசிக்கொண்டு
நடாத்தும் லீலைகளில்
நட்டநடுப்பகல் மரணங்களாய்
நாங்கள்.
o o
அர்த்தம் தெரியாத அரசியலில்
மண்புழுக்களாய் நீட்டிக்கிடந்த
எமது உரிமைகளை
கொத்தித்தின்ற கோழிகள் பற்றி
ஒப்பாரி வைத்தழ மட்டுமே தெரிந்த எமக்கு
ஒன்றும் செய்யத் தெரியாதது
வரலாற்றின் கறைபடிந்த இயலாமை தான்.
o o
எழுதும் பேனாவுக்கு
காது சொறியவே நேரம் போதாமைக்கு.
சொல்ல வந்ததை
முடித்த பாடில்லை
வரிகளைச் சுமந்து கொண்டிருந்த
வெள்ளைத் தாள்களெல்லாம்
வெற்றுத் தாள்களாய் போயிற்று.
o o
இருட்டோடு இருட்டடிப்பு செய்யப்பட்ட
எம் பிறப்பின் பயன்
பாவ புண்ணியம் பார்க்கத் தெரியாத
பாவியாய் சித்திரிக்கப்பட்டதில்
வதைபடலம் கதைபேசத் தொடங்கிற்று.
வாழ்க்கையின் விசித்திர கணங்கள்
விஸ்வரூபித்து விஸ்வரூபித்து
முடிவிலியாய் நீண்டு கொண்டே சென்றது.
o o
மண்ணின் மேனியில் பிறப்பெய்வதென்பது
சிறுபான்மை உயிர்த்தலுக்கு
மறுக்கப்பட்ட உரிமையெனில்
எந்தக்கருவறை
எம்மை ஏற்று அங்கீகரித்தது.
o o

*கிண்ணியா சபருள்ளா*

# இது போராடும் காலம்!

விடுதலை, சுதந்திரமென்ற கோட்பாட்டை முன்வைத்து பாரம்பரிய வாழ்க்கையில் ஊறிப்போன சடங்கு சம்பிரதாயங்களை மாற்றிவிட முடியுமா? அல்லது மாற்றத்தான் வேண்டுமா? எம் முன்னோர்கள் இந்தப் பூமியில் வாழ்ந்து தானே மடிந்தார்கள். அவர்கள் வாழ்ந்த காலம் எவ்வளவு அமைதியாக, ஆனந்தமாக இருந்தது. இப்பதான் புதிதாக விடுதலையென்றும், சுதந்திரமென்றும் கோஷங்கள் போட வெளிக்கிட்டு எல்லா நடைமுறை நியதிகளும் கண்முன்னே நாசமாகிக்கொண்டு போகுது.

இவ்வாறாக... தனக்குள் எண்ணங்களை சிறகசைக்க விட்டு அதற்கு எல்லை காண முடியாதவராக தவித்தபடி... சிகை அலங்கரிப்புத் தொழிலாளி சிவனேசனின் வீட்டை நோக்கி இத்தோடு நான்காவது தடவையாகச் சென்று கொண்டிருந்தார் இராசநாயகம்.

'எளிய அம்பட்டப்பயல்! முந்திப் பணத்தைக் காட்டினால், பல்லைக் காட்டியபடி பணிஞ்சு, குனிஞ்சு வாறவன், இண்டைக்கு...? அவர்ரை செருக்கும் தடிப்பும்..? எப்ப வந்தது இந்தச் செருக்கும் தடிப்பும்...?'

விடை காணமுடியாத நிலையில் அவரது இதயத்துள் நாலா பக்கமும் எதிரொலித்துக் கொண்டிருந்தது அந்த வினா.

'எப்படியும் இந்த முறை அவனைச் சம்மதிக்கச் செய்து போட வேணும். கடந்த மூன்று தடவையும் அவனைச் சந்திக்கச் சென்றபோது சொன்ன அதே பதிலைத் தான் இப்போதும் சொல்வானோ? விடக்கூடாது அவனை...'

உறுதியெடுத்துக் கொள்கிறது அவரது உள் மனம்.

தூரத்தே கிராமத்தின் சந்தி தெரிகிறது. அச்சந்தியின் இடது பக்கத்தில் தெருவோரத்தில் தான் சிவனேசனின் சிகை அலங்கரிப்பு நிலையம் இருக்கிறது. முன்பு சாதாரண ஓலைக்கொட்டிலாக.... ஒரே ஒரு நிலைக் கண்ணாடியுடன் தனியொருவனாக தொழில் செய்து கொண்டிருந்த சிவனேசன், இன்றைய நாளில் மூன்று பெரிய கண்ணாடிகளோடு கடையையும் நன்கு அலங்காரப்படுத்தி சம்பளத்துக்கும் இருவரை வைத்து வேலை செய்வித்துக் கொண்டிருந்தான்.

அவனது கடின உழைப்பும்: முன்னேறத்துடித்த எண்ணமும் அவனை உயர்ந்தொரு நிலைக்கு இட்டுச்சென்றதை நினைத்து அடிக்கடி பொருமிக்கொள்வார் இராசநாயகம்.

பொருளாதார ரீதியாக எங்கே இவன் தங்களை மிஞ்சி விடுவானோ... என்ற ஏக்கமும் பரிதவிப்பும் அவரினுள்ளே குமைந்து கொண்டிருந்தது.

'குடிமைத் தொழில் செய்கிறவனுக்கு மனதில் எந்த விதமான கொள்கைகளோ இலட்சியங்களோ தோன்றி விடக்கூடாது. அப்படித் தோன்றினால் அது எம் சந்ததிக்கு ஆபத்துத்தான்...'

இந்தக் கருத்தே பரம்பரை பரம்பரையாக அவர்களது குடும்பத்தில் வேரூன்றி வந்தபோதும் காலமாற்றத்தோடு எழுந்த எதிர்ப்பலைகளுக்கு முன்பாக அவர்களது கருத்துக்கள் யாவும் மெல்ல அடங்கிப் போகத் தொடங்கின.

சந்தியில் அமைந்திருந்த ஓர் ஒலிப்பதிவுக் கூடத்திலிருந்து ஒலித்துக் கொண்டிருந்தது சமகாலப் பாடலொன்று. ஒலிக்கும் பாடலின் ஒவ்வொரு வரிகளும் இராசநாயகம் தன்னுள் கொண்டிருந்த எண்ணங்களைப் பரிகசிப்பது போல் இருந்தது. பாடலைச் செவிமடுக்க விரும்பாதவராய் வேகமாக எட்டி மிதித்து சந்தியால் திரும்பி நடந்தவருக்கு இலேசான ஓர் அதிர்ச்சி!

சிவனேசன் தொழில்புரியும் அந்த சிகை அலங்கரிப்பு நிலையம் அன்று மூடப்பட்டு இருந்தது.

'ஓ...! இன்று புதன்கிழமை'.

ஒரு கணத்துள் சலித்துக்கொண்டது அவரது மனம்.

எடுத்த முயற்சியை எப்படியும் கைவிடுவதில்லையென்ற தீர்மானத்துடன் அதே தெருவில் சில வீடுகளுக்கப்பால் அமைந்துள்ள சிவனேசனின் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

மாலைக் கருக்கலுக்குள் சூரியன் மறைந்து கொண்டிருந்தான். தெருவின் வலதுபக்கத்துக்கப்பால் பரந்திருந்தது தோட்டவெளி. நிலத்தில் மரவள்ளியும், குரக்கனும் பயிரிடப்பட்ட நிலையில் மக்கள் சிலர் குரக்கன் பாத்திக்குள் நின்ற வண்ணம் புல்லுப்பிடுங்கிக் கொண்டிருந்தார்கள். இன்னொரு உழைப்பாளி தனது தோட்டத்தில் நின்று மிளகாய்க்கன்றுகளுக்கு நீர் கட்டிக்கொண்டிருந்தார். மேய்ச்சல் முடித்து வந்த ஆடுகளை சிறுவனொருவன் ஒருங்கு சேர்த்து வீட்டைநோக்கி நகர்த்திக் கொண்டிருந்தான். தெருவிலே புகை கக்கியபடி ஓடிக் கொண்டிருந்தன இயந்திர வாகனங்கள். அலுவலக வேலையை முடித்து அவதியாய் செல்லும் மனிதர்கள்... அன்றாட நாட்கூலிகள்....

பூமி சுழன்று கொண்டு தான் இருந்தது. இந்தச் சுழற்சியினூடே ஏற்பட்டுவரும் மாற்றங்கள்... அந்த மாற்றத்தை ஜீரணிக்க முடியாத மனிதர்களாக இராசநாயகம் போன்ற மேட்டுத்தரவர்க்கங்கள்....

அடக்கு முறைகளாலும்.... அடாவடித்தனங்களாலும்... வலிமையுள்ளவர்கள் சிறுமைப்பட்டவர்கள் மீது செலுத்திய ஆதிக்கம், சிந்திக்கத் தலைப்பட்ட புதிய தலைமுறைகளுக்கு முன்பாக பொசுங்கிக் கொண்டிருந்தது.

## துஞ்சிடோம்: இனி அஞ்சிடோம்!



பொருளாதார ரீதியாகவும், செய்கின்ற தொழிலாலும் தாழ்த்தப்பட்டவர்களென ஒதுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த இளந் தலைமுறைகள் ஒன்று கூடி தங்கள் தலையெழுத்தை தாங்களே தீர்மானிக்க எழுந்தபோது சமுதாயத்தில் புதியதொரு மாற்றம் ஏற்படத் தொடங்கியது.

அந்த மாற்றம் சிகை அலங்கரிப்பு செய்யும் சமூகத்திலும் ஏற்படத் தான் செய்தது. அவர்கள் தாங்களாகவே ஒன்று கூடி தங்களுக்கென ஒரு சங்கத்தை உருவாக்கி அந்தச் சங்கம் எடுக்கும் தீர்மானங்களுக்கமைய யாவரும் கட்டுப்பட்டு நடக்க ஆரம்பித்தபோது அவர்கள் செய்யும் தொழிலானது 'குடிமைத் தொழில்' என்ற அவப் பெயரிலிருந்து அகன்று 'உரிமைத் தொழில்' என்ற உண்மையை வெளிக்காட்டிக்கொண்டது.

இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்களில் இராசநாயகமும் ஒருவர். தனக்கு சிகையலங்கரிப்புத் தொழிலை குடிமைத் தொழிலாய் செய்து வந்த சிவனேசனுக்கு பணத்தைக் கொடுத்து, பொருளைக்காட்டி பணியவைக்கலாமென்றதொரு எதிர்பார்ப்பில் தான் சிவனேசனின் வீடுநோக்கிச் சென்று கொண்டிருந்தார் இராசநாயகம்.

அன்று ஓய்வு தினமாகையால், முற்றத்தில் நன்கு மதாளிப்பாக வளர்ந்து நின்ற கதலி வாழை மரங்களுக்கு தண்ணீர் விட்டுக் கொண்டிருந்த சிவனேசன், ஒழுங்கைக் கதவு திறபடும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தான்.

"வாங்கோண்ணை..."

இராசநாயகத்துக்கு முகம் சுண்டிவிட்டது.

முன்பெல்லாம் முடிவெட்டுவதற்காய் வீடுதேடி வந்து, முற்றத்தில் காத்திருந்து "ஐயா..." என பவ்வியமாக அழைப்பவன் இப்போது "அண்ணை..." என்று அழைக்கத் தொடங்கிவிட்டதை நினைத்து தனக்குள்ளே கொந்தளித்தார். அந்தக் கொந்தளிப்பில் உருவான கோப உணர்வுகளை முகத்திலே வெளிக்காட்டாது மெல்ல மறைத்துக் கொள்ளவும் செய்தார்.

"சிவனேசன்! நான் கேட்டது என்னமாதிரி? இதோடை நாலாவது தடவையடாப்பா வந்து நிற்கிறேன்."

இரந்து கேட்க வந்த நிலையிலும்... பேசிய வார்த்தைகளில் ஓர் இறுமாப்பு தொக்கி நிற்பதை உணர்ந்த சிவனேசன், எரிச்சல் நிறைந்த பார்வையோடு ஏளனமாய் நிமிர்ந்து பார்த்தான் இராசநாயகத்தை. "அண்ணை! நீங்கள் நாலு தடவையல்ல, நாற்பது தடவை வந்து கேட்டாலும் எங்கள் சங்கம் எடுத்த தீர்மானத்திற்கு நான் ஒரு போதும் மாறாக நடக்கப் போவதில்லை. ஏன், உங்களுக்கு கடைக்கு வந்து முடிவெட்டக் கஷ்டமாயிருக்கா?"

"அப்படியில்லைச் சிவனேசன். கடையிலை நாலு சாதியள் வாற இடம். அதுகளுக்கு நடுவிலை... அதெல்லாம் நமக்கு சரிப்பட்டு வராது. வீடென்றால் தனிமையாக... கரைச்சலில்லாமல் வெட்டிக் கொள்ளலாம்".

"நாலு சாதியளுக்கு முடிவெட்டிய கத்திரிக்கோலாலைதான் அண்ணை உங்களுக்கும் முடிவெட்டுறனான். உங்களுக்கு கடைக்கு வரக்கஷ்டமெண்டால் ஒண்டு செய்யுங்கோ..."

"என்ன அது? சொல்லு..."

இராசநாயகம் வியப்புத் தொனிக்கக் கேட்டார்.

"ஷேவ் எடுப்பது எப்படி? முடிவெட்டுவது எப்படியென்பதைச் சொல்லித் தாறன். நீங்களே உங்களுக்கு வீட்டிலையிருந்து வெட்டிக் கொள்ளுங்கோ..."

சிவனேசன் உரைத்த வார்த்தைகளில் பெரியதொரு கிண்டல் பொதிந்திருப்பதை உணர்ந்து அவமானத்தால் கூனிக் குறுகிப்போனார் இராசநாயகம். கோபத்தை வெளிக்காட்டினால் வந்த காரியம் கெட்டுப்போய் விடுமென அஞ்சியவர், அவனைப் பார்த்து போலிப் புன்னகையொன்றை உதிர்த்தபடி... அமைதியை வெளிக்காட்டி, அன்பொழுகும் பார்வையை வீசிக்கொண்டார்.

"அண்ணை நீங்கள் நினைக்கிற மாதிரியில்லை இப்போதைய உலகம். நீங்கள் இப்பவும் பழமையில ஊறிநிற்கிறியள். முந்தின மாதிரி உங்கடை வீடுகளுக்கு வந்து முடிவெட்டுவது தொடக்கம் கை நிகம் வெட்டி கமக்கட்டு மயிர் வழிப்பதுவரை... அதுகளெல்லாம் இனி வருங்காலத்திலை எங்களாலை செய்ய முடியாது. எங்கடை சந்ததியும் அதைச்செய்யாது. அதை நீங்கள் எதிர்பார்க்கவும் வேண்டாம். நாளைக்கு வியாழக்கிழமை. விரும்பினால் கடைக்கு வாங்கோ வெட்டி விடுகிறன்"

"சிவனேசன்! உனக்கு எவ்வளவு காசு வேணும் கேள். தாறன்."

சிவனேசனுக்கு முகம் சிவந்து விட்டது.

"பணத்தைக் காட்டி என்னை விலைக்கு வாங்கப் பார்க்கிறியா? அட போய்யா, நீயும் உன்ரை பணமும்...."

அவர் முன் காறித்துப்பிவிட்டு, கோபமாக வீட்டினுள் சென்று மறைந்தான் சிவனேசன்.

இறந்த காலத்தில் - தம் முன் இருந்து, பணிந்த ஒரு குலத்துக்கு முன்பாக மேலும், மேலும் அவமானப்படும் நிலையாகியது இராசநாயகத்துக்கு. எழுந்து வரும் ஆத்திரத்தை எதிலும் வெளிக்காட்டிக் கொள்ள முடியாத நிலையில் அவர் ஒழுங்கைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே தெருவில் கால்களை வைத்தபோது...

"சொந்த நாட்டிற் பிறர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்,
இனி அஞ்சிடோம்..."

தனியார் கல்விக் கூடத்திலிருந்து வகுப்பு முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த இளவயது மாணவ மாணவிகளில் ஒருவன் பாரதியின் பாடலொன்றைப் பாடியபடி... அவரைக் கடந்து அப்பால் சென்று கொண்டிருந்தான் தன் கூட்டத்தோடு...!

**- அலெக்ஸ் பரந்தாமன்**

நன்றி - நூலகத்திட்டம்



## சியாம் செல்வத்துரையின் 'FUNNY BOY'

## 'விசித்திரமான பையன்'



# பன்றிகளுக்குப் பறக்க முடியாது 7

தமிழில்:
எஸ்.கே.விக்னேஸ்வரன்

நான் என்னுடைய தூக்குப்பையி-லிருந்து சேலையை வெளியில் உருவி எடுத்துவிட்டு பையை அதனுள்ளே ஏதோ இருப்பது போன்ற தோற்றத்தைக்-காட்டக்கூடிய விதத்தில் மடித்து கட்டிலின் மீது வைத்தேன். பார்ப்பவர்களுக்கு அந்தப் பையினுள் ஏதோ இருப்பது போலத் தோன்றும் விதத்தில் அது கட்டிலில் கிடந்தது. சேலையை கையில் எடுத்துக் கொண்டு அறைக் கதவருகாகச் சென்று வெளியே பார்த்தேன். ஹோல் வெறுமையாக இருந்தது. நான் சோனாலியின் அறையை நோக்கி தவழ்ந்து சென்றேன். அவளது அறை அம்மா, அப்பாவின் படுக்கையறையை அடுத்து இருந்தது. அம்மாவின் அறையருகாக செல்லும்போது அறைக்கதவைப் பார்த்தபடி மெதுவாக ஊர்ந்தேன். காலிலிருந்து செருப்புக்களை கையில் எடுத்து அவற்றைச் சேலையுடன் சேர்த்துப்பிடித்துக் கொண்டேன். சோனாலியின் அறைக் 'கேட்டின்' காற்றில் மெதுவாக ஆடியது. யாரும் என்னைக் கவனித்துவிடக் கூடாதென்பதற்காக அதிலிருந்து விலகி நகர்ந்தேன். நேரம் முடிவுறாமல் இழுபடுவது போலிருந்தது. அம்மா என்னைத் தேடி அவளது அறைக்குப் போக ஹோலினூடாக நடந்து வருவது கேட்டது. நான் அவளது காலடி ஓசை கிட்ட நெருங்க நெருங்க இன்னுமின்னும் மெதுவாக சந்தடி இல்லாமல் ஊர்ந்தேன். ஹோலிலிருந்து திரும்பி அவள் தனது அறைக்குள் நுழைவதனை 'கேட்டினு'க்குக் கீழால் நான் கண்டேன். அவள் உள்ளே போனதும், நான் சட்டென்று எழுந்து 'கேட்டினை' விலக்கிக் கொண்டு ஹோல் பக்கமாக விரைந்தேன். அவள் தனது அறையிலிருந்து வெளியே வந்து என்னைக் கூப்பிட்டாள். நான் நிற்காமல் வேகமாக வெளியே ஓடினேன்.

நல்ல வேளையாக காரின் பின்புறக் கதவு திறந்திருந்தது. நான் பாய்ந்து அதனுள் ஏறிக்கொண்டேன். வேகமாக சேலையை சோனாலியின் பையினுள் திணித்தேன். பின்னர் சீற்றில் சாய்ந்து மூச்சுவிட்டேன். தோண்டியும், சோனாலியும் அதிசயமாக என்னைப் பார்த்தார்கள். ஆனால், அவர்கள் எதுவும் சொல்லவில்லை.

அம்மா காரில் வந்து ஏறியதும் என்னை உற்றுப்பார்த்தாள். நான் ஒரு அப்பாவி போல அவளை நோக்கினேன். சோனாலியைப் பார்த்து ஒரு இரகசியமான கள்ளச்சிரிப்பு சிரித்தேன். என்னுடைய மிகவும் உறுதியான கூட்டாளியான சோனாலி தனது முகத்தை திகைப்பு எதுவுமில்லாமல் சாதாரணமாக வைத்துக்கொள்வதை மிகவும் சிறப்பாகச் செய்தாள். அவளுக்கு விளக்குவது போல நான் சொன்னேன். "நான் இன்றைக்கு உங்களோடை விளையாட மாட்டேன். நான் பெடியங்களோடை தான் விளையாட வேணும் என்று அம்மா சொல்றா".

சோனாலி ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்தாள். பின் அம்மா பக்கமாகத் திரும்பி "ஏன் அவன் பெட்டையளோடை விளையாடக் கூடாது?"

'ஏன்' அம்மா கேட்டபடி காரை ஸ்ராட் பண்ணினாள். 'ஏனென்றால், வானம் மிகவும் உயரமானது. அத்துடன் பன்றிகளால் பறக்க முடியாது!'

அம்மாவின் குரல் இப்போது சற்று நிச்சயமற்றதாகவும், உடைந்து போனதாகவும் இருப்பதாகப்பட்டது எனக்கு. முன்னால் தோண்டி சீற்றிலே திரும்பி அமர்ந்தபடி என்னை முறைத்துப் பார்த்தான். இன்றைய நீண்ட பொழுது முழுவதும் நான் கிரிக்கற் விளையாடுவதிலிருந்து விடுபடாவிட்டால் இந்தப் பையிலுள்ள சேலையால் என்ன பயனும் இல்லை என்று மனதில் தோன்றிக்கொடே இருந்தது.

அப்பாச்சி வீட்டுக்குச் செல்வது வரையும் நான் தோண்டியின் பின்புறத்தையே ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவனுள் ஏதாவது துாண்டல் நடக்கும் என்ற எதிர்ப்பார்ப்புடன் அவன் எரிச்சலுடன் தனது காலால் காரின் கீழ்ப்பகுதியில் உதைத்துக் கொண்டிருக்கும் சத்தம் எனக்குக் கேட்டது. என்ன மோசமான விளைவுகள் வந்தாலும் அவன் எப்படியும் அம்மா சொன்னபடிதான் செய்யப்போகிறான் என்று இது எனக்கு உணர்த்தியது. அவனது இந்தக் காலால் உதைக்கிற செயலால், எப்படி பெடியன்களுடன் கிறிக்கற் விளையாடாமல் தப்பலாம் என்று தவித்துப்போய் யோசிப்பதில் எனது மனம் அலைக்கழிந்து கொண்டிருந்தது.

கார் ராமநாயகம் வீதியில் திரும்புகிற வரைக்கும் எனக்கு எந்த யோசனையும் தோன்றவில்லை. மீனா ஏற்கெனவே தோட்டச் சுவரின் மேல், கால்களை அகலப்பரப்பியபடி நின்றிருந்தாள். அவள் தனது கைகளை வாயில் வைத்துக் கொண்டிருந்தாள். அவளது கட்டையான உடைக்குக் கீழால் தெரிந்த காற்சட்டை ஏற்கெனவே அழுக்காகி இருந்தது. சுவருக்கு மேலே அவளின் இருபுறமும் பெடியங்கள் நின்றிருந்தார்கள்.

அப்பாச்சிக்கும், அம்மாச்சிக்கும் எங்கள் வணக்கத்தை தெரிவிப்பதற்காக நாங்கள் போனபோது நான் சோனாலியிடம் சேலையை ஒழித்து வைக்குமாறும், யாருக்கும் சொல்ல வேண்டாமென்றும் குசுகுசுத்தேன். நாங்கள் வரவேற்பறையை அடைந்தபோது தொக்கையம்மா வழமைபோல காந்தி அன்ரியின் முழங்காலுக்கு கீழ் நின்றபடி என் மீது ஒரு வெற்றிப்பெருமிதப் பார்வையை ஓடவிட்டாள். இந்தக் கிறிக்கற்றிலிருந்து தப்புவதற்கான எந்தத் திட்டமும் எனக்கு இன்னமும் பிடிபடவில்லை என்பதால், என்னுள் ஒருவகையான பதட்டம் கலந்த அச்சம் பரவிக்கொண்டிருந்தது.

வழமையான, எங்களது கன்னத்தை அப்பாச்சிக்கும், அம்மாச்சிக்கும் நீட்டுகிற சடங்கை முடித்த பின்னர் அம்மாவை வழியனுப்பி வைக்க வெளியே போனோம்.

"பிள்ளைகள் நல்ல பிள்ளையாக விளையாட-வேணும்" அம்மா காரினுள் ஏறுமுன் சொன்னாள். பிறகு என்னை நோக்கி, 'அம்மாச்சிக்கும், அப்பாச்சிக்கும் கரச்சல் குடுத்ததாக நான் கேள்விப்படக் கூடாது' என்றாள்.

அம்மாவின் கார் போவதை கவலையுடன் பார்த்துக் கொண்டு நின்றேன்.

தோண்டி எனது கையைப் பிடித்தான். அவன் பாதையைக் கடக்கும்போது நான் அவனுடன் மனமில்லாமல் தொடர்ந்தேன். அவன் எங்கே நான் தன்னை விட்டுவிட்டு ஓடிவிடுவேனோ என்று பயந்தவன் போல் என்னை இன்னமும் பிடித்திருந்தான்.

விக்கட்டுக்கள் ஏற்கெனவே மைதானத்தில் நாட்டப்பட்டிருந்தது. பெடியங்களும், மீனாவும் ஒரு கொய்யா மரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தார்கள். நாங்கள் அவர்களை நோக்கிப் போவதைக் கண்டதும் அவர்கள் கதைப்பதை நிறுத்திவிட்டு எங்களைப் பார்த்தார்கள்.

தோண்டியின் அணியிலிருந்த முருகேஸ் எழுந்து நின்றான். 'இவன் ஏன் வாறான் இஞ்சை...?' - பாதி கடித்த கொய்யாப் பழத்தை என்னை நோக்கி வீசியபடி கேட்டான் அவன்.

"அவனும் எங்களுடன் விளையாட போகிறான்"

"என்ன?" - எல்லோரும் வியப்புடன் கூவினார்கள்.

தோண்டிக்கு விசர் பிடித்து விட்டதோ என்று கேட்பது போல அவனை நோக்கினார்கள் அவர்கள்.

"அவன் எங்கடை அணியிலையா விளையாடப் போகிறான்?" முருகேஸ் கேட்டான். கேள்வி என்பதை விட அது ஒரு வகை மிரட்டல் என்றே சொல்ல வேண்டும்.

"அவன் பரவாயில்லை, விளையாடுவான்" தோண்டி அரைமனதுடன் சொன்னான்.

"அவன் எங்கடை அணியிலை நிப்பான் எண்டால் நான் மற்ற அணிக்குப் போயிடுவன்"

- முருகேச தான் சொன்னான். மற்றவர்களில் ஒரு சிலர் அந்த ஆமோதிக்கவும் செய்தனர்.

"இல்லையடாப்பா.... அவனைச் சேர்ப்பம்" - தோண்டி உடைந்து போன குரலில் கூறினான். ஆனால், முருகேஸ் அசைந்து கொடுக்கவில்லை.

தோண்டி மீனாவை நோக்கினான்.. "நான் அர்ஜேயை சஞ்ஜேக்காக உனக்கு மாத்தித் தாறன் உன்ரை அணியிலை சேர்க்கிறியா?" என்று கேட்டான் அவனிடம்.

மீனா தான் சாப்பிட்டுக் கொண்டிருந்த கொய்யாப் பழத்தின் கொட்டைகளை துப்பியபடி கேட்டாள்" எனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கெண்டு நினைக்கிறாயா?"

"ஆ... சேர்ப்பம் அவனை, அவன் விளையாடுவான்... நாங்கள் போன கிழமை முழுக்க வீட்டிலை பயிற்சி செய்தனாங்கள்...." தோண்டி பசப்பினான்.

"அவன் அவ்வளவு நல்லவனெண்டால் ஏன் நீயே அவனை வைச்சிருக்கக்கூடாது? அவன் இருந்தால் சிலவேளை உன்ரை அணி வெல்லவும் கூடும்?"

"ஓம்..." சஞ்ஜே கத்தினான். தன்னை எனக்குச் சமனாகக் கருதி மாத்துவதாகத் தோண்டி சொன்னது அவனுக்குப் பெரிய அவமதிப்பாக இருந்திருக்க வேண்டும்" ஏன் நீயே இந்தப் 'பெம்பளைப் பெடியனை' வைச்சிருக்கக் கூடாது!"

இந்தப் 'பெம்பளைப் பெடியன்' என்ற புதிய பட்டப்பெயரைக் கேட்டதும் எல்லோரும் கொல் என்று சிரித்தார்கள். தோண்டிக்குகூட சிரிப்பு வரத்தான் செய்தது.

நான் யாருக்குமே வேண்டப்படாதவனாக இருக்கிறேன் என்ற இந்த நிலை எனக்கு அவமானத்தையும் சோர்வையும் ஏற்படுத்தி இருக்க வேண்டும். ஆனால், இதற்கு மாறாக, விடுதலையும், நிம்மதியும் கலந்த ஒருவகை உணர்வு என்னுள் நடனமாடுவதை நான் உணர்ந்தேன். நான் எதிர்பார்த்த கிறிக்கட் விளையாட்டிலிருந்து தப்பிக்கொள்வதற்கான வாய்ப்பு எந்தக் கஷ்டமும் படமாலேயே எனக்குத் தானாகவே கிடைக்கப்போகிறது. தோண்டியின் அணியிலுள்ள சிறந்த உறுப்பினர்கள் அவனை விட்டுவிட்டுப் போவதாக மிரட்டினால், அவனுக்கு என்னை விடுவதைத் தவிர வேறு வழி இருக்காது. எனது கண்களில் நிரம்பி வழிந்த நம்பிக்கையையும், சந்தோசத்தையும் அவர்கள் கண்டுவிடக் கூடாதே என்பதற்காக நான் எனது கால்களைப் பார்த்தபடி நின்றேன்.

துரதிருஸ்டவசமாக 'பெம்பிளைப் பெடியன்' என்ற பட்டப்பெயர் கொடுத்த தாக்கத்திலிருந்து என்னால் விடுபட முடியவில்லை. என்னைப் பற்றிய பட்டப்பெயரால் ஏற்பட்ட சிரிப்பு நிலைமையை சமப்படுத்தியது. பலமாகச் சிரித்து முடித்த முருகேஸ் தனது மிரட்டலிருந்து பின்வாங்கினான். "போனால் போகட்டும்" - அவனது குரலில் மெல்லிய கனிவு தொனித்தது. 'இன்னொரு ஆளை விளையாட்டில் சேர்த்துக்கொள்வதில் எனக்கு பெரிய பிரச்சினையில்லை. ஆனால்..." என்று நிறுத்தி, தோண்டியை எச்சரிப்பது போல சொன்னான். 'ஆனால், அவன் பந்து அடிக்க முடியாது'

தோண்டி, தான் முன்னரே இதை யோசித்தது போலவும், என்னைப் பந்து அடிக்க விடுவது என்ற எண்ணமே அவனுக்கு இருக்கவில்லை என்பது போலவும்'இதற்கு - ஓமென்று தலை ஆட்டினான். ஒவ்வொரு அணியும் ஐம்பது ஐம்பது ஓவர்கள் மட்டுமே விளையாடுவதாலும், எப்போதும் நன்றாகப் பந்து அடிக்கக் கூடியவர்களையே முதலில் விடுவதாலும், அனேகமாக வயது குறைந்தவர்களுக்கு பந்து அடிக்கும் வாய்ப்புக் கிடைப்பதே இல்லை.

நான் முருகேசை உற்றுப் பார்த்தேன். அவன் எனது பார்வை 'பெம்பிளை பெடியன்' என்ற புதிய பட்டப்பெயருக்கான எனது எதிர்ப்புப்பார்வை என்று நினைத்ததாலோ என்னவோ திரும்பவும் 'பெம்பிளை பெடியன்' என்று சொன்னான்.

தோண்டி இப்போது பலத்துச் சிரித்தான். அவனது சிரிப்பில் ஒரு குழைவும் தனது அணி தோற்பதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதென்ற நிம்மதியும் இருப்பதை நான் அவதானித்தேன். மீதியாக அவன் செய்வதெல்லாம் அம்மாவின் உத்தரவை நிறைவேற்றுவதும், தனது அணியை சேர்ந்தவர்களை சந்தோசமாக வைத்திருப்பதற்கு முயல்வதும் தான்.

இவையெல்லாம் வெறும் உறுதியற்ற சாட்டுக்குச் செய்யும் செயல்கள் தான் என்பது எனக்குத் தெளிவாக தெரிந்தது. என்னைப் பொறுத்தவரை எல்லாமே முடிந்துவிட்டதென்ற நிலை இன்னும் வரவில்லை. இந்த அரும்பொட்டான நிலை, நிலைமையை எனக்கு சாதகமாகக்கிக் கொள்ளக்கூடிய விதத்தில் கவிழ்த்துவிடக் கூடிய சந்தர்ப்பம் இதுதான் என்று உணர்த்தியது.

இந்த வாய்ப்பை உடனடியாகப் பயன்படுத்தியாக வேண்டும்.

(வரும்)



மைக்கேல் ஒன்டாஜியின்

அனிலின் ஆவி:

# வரலாற்றுத் தவிர்ப்பும் மௌனத்தின் அர்த்தமும்

**'கதையை எப்படி எழுதுவது என்பது பற்றி - எவ்வாறு இலங்கை யுத்தம் பற்றி எழுதப் போகிறேன் என்பது பற்றி எனக்கு நிச்சயமில்லாமல் இருந்தது. பிற்பாடு நான் முடிவு கட்டினேன்: அரசியலில் நேரடியாக ஈடுபடாதவர்களின் பார்வையிலிருந்து யுத்தத்தில் நேரடியாகப் பங்கு பற்றாதவர்களின் பார்வையிலிருந்து கதையை எழுதுவது என்று தீர்மானித்தேன்'**

Michael Ondatje's Cubist Civil War
Interview with ondatjee by Powell:

– யமுனா ராஜேந்திரன்

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

கண்ணிழந்த அகழ்வாராய்ச்சியாளரும் சரத்தின் ஆசிரியருமான பாலிபானாவைச் சந்திக்கிறார்கள். பாலிபானாவின் சகோதரி மகள் லக்மாவின் உதவியோடு ஆழ்ந்த காட்டுக்குள் வாழ்கிறார். அப்பெண்ணின் பெற்றோர் உள்நாட்டு யுத்தத்தில் கொல்லப்படுகிறார்கள். மாலுமியின் முகத்தைக் கட்டமைக்க அமர்த்தப்படும் ஆனந்தா இறுதியில் காணாமல் போன தனது மனைவியின் முகத்தைக் கட்டமைக்கிறான். மாலுமி நிஜத்தில் ஒரு கள் இறக்கும் தொழிலாளி. கால் உடைந்ததால் அருகிலிருக்கும் சுரங்கத்தில் வேலை செய்யப் போனவன். ஜே.வி.பியின் அனுதாபி. அதனால் கொன்று புதைக்கப்பட்டவன். அவனது பெயர் ருவன் குமார. இடையில் கொழும்பு செல்லும் சரத் அரசாங்கத்தினதும் ராணுவத்தினதும் வற்புறுத்தலுக்கு ஆளாகிறார். மேற்கொண்டு அவரால் அனிலுக்கு உதவ முடிவதில்லை. அனில் இதைத் துரோகம் என்கிறாள். கொழும்பில் மாலுமியின் பிணம் அகற்றப்பட்டு வேறோரு பிணம் வைக்கப்படுகிறது. புதைகுழி ஆய்வுகள் மாலுமி பற்றிய ஆய்வுக் குறிப்புக்களை ராணுவம் கைப்பற்றுகிறது. அனிலைக் கோபத்தில் அறையும் சரத் அவளைக் கொல்லப்படுவதினின்று தப்புவிக்கிறார். சில நாட்களின் பின் கொல்லப்பட்டு வீசப்பட்ட தனது சகோதரன் சரத்தின் பிணத்தை காமினி காண்கிறார். இடையில் காமினி ஜே.வி.பி. போராளிகளால் கடத்திச் செல்லப்படுகிறார். ஒரு சமயம் கிழக்கு மாகாணத்தில் தமிழ்ப் போராளிகளால் கொல்லப்பட்ட வெகுமக்களுக்குச் சிகிச்சையளிக்கச் செல்கிறார். சாவு பிரிவு கொலைகள் குருதி கொலைக் கருவிகள் பிணவறைகள் மருத்துவமனை வாசனைகள் மரபு மீறிய உடல் உறவுகள் வன்முறை என தென்னிலங்கையின் போர் வாழ்வை ஒன்டாஜி உண்மையில் அதியற்புதமாகப் பதிவு செய்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தடயவியல் நிபுணர் அரசு சார் நிறுவனமான அகழ்வராய்ச்சி நிறுவனங்களில் செயல்படுவோர் மருத்துவ நிபுணர்கள் அரசு அலுவலர்கள் ராணுவ அதிகாரிகள் போன்றவர்களின் பார்வை தான் நாவலின் விவரண முறைமையாக நரேஷனாக - அமைகிறது. முகம் கட்டமைக்கும் ஆனந்தாவுக்கு குரல் இல்லை. ஜே.வி.பி. அனுதாபி எனக் கொல்லப்பட்டு மரணித்துப் போன மாலுமிக்குக் குரல் இல்லை. தற்கொலைப் போராளிக்குக் குரல் இல்லை. காமினியைக் கடத்திப் போகும் ஜே.வி.பி. போராளிகளுக்குக் குரலில்லை. துப்பாக்கிகளுடன் சமர் நோக்கிப் போகும் பதின்மூன்று வயசுச் சிறுவர் சிறுமிகளுக்குக் கூட குரல் இல்லை. துப்பாக்கிகளுடன் அலையும் முகமற்ற அருவங்களாகவே இதில் போராளிகள் இயங்குகிறார்கள். அதிலும் தமிழ் மக்களுக்கும் அவர்களது பிரச்சினைகளுக்காகப் போராடப் புறப்பட்ட தமிழ்ப் போராளிகளுக்கும் இந்நாவலில் இத்தகைய அருவமான முகங்கள் கூட சித்திரிக்கப்பட.வில்லை. நாவலின் வடிவத்தில் பாத்திரத் தேர்வு எடிட்டிங் முன் பின்னாக மாற்றங்கள் செய்தது கதையின் சமநிலைக்காகத் திரும்ப எழுதியது போன்ற பல்வேறு விஷயங்களின் தான் பிரக்ஞையுடன் இயங்க நேர்ந்தது பற்றி பாவலுடனான நேர்முகத்தில் ஒன்டாஜி வலியுறுத்திச் சொல்கிறார். பாத்திரத் தேர்வுக்கேற்பவே நாவலும் உருவாகியிருக்கிறது. அரசியலற்ற அறிவுஜீவிகளைப் பாத்திரமாகக் கொண்ட அரசியலற்ற அரசியல் நாவல் அனில்ஸ் கோஸ்ட்.

நாவலின் இயக்கம் என்பது தேர்ந்து கொள்ளும் கதைமாந்தரின் தர்க்கபூர்வமான இயங்குதலுக்கு ஏற்பவே வடிவம் கொள்கிறது. இந்த நாவல் போராட்டத்தினால் துன்புறும் மக்கள் பற்றிய நாவல் அல்ல. போராட்டம் தோன்றியதற்கான அரசியல் சமூக வரலாற்றுச் சூழலை அதனது மானுட அனர்த்தங்களுடன் சொல்லும் நாவல் அல்ல. இந்த உள்நாட்டு யுத்தத்தின் ஆதாரமானவர்களும் உயிர்ப்புள்ள பங்காளர்களும் ஆன பாத்திரங்களை இந்த நாவல் தனது கதை மாந்தர்களாகத் தேர்ந்து கொள்ளவில்லை. இந்தப் பிரச்சினையை துார நின்று நோக்கும் சமூகத்தின் மேல்தட்டு மனிதரின் பார்வையிலும் பொத்தாம் பொதுவான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பார்வையிலும் தான் கட்டமைப்புப் பெறுகிறது. நாவலின் கதை மாந்தரும் கதைக்களமும் தேர்வு செய்யும் உரிமையை ஒரு கதாசிரியருக்கு எவரும் பரிந்துரை செய்யமுடியாது. ஆனால் தார்மீகத் தன்மையுடன் சில கேள்விகளை அறிந்த வாசகர் எழுப்பமுடியும் :

1.நாவலின் அறிமுக விவரணமும் ஆசிரியரின் நாவலுக்கு வெளியிலான பல்வேறு நேர்முகங்களிலும் கோரிக் கொள்வதைப் போல இந்நாவல் உள்நாட்டு யுத்தம் பற்றிய மூன்று தரப்பினர் பங்கு பெறும் பிரச்சினை பற்றிய நாவல் தானா?

2. இந்நாவல் சில விமர்சகர்கள் புரிந்து கொள்கிறபடி ஜே.வி.பி. கிளர்ச்சிக் கால கட்டம் பற்றி நாவல் மட்டும் தானா?

3.நாவல் சார்ந்திருப்பதாகச் சொல்லப்படும் இலங்கைக் கல்வியாளர்களும் ஆய்வாளர்களும் மனித உரிமையாளர்களும் உண்மையில் பிரச்சினையின் சமநிலையைப் பேணுமாறு தேர்ந்து கொள்ளப்பட்டிருக்கிறார்களா?

4.இலங்கையில் தமிழர் சிங்களவர்கள் தவிரவும் இன்னும் இரண்டு இனக்குழு சமூகத்தவர்கள் இருக்கிறார்கள். தமிழ் பேசும் முஸ்லீம் சமூகத்தினர் மற்றும் மலையகத் தமிழர். குறிப்பிட்ட எண்பதுகள் தொண்ணூறுகளில் இவர்களின் பிரசன்னம் வரலாற்றுத் தருணத்திலும் அரசியல் காலத்திலும் இப்பிரச்சினைக்குள் வாழவில்லையா?

இக்கேள்விகளை எல்லாம் கேட்டுக் கொள்ளாமல் இந்நாவல் இலங்கை உள்நாட்டு யுத்தம் பற்றிய மூன்று தரப்பினர் பற்றிய நாவல் என்றும் ஆய்வின் மீதான நாவல் என்றும் தன்னைக் கோரிக் கொள்ள முடியாது. ஆசிரியரும் அவ்வாறான சித்திரத்தைத் தருவது எவ்வகையிலும் நியாயமில்லை. இந்நாவல் எழுப்பும் மனித உரிமை பற்றிய புரிதலும் மேற்கத்திய வகைப் மனித உரிமைப் புரிதல் தான். சாவுகள் பிணக்குழிகள் மரணங்கள் சார்ந்தவை மட்டுமே மனித உரிமை அக்கறைக்குரியவை என்று அமெரிக்க ஆதிக்கத்திலான ஐக்கிய நாடுகள் சபையும் அதனது சித்தாந்திகளும் தடயவியலாளர்களும் கருதுகிறார்கள். ஆனால் இவை மனித உரிமையின் ஒரு பக்கம் மட்டுமல்ல குறிப்பிட்ட பிரச்சினையின் இரண்டாம் கட்டத்தில் தான் இம்மனித உரிமை மீறல்கள் நிகழ்கிறது. முதல் கட்டமாக இந்த மனித உரிமை மீறல்களுக்கான ஆதாரமான அனர்த்தம் வாய்ந்த மனித உரிமை மீறல்களையும் ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். அரசு திட்டமிட்டு பட்டினி போட்டு ஒரு ஜன சமூகத்தைக் கொல்வது மனித உரிமை மீறல்- பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தி புதைகுழியில் கூட்டமாகப் புதைப்பது மனித உரிமை மீறல் - ஆயிரக்கணக்கான காணாமல் போனவர்களின் பட்டியலை ஒப்புவிப்பது மனித உரிமை மீறல் - கல்வி கற்பதற்கான அடிப்படைத் தேர்வை மறுப்பது மனித உரிமை மீறல் - ஒரு மக்கள் கூட்டத்தின் கலாசார அடையாளத்தை ஒப்புக் கொள்ள மறுப்பது மனித உரிமை மீறல் - இந்த அடிப்படை மனித உரிமை மீறல்களில் பெரும்பான்மை சமூகத்தினரும் அரசும் மேற்கொள்ளும் நிலைப்பாடுகள் தான் பாரிய அளவிலான இரண்டாம் கட்ட மனித உரிமை மீறல்களுக்கும் மரணங்களுக்கும் புதைகுழிகளுக்கும் இட்டுச் செல்கிறது. உண்மையில் மனித உரிமை பற்றிய ஆழமான எழுத்து என்பது பிரச்சினையின் தோற்றம் குறித்த சமூகப் பொருளியல் அரசியல் கலாசாரக் காரணிகளைத் தீர்க்கமாக ஆய்வு செய்வது தான்.

உள்நாட்டு யுத்தம் குறித்ததும் அன்னியர்களால் எடுக்கப்பட்டதுமான சில அற்புதமான திரைப்படங்களை நான் இதற்குச் சான்றாதாரமாகக் காட்ட முடியும். ஆலிவர் ஸ்டோனின் எல்ஸால்வடார் கெரில்லாக்கள் பற்றிய ஸால்வடோர். சிலியின் ராணுவ ஆட்சி பற்றிய கோஸ்டோ காவ்ரஸின் மிஸ்ஸிங். அல்ஜீரிய உள்நாட்டு யுத்தம் பற்றிய ஜில்லோ பொன்ட கார்வோவின் பாட்டில்ஸ் ஆப் அர்ஜியர்ஸ். அயர்லாந்து இயக்குனர் ஜோர்டன் இயக்கிய மைக்கேல் கோலின்ஸ் போன்றவை அப்படங்கள். ஆலிவர் ஸ்டோன் அமெரிக்கர். காவ்ரஸ் கிரீசைச் சார்ந்தவர். பொன்ட கார்வோ இத்தாலியர். ஜோர்டன் மட்டுமே அமெரிக்காவில் வாழும் அயர்லாந்துக்காரர். இப்படங்களில் அனைத்திலுமே உள்நாட்டு யுத்தங்களுக்கு அடிப்படைக் காரணக்காரர்கள் அமெரிக்கர், பிரெஞ்சுக்காரர், பிரிட்டிஷ்காரர்கள் என்பது தெளிவாக முன் வைக்கப்படுகிறது. அது மட்டுமல்ல மிக முக்கியமாக குறிப்பிட்ட இயக்கங்கள் போராடப் புறப்பட்டதின் அரசியல் பொருளியல் கலாசாரக் காரணங்களும் போராளிகள் தரப்பு நியாயங்களும் சமநிலையுடன் வைக்கப்படுகின்றன. இந்தப் படைப்புக்களை ஒப்பிடும் போது அனில்ஸ்ட் கோஸ்ட்டில் சொல்லப்பட்டிருக்கும் மனித உரிமை குறித்த பிரச்சினைகள் ஆழமற்றவை வரலாறு தவிர்த்தவை சமநிலை பிறழ்ந்தவையாகும்.

பிணங்கள் மரணங்கள் புதைகுழிகள் சார்ந்த கடந்த கால மனித உரிமையை மட்டுமே பொத்தாம் பொதுவாக வலியுறுத்திக் கொண்டு வாழும் நிகழ்கால மனிதர்களின் உயிர் வாழ்தல் தொடர்பான மனித உரிமைகளை மறுத்து விடுவது ஒரு வகை அமெரிக்க வகை மேற்கத்திய வகை ஐக்கிய நாடுகள் சபை சார்ந்த மனித உரிமைக் கருத்தாக்கமாகும். இதைப் பற்றிநிற்கிற மேற்கத்திய வாசகர்களைக் கவனம் கொண்டுதான் இந்நாவல் எழுதப்பட்டிருக்கிறது. அன்னியமாயிருத்தலும் அன்னியப்படுத்திக் கொள்ளதலும் வெளியாளாகக் கழிவிரக்கம் கொள்ளுதலும் அடிப்படைப் பிரச்சினைகளில் நிலைப்பாடு எடுக்காமல் இருக்கும் வகையிலும் தான் இந்நாவலின் பாத்திரங்கள் அமைந்திருக்கிறார்கள். இந்த அன்னிய மனநிலை அனில் திஸ்ஸராவுக்கு மட்டும் உரியதல்ல மைக்கேல் ஒன்டாஜிக்கும் உரியதுதான்.

ஒன்டாஜியின் மொழி கவிதை மயமானது. சிதறுண்ட உறவுகள் கொண்ட கதாபாத்திரங்களுக்கும் அவர்களது பதட்டமான மனநிலைக்கும் பாலுறவு வேட்கைகளுக்கும் சிதைவுண்ட அகழ்வாராய்ச்சி இடிபாடுகள் புதைகுழிகள் பிணக்கிடங்குகள் போன்றவை ஏற்படுத்தும் நொருங்கிய மனநிலைக்கும் ஒருவர் உளவியல் ரீதியில் தர்க்கபூர்வமான உறவைக் காணமுடியும். ஒன்டாஜி அந்தச் சுழலை மொழிக்குள் கொண்டு வந்து வாசகரை அதற்குள் ஆழ்த்தி விடுகிறார். இங்கிலீஷ் பேஷன்ட் நாவலில் மணல் புயலை வர்ணிக்க எடுத்துக் கொள்ளும் பக்கங்கள் போலவே பாலிபானாவின் ஆழ்ந்த விட்டு விலகிய காட்டு வாழ்வை விவரிக்கவும் அவர் பல பல பக்கங்களை எடுத்துக் கொள்கிறார். ஒன்டாஜி நாவலின் இயற்கையையும் மானுடச் சூழலையும் விளக்க நிறைய படிப்பவர் என்பது அவரது வாசகர்கள் அனைவரும் அறிந்ததே. ஆழ்ந்த மொழியழகும் தடயவியல் பற்றிய அகழ்வாய்வு பற்றிய ஆய்வறிவும் நாவலெங்கும் விரவிக்கிடக்கிறது.

சந்தேகமில்லாமல் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களையும் அவமானகரமான கொலைத் திட்டங்களையும் சர்வதேச சமூகத்தின் முன் வைத்திருக்கிறது எனும் அளவில் இந்நாவல் முக்கியமான நாவல் தான். நிறவெறி எதிர்ப்பாளரும் ரேஸ் அன்ட் கிளாஸ் ஆசிரியருமான சிவானந்தனின் "நினைவுகள் இறக்கும் போது" ( வென் மெமெரீஸ் டைஸ்) நாவலையும் ஸியாம் செல்வதுரையின் "Funny Boy" நாவலையும் அனில்ஸ் கோஸ்ட்டோடு சேர்த்து வாசிப்பது நமக்கு நாவல் சார்ந்த பல்வேறு பாத்திரப் படைப்பு மற்றும் தேர்வு சார்ந்த பிரச்சினைகளையும் அரசியல் காலம் - வரலாற்றுத் தருணம் சார்ந்த பிரச்சினைகளையும் புரிந்து கொள்ள உதவும். இறுதியாக தமிழ்மக்களின் பிரச்சினைகள் குறித்து அனில்ஸ்கோஸ்ட் நாவலில் உறைந்திருக்கும் நீண்ட மௌனம் (ஆசிரியரின் நேர்காணல்க்ளில் ஆன மௌனம்) நம்மிடம் அழுத்தமான நிராகரிக்கப்பட்ட அர்தத்தங்களை தேடிக் கண்டு பிடிக்குமாறு கோருகிறது.

அமெரிக்காவின் இடதுசாரி இதழான நேஷன் சஞ்சிகையில் ஒன்டாஜியின் அனில்ஸ் கோஸ்ட்டுக்கு எழுதிய விமர்சனமொன்றில் டோம் கிளார் முன்வைக்கும் கேள்வி இச்சூழலில் மிக நியாயமானதாகும் :

"தனது நிஜமான வார்த்தைகளினாலும் அழகான சொற்றொடர்களாலும் தனது கதையை எழுதுவதற்கு நடமாடும் ஆவிகளை ஒன்டாஜி தேர்ந்து கொண்டிருக்கிறார். கிலியூட்டப்பட்ட அரசியலற்ற வாழும் மனிதர்களைத் தேர்ந்து கொண்டிருக்கிறார். அப்படியானால் மரணமுற்றவர்கள் பற்றி அவரது பார்வை என்ன? கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான பெண்கள் ஆண்கள் - தமிழர்கள் சிங்களர்கள் - பணக்காரர்கள் ஏழைகள் -காதலித்தவர்கள் காதலிக்கப்பட்டவர்கள் - அரசியல் நோக்கங்களுக்காக இறந்தவர்கள் அல்லது கொல்லப்பட்டவர்கள் - எவ்வாறு அவர்கள் தவறாக வழிநடத்தப்பட்டிருந்த போதிலும்- தேவை கருதியோ அல்லது பைத்தியகாரத்தனமாகவோ- ஒன்டாஜி தரும் மரியாதையை விடவும் புரிதலை விடவும் அவர்கள் அதிக மரியாதைக்கும் புரிதலுக்கும் தகுதியானவர்கள்."

**பின்குறிப்பு :**


ஒன்டாஜியின் பாவலுடனான நேர்முகம் மற்றும் டோம் கிளாரின் விமர்சன வரிகள் போன்றவற்றை பாவலின் இணைய தளம் மற்றும் அமெரிக்க நேஷன் இதழின் இணைய தளம் போன்றவற்றிலிருந்து பாவித்திருக்கிறேன்.

நன்றி - நூலகத்திட்டம்



## நினைவுக் குறிப்புகள் – 14

ஒரு அரசியல் கட்சி என்ற முறையில் ல.ச.ச.கட்சியின் யுத்த கால அமைப்பின் தன்மை எப்படி இருந்தது என்பது பற்றிய ஒரு பதிவு, நான் இதுவரை எழுதியவற்றிலிருந்து வாசகர்களுக்கு கிடைத்திருக்கும் என்று நினைக்கின்றேன். இந்தக் கட்சி வெறுமனே ஒரு விண்ணப்படிவத்தைப் பூர்த்திசெய்து அங்கத்துவப் பணத்தைக் கட்டி கட்சிக் கொள்கைகட்கு ஆதரவாக இருப்பதாக அறிவித்துவிட்டு அதில் ஒருவர் சேர்ந்து கொள்ளக்கூடிய கட்சி அல்ல. நீங்கள் முதலில் கட்சியால் தகுதியானவர் என்று தெரிவுசெய்யப்பட வேண்டும். அதாவது கட்சியின் அமைப்புக்கள் உங்களைப்பற்றி திருப்தி தெரிவிக்க வேண்டும். உங்களுக்கு கட்சியின் குறிக்கோள்கள், திட்டங்கள் பூரணமாக தெளிவாகியுள்ளன என்றும், கட்சி வேலைகளில் தீவிரமாக பங்கேற்கும் அளவுக்கு உங்களை நம்பமுடியும் என்றும் அவை நம்பவேண்டும்.




தலைமறைவு வாழ்க்கை
றெஜி சிறிவர்த்தன

ஒரு புரட்சிகர அரசியல் கட்சியின் இயல்புகளுடன் பரிச்சயமில்லா சில வாசகர்கள் காலனிய பொலிசாரின் கவனத்திற்குள் சிக்காமல் இருப்பதற்காகவே இப்படி உறுப்பினர்களை சேர்க்கும் தன்மை இருந்தது என்று நினைக்கக் கூடும். ஆனால், உண்மையில் அது அல்ல காரணம். பகுதிசட்ட விரோத நிலையிலிருந்து பின்னர் முழுமையான சட்டவிரோத நிலைக்கு தள்ளப்பட்டதன் காரணமாக நிச்சயமாக கட்சி தனது யுத்தக் காலத்திற்கு முந்திய இறுக்கமற்ற வெளிப்படையான, மக்கள் கட்சியாக இருந்த நிலையிலிருந்த வேகமாக விலகிச்செல்ல வேண்டியிருந்தது உண்மைதான். ஆனால், வெவ்வேறு அடிப்படைகளில் இருந்து உருவான தத்துவார்த்தப் போக்குகள் தான் உண்மையில், இந்த மாற்றத்திற்கு உள்ளாகும் நிலைக்கு கட்சியை தள்ளிச்சென்றிருந்தன.

இதற்குப் பின்னால் ஒரு நீண்ட கதை இருக்கிறது. ஒரு புரட்சிக் கட்சியின் அமைப்பு மற்றும் அதன் கட்டமைப்பு என்பன தொடர்பான சிந்தனைகளும், விவாதங்களும் சர்வதேச மாக்சிய இயக்கத்தில் தொழிற்பட்டு வந்திருந்தன. அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாகவே இது இருந்தது. இந்த விவாதங்கள் 1903இல் ஆரம்பமாகியிருந்தன. இறுக்கமான வலைப்பின்னல் அமைப்பைக் கொண்ட கட்டுப்பாடும் மையப்படுத்தப்பட்ட தன்மையும் கொண்டதாகக் கட்சி இருக்க வேண்டும் என்ற அவரது கோட்பாட்டுக்கு அமைய செயற்பட வேண்டுமென்ற நிலைகாரணமாக ஒரு சில சமூக ஜனநாயகக் கட்சியை அப்போது உடைத்தார்.

**கட்சி உறுப்பினர்கட்கு சிங்கள மொழியில் படிப்பதற்கு எதுவும் இருக்கவில்லை!**

கட்சியானது தொழிலாள வர்க்கத்தில் நலன்களை முன்னெடுத்து சென்று இறுதியில் அதன் விடுதலையை காண்பதற்காகப் போராடுவதாகவும் செயற்படும். இது தொழிலாள வர்க்கத்தின் முன்னணியைப் படையாக கட்சியின் முன்நின்று வழிகாட்டும் அமைப்பாக, சிந்தனையிலும் உணர்திறனிலும் வர்க்கத்தைவிட முன்னேறியதாகவும், புரட்சிகர நோக்கங்களுக்காக முழுக்க முழுக்க தன்னை அர்ப்பணித்ததாகவும் இருக்கும். இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் தான் ருசிய சோசலிச ஜனநாயக கட்சி போல்ஸ்விக், மென்ஸ்விக் கட்சி என்று பிளவுற்றது. அன்று இருந்த எல்லா மாக்சிஸ்டுக்களும் போல்ஸ்விக் நிலைப்பாட்டையோ அல்லது லெனினின் இந்த நிலைப்பாட்டையோ ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்ல முடியாது. றோசா லக்சம்பேர்க் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ட்ரொஸ்கி 1904இல் இதுபற்றி இவ்வாறு சொன்னார். போல்ஸ்விசத்தின் வெற்றி கட்சி அமைப்புக்கள் முழுக் கட்சிக்குமான பதிலீடுகளாக மாறுவதிலும் பின்னர் கட்சி அமைப்புகளுக்கு மத்திய கமிட்டி பதிலீடாக மாறுவதிலும். இறுதியாக ஒரு நபர் - தனிச் சர்வாதிகாரி, தன்னை மத்திய கமிட்டிக்குப் பதிலான ஒருவராக நிறுவும் நிலைக்கு இட்டுச் செல்லும். இன்று ட்ரொஸ்கியின் இந்தச்சொற்கள் ஒரு ஆழமான முன்நோக்கிய பார்வையுடன் கூறப்பட்ட தூரதிருஸ்டி நிறைந்த சொற்களாக தெரிகின்றன. ஆனால், 1917இல் நடுப்பகுதியில் ட்ரொஸ்கி போல்ஸ்விக் கட்சியில் இணைந்த போது தனது இந்த விமர்சனத்தை மறந்துவிட்டார். 1917இல் ஒக்ரோபர் புரட்சியை வென்றெடுத்த பெருமைக்குரியதாக போல்ஸ்விக் கட்சி மாறியபோது கட்சியின் இந்த வடிவத்தை உலகிலுள்ள புரட்சியாளர்கள் அனைவரும் ட்ரொஸ்கிஸ்டுகள் உட்பட - ஏற்றுக்கொண்டனர்.

புரட்சிக்குப் பிந்திய சோவியத் அரசில் ஒரு சர்வாதிகாரத் தன்மை வளர்ந்து வருவதையும் அது ஆளும் கட்சியின் தன்மை காரணமாக ஆதரிக்கப் படுவதையும் அடையாளம் கண்டு கொண்டவர்களும் அப்போது இருந்தார்கள். ஆனால், இந்தக் கேள்வி இலங்கைக்கு அவ்வளவு பொருத்தப் பாடுடையதாக இல்லை. ஏனென்றால், இங்கே ல.ச.ச.கட்சி ஒரு போதும் ஆட்சியதிகாரத்தை பெற்றுக் கொண்டு தனது அரசாங்கத்தை உருவாக்கிக் கொள்ளவில்லை. இந்தக் கட்சியை முன்னணிப் படையாக கொள்ளும் மாதிரி, எப்படி இலங்கையில் விஷேட பிரச்சினைகளை உருவாக்கியது என்பது பற்றியதாகவே நான் எழுதப்போகும் விடயங்கள் அமையும்.

இந்த முன்னணிப்படைக் கோட்பாடு, கட்சி ஊழியர்கள் சாதாரண தொழிலாளை விட உயர்ந்த அளவிலான தத்துவார்த்தத் தெளிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று எடுத்துக் கொண்டது. இது கட்சிக்குழுக்களில் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதை மட்டுமன்றி மாக்சிய இலக்கியங்கள் படிக்கப்படுவதையும் வலியுறுத்தியது. இந்த நிலை காரணமாக உண்மையில், ஐரோப்பிய தொழிலாள வர்க்க புரட்சியாளர்கள் கூட கல்வி மற்றும் கலாசாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி இருந்திருக்கும். ஆனால், இது விடா முயற்சியுடன் மக்கள் மத்தியிலுள்ள எல்லா வர்க்கங்களிலும் காணக்கூடிய இயற்கையான அறிவுக்கூர்மை உடையவர்களுக்கும் பயிற்சி மூலமும் வெற்றி கொள்ளப்படக் கூடிய ஒன்றுதான். அங்கே பரம்பரை பரம்பரையாக மாக்சிய இலக்கியங்களை மாக்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியோரின் எழுத்துக்களைப் படித்தவர்கள், அவற்றுடன் பரிச்சியமானவர்கள் - இருந்தார்கள். ஆனால், இலங்கையில் ல.ச.ச.கட்சியில் உள்ள ஒரு தொழிலாளிக்கு ஐரோப்பிய தொழிலாளியைப் போல இவ்விடயத்தின் வெற்றி கொள்ள முடியாத நிலைமை - மொழி காரணமாக - இருந்தது. ஆங்கிலத்தைத் தவிர மாக்சிய செவ்வியற் படைப்புக்களையோ அல்லது மார்சியக் கருத்துக்களை பிரபலப்படுத்த எழுதப்பட்ட எழுத்துக்களையோ படிக்க அவருக்கு வேறு வழி இருக்கவில்லை. ஜோன் ஸ்ற்றச்சியை என்னால் 17 வயதாக முன்பே படிக்க முடிந்தது. சில காலத்துக்கு பிறகு வரலாறு, சோசலிச கோட்பாடு என்னை பற்றிய சிறந்த விளக்கங்களை அளித்து அந்த நேரத்து இளைஞர்கள் பலரை கல்வியூட்டிருக்கக் கூடிய - லியோ ஹபர்மான் என்பவர் எழுதிய 'மனிதனின் உலகப் பொருட்கள்' போன்றவற்றைக் கண்டு பிடித்தேன். இந்த நூல் மாக்சிய செவ்வியல் இலக்கியத்தை நோக்கி முன்னேற எனக்கு உதவியது. ஆனால், சோசலிக்கை நோக்கி வர விரும்பும் ஒரு சிங்கள வாசகனின் நிலை என்ன? எனக்குத் தெரிய கட்சியில் 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை'யின் ஒரு மொழிபெயர்ப்பும், ட்ரொஸ்கியின் 'சோவியத் புரட்சியின் வரலாறு என்ற நூலினை 100 பக்கங்களுக்குச் சுருக்கி லெஸ்லி எழுதிய ஒரு நூலும் தான் இருந்தது. சிங்கள வாசகர்கள் கல்வி வகுப்புக்களையும், கட்சிப் பத்திரிகையும் - இது பெருமளவுக்கு சுலோகங்களையும் சில வாய்ப்பாடுகளையும் மட்டுமே தரமுடியும் - தவிர வேறெதையும் படிக்க வாய்ப்பற்றவர்களாகவே இருந்தனர். (ஒரு தமிழ் வாசகருக்கு சிலவேளை இந்திய மார்க்சிய நூல்களுடன் பரிச்சியமிருந்திருந்தால் ஓரளவுக்கு அதிகமாக படிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கலாம்.)

(வரும்)

## உரைக்குறிப்பு

"சமீப காலங்களில் ஈழத் தமிழர்களுக்கு நிகழ்ந்த வாழ்க்கை நெருக்கடிகள் மிகப் பெரிய நாவலுக்கான களத்தை விரிப்பவை. அவ்வகையான முயற்சிகள் தோன்றாமல் இருப்பது புரிந்து கொள்ள முடியாத கேள்வியாகவே இருக்கிறது.'

**மூன்றாவது மனிதன**
ஆசிரியர்
எம்.பௌசர்
தொடர்புகளுக்கு:
The Editor
No: 37/14, Vauxhall Lane.
Colombo - 02
T.P 01-302759
E-mail: 3man@sltnet.lk
தருகை: 60.00

- இது அண்மையில் வெளிவந்த மூன்றாவது மனிதன் இதழுக்கு (இதழ் 10) அளித்திருந்த பேட்டியில் இந்திய எழுத்தாளரும், தமிழ் இலக்கிய சூழலில் நன்கு அறியப்பட்டவருமான சுந்தர ராமசாமி அவர்களின் கருத்து.

"புளியமரத்தின் கதை," "குழந்தைகள், பெண்கள், ஆண்கள்" போன்ற சிறந்த படைப்புக்களை தந்ததின் ஊடாக நன்கு அறியப்பட்டவரான சுந்தர ராமசாமியின் மனந்திறந்த உரையாடல் இவ்விதழின் முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது.

அதேபோன்று மதுசூதனன் எழுதிய "ஊடகம்: இணையம், தகவல் தொழில்நுட்பம், தகவல் பொருளாதாரம்" என்ற கட்டுரையும், "மத்திய கிழக்கு வேலை வாய்ப்பும் கிழக்கு முஸ்லிம் பெண்களின் சமூகப் பொருளாதார நிலையும்" - றமீஸா எம் சாஹிப் எழுதிய கட்டுரையும் இடம் பெற்றுள்ளது.

இவ்விதழின் சிறுகதைகளாக "அதற்கென்றோர் இடம்" என்ற ஆங்கிலத்தில் Katherine Mansfield எழுதிய சிறுகதை எம்.கே.எம். ஷகீப் இனால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அத்துடன், திசேராவின் "போகாத உயிரும் நில்லாத வாழ்க்கையும்" என்ற கதையும் வெளியாகியுள்ளது.



"நினைவுகள் மரணிக்கும் போது (When Memory dies)" - சிவானந்தனின் நூற்றாண்டு காலம் குறித்த தியானம் எனும் யமுனா ராஜேந்திரனால் எழுதப்பட்ட விமர்சனமும் இவ்விதழில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதைவிட, அஸ்வகோஷ், தேவ அபிரா, எஸ்போஸ், சித்தாந்தன், றஷ்மி, பெண்ணியா, பாத்திமா ஜஹான் போன்ற நல்ல கவிஞர்களின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

உள்நாட்டில் காலூன்றி உலக மனிதர்களாய்...! என்ற அருந்ததியின் "முகம்" திரைப்படம் பற்றிய கே.எஸ்.சிவகுமாரனின் நோக்கும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மார்க்சியம் - பின்நவீனத்துவம் சில முரண்பாடுகள், முரண்நகைகள் என்ற நல்ல கட்டுரை ஒன்றை மு.பொன்னம்பலம் எழுதியுள்ளார். அத்தோடு, 'இன்றைய சூழலில் தமிழ்ப் பெண்களுக்கான அரசியலும் அமைப்பும்" என்ற தலைப்பில் சி.அ.யோதிலிங்கம் எழுதிய கட்டுரையும் இடம் பெற்றுள்ளது.

பேராசிரியர்கள் சிவத்தம்பி, சிவசேகரம் உட்பட பலர் இவ்விதழில் எழுதியுள்ளார்கள்.

மூன்றாவது மனிதன் முன்பைப் போல இம்முறையும் நல்ல பல காத்திரமான அம்சங்களுடனும் மற்றும் பல வழமையான அம்சங்களுடனும் அழகான முகப் பட்டையுடனும் வெளிவந்துள்ளது.

நீண்ட கால இடைவெளியின் பின்னர் கவிதைகளுக்கான காலாண்டுச் சிற்றிதழான 'நிலம்' இதழ் - 2 வெளிவந்துள்ளது.

சந்திரபோஸ் சுதாகர் ஐ ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இவ்விதழின் சிறப்பம்சமாக ஈழத்து இலக்கியப் பரப்பில் அறியப்பட்டவரான எஸ்.உமா-




ஜிப்ரான் உடனான உரையாடல் இடம்பெற்றுள்ளது. ஒரு கவிஞன் பற்றிய அறிதலுக்கு இவ்வுரையாடல் உதவும் என நினைக்கிறேன்.

"பேசாப் பொருட்களைப் பேசிய ஈழத்துப் பெண் கவிஞர்கள்" - மரபுகளும் மீறல்களும் எனும் தலைப்பில் சு.ஜெயசந்திரன் எழுதிய பெண் கவிஞர்களின் கவிதைகளில் உணர்வு நிலைகளைச் சொல்லும் கட்டுரை ஒன்றும், "இருண்மைக்குள் சிக்கித் தவிக்கும் ஈழத்துத் தமிழ்க் கவிதை" எனும் தலைப்பில் வன்னிக் கவிதைகள் மீதான ஒரு பார்வை - கந்தையா ஸ்ரீகணேசன் இன் நல்ல கட்டுரை ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

**நிலம்**
ஆசிரியர்
சந்திர போஸ் சுதாகர்
தொடர்புகளுக்கு:
நிலம் வெளியீட்டகம்
இல: 87, வியாசர் வீதி,
தோணிக்கல்
அன்பளிப்பு: 40.00

இவற்றினை விட பல புதிய, அறியப்பட்ட கவிஞர்களின் நல்ல பல கவிதைகளும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

- ரதி

நன்றி - நூலகத்திட்டம்



# மாணவர்களின் மனதைப் புண்படுத்தாதீர்கள்!

தங்களது டிசெம்பர் 24-31 (இதழ் 215) சரிநிகரில் வெளிவந்த எமது கலைப்பீட முகாமைத்துவ வணிக்கப்பீட மாணவர்களுக்கிடையில் எழுந்துள்ள பிணக்குகள் - கருத்து மோதல்கள் தொடர்பான எனது விளக்கத்தை அளிக்கலாம் என எண்ணுகிறேன்.

கலைப்பீட, முகாமைத்துவ - வணிகபீட மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற முதலாவது கைகலப்புக்கூட சில தனிப்பட்ட பிரச்சினைகளின் அடிப்படையில் தோன்றியதாகும். அப்பிரச்சினை கூட, இறுதிவருட இருபீடங்களைச் சேர்ந்த மாணவர்களால் தான் - அவர்களது ஒருமித்த முயற்சிகளின் மூலம் தான் தீர்த்து வைக்கப்பட்டது. மற்றொரு பிரச்சினையாகிய முகாமைத்துவபீட விரிவுரையாளர்களின் பொது அறை உடைப்புத் தொடர்பாக தாங்கள் வெளியிட்ட செய்தி, பல்கலைக்கழக மாணவர்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்ட மாணவர்களின் உணர்வுகளை நிச்சயம் புண்படுத்தியிருக்கும்.

கடந்த பல ஆண்டுகளாக கலைப்பீட மாணவர்களின் பொது அறையாக இருந்த பகுதி சென்ற வருட விடுமுறையின் போது கலைப்பீட மாணவர் மன்றத்துக்கு எதுவித அறிவித்தலும் கொடுக்கப்படாது எவருக்கும் தெரியாமல் திடீரென முகாமைத்துவ வணிகபீட விரிவுரையாளர்கள் பொதுஅறையாக உருமாற்றப்பட்டது. கலைப்பீட மாணவர்கள் தமது மன்றத்தினுடாக இந்த அபகரிப்புத் தொடர்பாக பலமுறை கலைப்பீடாதிபதிக்கு விண்ணப்பம் செய்தும் எதுவித பலனும் அடையப்படாத நிலையில் தம்மிடம் மீள ஒப்படைக்குமாறு ஒரு திகதியையும் அறிவித்திருந்தனர். அத்தினத்திலும் பொது அறை மாணவர்களுக்குக் கிடைக்காத காரணத்தினால், விரிவுரையாளர்களினால் (தற்காலிகமாக) பாவிக்கப்பட்டு வந்த அப் பொது அறைக்கு பிறிதொரு பூட்டு - சங்கிலியுடன் இணைந்ததாகப் போட்டுப் பூட்டப்பட்டது. தங்களது கட்டுரையில் குறிப்பிட்டது போல் உடைக்கப்படவில்லை. ஆனால், நிர்வாகம் மாணவர்கள் பூட்டிய பூட்டுகளை உடைக்க முற்பட்ட வேளையில் எதிர்பாராதவிதமாக கதவு திறந்து கொண்டது. உண்மையில், கதவு திறத்தலுக்கு தங்களது கட்டுரையின் மொழியில் கதவு உடைத்தலுக்கு நிர்வாகம் மட்டுமே பொறுப்பானதாக இருக்க முடியும். மாணவர்களின் கதவுபூட்டுதலுக்குப் பின்னர் சரியாக இருநாள்களில் மீண்டும் பொது அறை கலைப்பீடம் வசம் ஒப்படைக்கப்பட்டது.

உண்மைகள் எப்போதும் நேரடியாகச் சொல்லப்பட வேண்டியவை. கலைப்பீட மாணவி ராதிகா இராணுவ வாகனம் ஒன்றினால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பலாலி வீதியில் வீதிமறிப்புப் பேராட்டம் ஒன்றை மேற்கொள்ள 2ம் வருட கலைப்பீட மாணவர்கள் (ராதிகாவின் சக மாணவர்கள்) முன்வரவில்லை. அவ்வேளையில் கலைப்பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட மாணவர்கள் - முகாமைத்துவ வணிகபீட மாணவர்கள் அல்ல- அவ்வீதியை இடைமறிப்பதன் ஆபத்துக்கள் தொடர்பாக எடுத்துக் கூறினார்கள். அகிம்சை என்றால் என்னவென்று தெரியாத நிலையிலுள்ள இலங்கை இராணுவம் தங்களது முக்கியமான விநியோகப் பாதையை மாணவர்கள் அகிம்சை முறைப் போராட்டங்களில் வழிமறிப்பதை வெறுமனே பார்த்துக் கொண்டு நிற்கும் என்று, எவராலும் எதிர்வு கூற முடியாது. 1988ல் இந்திய இராணுவம் மாணவர்களின் ஊர்வலம் ஒன்று இப்படி நடந்த பொழுது சுட்டதில் இரு பல்கலைக்கழக மாணவர்கள் இறந்ததை பல்கலைக்கழகம் இன்னமும் மறக்கவில்லை. வீணான உயிர்ப்பலிகளை விரும்பாத மாணவர்களினாலேயே உண்மையில் இப்போராட்டம் கைவிடச் செய்யப்பட்டது. அன்றைய தினங்கூட இராணுவம் செம்மணிப் பகுதியூடாக முன்னேறுவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தது. அதனால் இராணுவ வாகனங்கள் இடைவிடாது தொடர்ச்சியாக ஓடியதிலிருந்து தெரிந்தது. இதன் பின்னர் ஒரு சில நாட்களிலேயே அவர்களது முன்னேற்ற முயற்சி மேற்கொள் ளப்பட்டது. இதை உறுதி செய்தது.

4000 மாணவர்கள் இருக்கின்ற ஒரு இடத்தில் எந்த மாணவர் எதிர்ப்புரட்சி சக்திகளினால் விலைக்கு வாங்கப்பட்டார் என்று கண்டுபிடிப்பது கடினம். ஆனால், பல்கலைக்கழக மாணவர்கள் தமக்குள் கூடித்தான் ஒரு தீர்மானத்தை அதுவும் பெரும்பான்மை அடிப்படையில் தான் தீர்மானிப்பார்களே தவிர ஒருவர் சொல்லி முடிவெடுப்பதில்லை. மாணவர் ஒன்றியத் தலைவர் கூட தமது கருத்தைச் திணிக்க முடியாத நிலையில் "விலை" பேசப்பட்டவர்களின் கருத்துக்கள் இங்கு மேடை ஏறும் என்பது கற்பனை. யாழ்ப்பாண நிலைமை அதன் யதார்த்தத் தன்மையுடன் தொடர்ந்தும் வெளிப்பட பல்கலைக்கழக மாணவர்கள் தமது கடமையைத் தொடர்ந்து செய்கிறார்கள். இதற்கு உதாரணமாக அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகளைக் கூறலாம்.

இவ்வாறு உண்மை உணர்வுடன் தமது தாயகத்தின் இன்னல்கள் தீர சுயநிர்ணய உரிமை கொண்ட சமுதாயமாக தமிழினம் தலை நிமிர்ந்துவாழ எமது மாணவ சமூகம் தொடர்ந்தும் குரல்கொடுக்கப் போராடும் எனத் தெரிவிப்பதோடு எதிர்காலத்தில் மாணவர் மனதைப் புண்படுத்தும் இவ்வாறான கட்டுரைகளை - ஆராயாமல் - வெளியிட வேண்டாமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

இ. இராகவன்
யாழ். பல்கலைக்கழகம

## சிங்களத்தில்
# வ.ஐ.ச.ஜெயபாலன்!

இலங்கைத் தமிழ்க் கவிதையின் அடையாளம்' எனும் தலைப்பில் வ.ஐ.ச.ஜெயபாலன் எழுதிய பல கவிதைகளை சிங்கள மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார் நிலாம்.எம்.காசிம்.



இதற்கு முன்னரும் யுக்தியவைச் சோந்த சீதா ரஞ்சனி போன்றவர்களினால் சேரன், செல்வி, சிவரமணி, ஔவை போன்றவர்களின் கவிதைகள் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தன. அவை பலரின் கவிதைகள் அடங்கிய தொகுப்பாகவே வெளிவந்தது.

தனி ஒரு தமிழ்க் கவிஞரின் கவிதைகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவருவது இதுவே முதற் தடவை என்று நினைக்கிறேன்.



கவிஞர் ஜெயபாலனின் பல நல்ல கவிதைகள் இத்தொகுப்பில் தொகுக்கப்பட்டுள்ளது இத்தொகுப்பை மிகவும் பெறுமதிமிக்கதாக்குகின்றது.

இன்னமும் தமிழில் எழுதிக் கொண்டிருக்கும் ஒரு நல்ல கவிஞரை சிங்கள மொழிக்கு அறிமுகப்படுத்தியதற்கு நிலாக்கு பாராட்டுக்களை தெரிவித்தாக வேண்டும். அதுவும் அவர் தனது சொந்த முயற்சியிலேயே இத்தொகுதியினை வெளியிட்டுள்ளார். இந்த வகையில் இத்தொகுதி மிகவும் வரவேற்கத்தது.

தமிழ் மொழி தெரியாத சிங்கள வாசகர்கள் இத்தொகுதியை வாசிப்பதனூடாக தமிழர் ஒருவரின் உணர்வுநிலைகளை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அதுவும் சமாதான முயற்சிகளின் அவசியம் பற்றி அனைவரும் பேசுகின்ற இன்றைய சூழலில் இது மிகவும் காலப் பொருத்தம் வாய்ந்ததாகவும் அமைகிறது.

இன்றைய தமிழ் சூழலின் நிலையை சிறப்புறப் பிரிதிபலிக்கும் தமிழின் சமகால கவிஞர்களுள் வ.ஐ.ச. ஜெயபாலன் மிகவும் முக்கியமானவர். அவரது நூல் சிங்கள மொழியில் வெளிவருவது பெருமைக்குரிய ஒரு விடயமும் கூட.

இது போன்ற முயற்சிகள் மேலும் செய்யப்பட வேண்டும் என எதிர்பார்ப்போம். அதே போல் சிங்கள மொழியில் இருந்து நல்ல இலக்கியப் படைப்புக்களை தமிழில் கொண்டு வருவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது சிறந்தது.

**இலங்கைத் தமிழ்க் கவிதையின் அடையாளம்**
கவிதைத் தொகுதி
ஜெயபாலன்

வெளியீடு:
பியசிறி பிரின்டிங் சிஸ்ரம்
இல: 37ஸ்ரீ சோரத்த மாவத்தை,
கங்கொடவில, நுகேகொட

விலை: 140.00

- ரதி

# தமிழ் மொழியைப் பேணுவோமா?

ஓர் ஈராயிரம் மறைய மற்றொரு புத்தாயிரம் புலரும் இந்நாளில் நலம் பெறவும், நலம் புரியத் திடம் பெறவும் வாழ்த்துகிறோம்.

இன அடையாளமாக இன்று இருப்பது மொழி. தமிழினத்தின் இருப்பை உலக அரங்கில் எடுத்தோதுவது தமிழ் மொழி. அதனால், இதனைப்பேணி வளர்க்க வேண்டிய கடப்பாடு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அன்றாடம் பல உயிர்த்துடிப்புள்ள தமிழ்ச் சொற்கள் புறந்தள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுக்குப் பதில் பிற மொழிச் சொற்கள் குறிப்பாகச் சமஸ்கிருதச் சொற்கள் எடுத்தாளப் படுகின்றன. சான்றாக, போர், மகிழ்ச்சி, ஆள் என்பனவற்றுக்குப் பதிலாக முறையே யுத்தம்,சந்தோசம், நபர் என்னும் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இச்செயல் தமிழ்ச் சொற்கள் வழக்கற்றுப் போவதற்கு வழிகோலும். ஒரு பொருளை விளக்க நம்மொழியில் சொல் இல்லாதவிடத்து பிறமொழிச் சொல்லைக் கடனாள்வதில் தவறில்லை. ஆனால், தேவையான சொற்கள் பல இருக்கையில் அவற்றைப் புறந்தள்ளுதலை எவ்வாறு ஏற்பது?

தமிழகத்தில் தமிழ் திட்டமிட்டே தமிழ்ப் பிராமணர்களால் நசிக்கப்பட்டு வருகிறது. தமிழராயிருந்தவிடத்தும் தமிழை ஒதுக்கி சமஸ்கிருதத்துக்கு முதன்மை தந்து ஆங்கிலத்தினூடு கல்விபெறும் முனைப்பு அவர்களிடையே மேலோங்கியுள்ளது. இதனை அங்கு வெளியாகும் நாளேடுகள், வார, மாத சஞ்சிகைகள் முதலியனவும் ஊக்குவிக்கின்றன. இந்நிலை தொடரின் தமிழகத்தில் வரும்நாளில் தமிழின் நிலை யாதாகும்? இதனைத் தடுத்து நிறுத்த, அங்குள்ள தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்த ஏதாவது செய்ய முடியாதா?

இந்நிலையில் இந்த மண்ணிலுள்ள தமிழ் மக்களின் பொறுப்பு மிகுதியாகிறது. தமிழ்ச் சொற்களுக்கு முதலிடம் தருவதில் நீங்களே முன்னோடியாகச் செயற் படுவதோடமையாது. தமிழர் வாழ்வின் அனைத்திலும் தமிழ் என்னும் ஒரு நிலையை ஊக்குவிக்க வேண்டும். செய்தி இதழ்களுக்கு ஆற்றல் மிகுதி. ஆகவே மனம் வைத்தால் கருதிய பலன் கிட்டும்.

தமிழை ஒதுக்கி, சமஸ்கிருதத்துக்கு முதன்மை தருமாறு தூண்டும் தமிழ்ப் பேராசிரியர்கள் சிலர் நம்மிடையே உளர். ஆரியமயமாக்கலுக்குத் துணை போகும் கைக்கூலிகளாகி, மக்களை மயக்கும் பெரு விழாக்களை நடத்தித் தன் நலம் பேணும் தமிழறிஞர் கூட்டமும் நம்மிடையே உண்டு. இவர்களை இனங்கண்டு இவர்களது உள்நோக்கை அம்பலப்படுத்தி மக்களை இவர்கள் பிடியிலிருந்து விடுவிக்கும் பெரும் பணியை நீங்கள் விரும்பி ஏற்கவேண்டுமெனக் கோருகிறேன்.

திரிபாக்கம் வளர்ச்சியைச் சுட்டுவது: அது மாற்றத்தின் பாற்பட்டது. ஆகவே நம்மினத்தின் மேம்பாட்டுக்கு அவர்களுடைய மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட வேண்டும். இதற்கெனக் குருதிப் புரட்சி வேண்டியதில்லை. அமைதியான கருத்துப் புரட்சியே பெரும் பயன்தரவல்லது. இந்த மண்ணில் இன்று வெளியாகும் இதழ்களுள் 'சரிநிகர்' ஒன்றுக்கே இப்பெரும் பணியை மேற்கொள்ளும் திறன் உள்ளது. ஆகவே போர் முனைப்போடு இப்பணியில் ஈடுபடுமாறு தங்களை அன்போடு வேண்டுகிறேன்.

ம.கங்காதரன்

# சரிநிகர்

வார இதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" - பாரதி

இல.: 19|04, 01|01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி, தொலைமடல்: 074-400045

மின்னஞ்சல்: sarini@sltnet.lk


## தலைவர்களுக்கு காட்டிய வழி!

யாழ் பல்கலைக்கழகத்தில் நடக்கவிருந்த பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு படையினரால் தடைசெய்யப்பட்டுள்ளது.

அஹிம்சை முறையில் பல்கலைகழக சமூகம், யாழ் மாவட்ட சமூக நலன்புரி அமைப்புகளும் ஒன்று சேர்ந்து நடாத்தவிருந்த இந்த நிகழ்ச்சியை தடை செய்த இராணுவம் அதற்குக் கூறிய காரணம் இந்நிகழ்ச்சியின் பின்னணியில் புலிகள் இருக்கிறார்கள் என்பதே!

பின்னணியில் புலிகள் இருக்கிறார்கள் என்ற கருத்தை இராணுவம் முடிந்தளவுக்கு பரவலாக பிரச்சாரம் செய்து வருகிறது. மட்டக்களப்பில் துண்டுப் பிரசுரம் விநியோகித்து ஒலிபெருக்கி மூலம் அறிவித்து மக்களை இதற்கு ஆதவளிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டால் குண்டாந் தடியடிப் பிரயோகம் நடைபெறும் என்றும், கண்ணீர்ப்புகைக் குண்டு வீசவேண்டி ஏற்படும் என்றும் மிரட்டியிருக்கிறது இராணுவம்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாண வானொலி இந்த நிகழ்ச்சிக்குப் புலிகளின் ஆதரவு இருப்பதாக நிரூபிக்கும் தகவல்களை வெளியிட்டு வருகிறது.

ஆசிரியர் மாணவர்களை பேட்டி கண்டு அவர்களது வாயிலாகவே புலிகளின் சம்பந்தம் பற்றிப் பேசப்படுகின்றது.

"இந்தப் பல்கலைகழக மாணவர்கள் நடவடிக்கையின் பின்னால் பயங்கரவாதிகள் உள்ளனர். அவர்களை நம்பாதீர்கள்" என்று அந்த வானொலி மூலமாகப் பிரச்சாரம் செய்ய இந்த ஆசிரியர்கள் பயன் படுத்தப்படுகிறார்கள்.

இந்த நிகழ்ச்சிக்குப் புலிகளின் ஆதரவு அல்லது பின்னணி இருப்பது உண்மையானால், இனப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துவைக்க விரும்பும் ஒரு அரசாங்கம் நிச்சயமாகச் சந்தோசப்பட்டிருக்க வேண்டும். யுத்தத்தை நிறுத்துமாறும், மூன்றாந்தரப்பு மத்தியஸ்துடன் பேச்சு-வார்த்தையில் இறங்குமாறும் கோரும் ஒரு நிகழ்ச்சியை ஏன் அரச படைகள் தமக்கு எதிரான ஒன்றாக நினைக்க வேண்டும்? இத்தகைய ஒரு கோரிக்கைக்கு புலிகள் ஆதரவு தருகிறார்கள் என்றால், அவர்கள் சமாதானத்தை நோக்கி நெருங்குகிறார்கள் என்று ஏன் அரசு சிந்திக்கக் கூடாது? சமாதானத்திற்கும் யுத்த நிறுத்தத்துக்கும் ஆதரவான மக்களின் குரலை எதற்காக நசுக்க முனைய வேண்டும்?

புலிகளும் யுத்த நிறுத்தத்தைக் கோரினார்கள் என்பதற்காகவா?

அப்படியானால், புலிகள் மக்களின் நீண்டகால அபிலாசைகளை வெளிப்படுத்தும் ஏதாவது கோரிக்கையை முன்வைத்தால் அதற்காகவே மக்களின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டுவிடுமா?

அரசினதும், அரச படைகளினதும் இந்தச் செயற்பாடுகள் இரண்டு முக்கியமான சந்தேகங்களை எமக்கு ஏற்படுத்துகின்றன.

ஒன்று, அரசுக்கு சமாதானத்தைக் கண்டடைவதில் தீவிரமான அக்கறை எதுவும் கிடையாது.

இரண்டு, யுத்த வழியில் மட்டுமல்ல, அஹிம்சை வழியிலும் கூட மக்களால் தமது அபிலாசைகட்காக, கோரிக்கைகட்காக போராட முடியாது.

ஆக, இதுதான் நிலை என்றால், சமாதானம், ஜனநாயகம் என்று அரசு பசப்பி வருவதற்கு என்ன அர்த்தம் இருக்கிறது?

சில வாரங்களுக்கு முன் 'எம்மால் என்ன தான் செய்ய முடியும்' என்று ஒரு தமிழ்க் கட்சித் தலைவர் கேட்டிருந்தார்.

சமாதான வழியில் கூட போராட மக்களை அனுமதிக்காத அரசுடன் போராட வழி இருக்கிறது என்று அவர்களுக்கு நடைமுறையினூடு காட்டியிருக்கிறது பல்கலைக்கழகச் சமூகம்.

தமிழ் அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் இந்த நிகழ்ச்சிக்கு முழுமையான ஆதரவைக் கொடுத்து 'பொங்குதமிழ்' நிகழ்ச்சியைப் பரவலாகவும் தொடர்ச்சியாகவும் செய்வதில் பங்காற்ற முடியும். பொது-மக்களைத் தடைசெய்த அரச படைகள் பாராளுமன்ற உறுப்பினர்களையும் தடைசெய்கிறார்களா என்று பார்க்க முடியும். அது உண்மையென்றால், இந்தப் போராட்டம் சர்வதேச அளவுக்கு விரிவுபெறும் வாய்ப்பைப் பெறும்.

'குதிரை ஓடியவர்கள் தான் போராடுகிறார்கள்' என்று கிண்டலடிப்பது சுலபம். கள்ளவாக்கினால் அதிகாரத்திற்கு வந்து அரசிற்கு வால் பிடிப்பவர்கள் இந்தப் போராட்டத்தை நிராகரிக்கலாம்.

ஆனால், மற்றைய தமிழ்க் கட்சித் தலைவர்கள் இதைப் பரவலாக்க முனைய வேண்டும். முழு அளவிலான ஒரு நிகழ்ச்சியாக முழுத் தமிழ் மக்கள் மத்தியிலும் எழுச்சியூட்டும் ஒரு நிகழ்ச்சியாக இதை மாற்ற முடியும் - வெறும் ஆதரவு தெரிவிப்பதை விட்டு விட்டு செயலில் இறங்க வேண்டும்.

ஜனநாயக ரீதியான, அரசியல் உரிமைக்கட்கான, வன்முறையற்ற வடிவிலான இந்த எழுச்சி, தமிழ் மக்களின் அரசியல் உரிமையை உலகறிய ஒலிக்க வேண்டும்.

தலைவர்களுக்கு மாணவர்கள் வழிகாட்டியுள்ளார்கள்.

அதை தமது கையிலெடுத்து செயற்படுத்த தலைவர்கள் முன்வருவார்களா?

## வவுனியா: மிரட்ட ஆள் உண்டு! உதவ ஆள் இல்லை!!

– கே. ஆர்

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து தங்கி நின்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையான சி. பெரியசாமி (47) என்பவர் கடந்த ஆண்டு ஜூலை 21 அன்று நீர்த்தாங்கி வண்டி (பௌசர்) மோதி கடுங்காயங்களுக்குள்ளான நிலையில் வவுனியா வைத்திய-சாலையில் அனுமதிக்கப்பட்டு 27 அன்று ஆறாவது நாள் உயிரிழந்தார்.

உயிரிழந்த பின்பு இவர் இயற்கை மரணமெய்தியதாக மரணச் சான்றிதழ் வழங்கப்பட்ட-மையினால், ஐந்து பிள்ளைகளும் தாயும் உதவிகள் இழப்பீடுகள் இல்லாது வறுமையிலும் வறுமை




சேர்ந்து மிக மோசமான துயரமிகு மோசமான வாழ்வுக்குள் சிக்கித் தவிக்கின்றனர்.

குடும்ப உழைப்பாளியை இழந்த இந்தக் குடும்பத்தின் பொறுப்பை ஏற்க வேண்டிய தாயாரான ராசம்மா (45) ஒரு மனநோயாளியைப் போல இருக்கின்றார். பிள்ளைகளான கௌசல்யா (12), வசீலன் (10), துஸ்யந்தன் (5), துஸ்யந்தினி (2), வாகீசன் (1) ஆகியோரில் சின்னக் குழந்தைகள் போசாக்கின்மையினால் நலிந்தும், பாடசாலை செல்ல வேண்டியவர்கள் பாடசாலை செல்ல வசதிகள் அற்ற நிலையில் கல்வியைத் தொலைத்தவர்-களாகவுமுள்ளனர்.

உயிரிழந்த பெரியசாமியின் மூத்த மகளான கௌசல்யா-விடம் அவர்களது நிலை பற்றி வினவிய போது முதலில் அப்பா செத்துப் போயிற்றார்... எனக் கூறி முடிக்காத நிலையில் சில நிமிடங்கள் விக்கி விக்கி அழுதார்... பின்னர் தாங்கள் தர்மபுரம், கிளிநொச்சியில் இருக்கும் போது இப்படியான வாழ்க்கை வாழவில்லை. பள்ளிக்கூடம் போய் படிச்ச நாங்கள்.

இங்க முகாமுக்குள்ள வந்து ஒழுங்கான சாப்பாடும் இல்லாமல் சரியாகக் கஷ்ரப்படுகின்றோம். எங்களுக்கொருவருக்கும் படிப்பும் இல்லையெனக் கூறியதோடு அழுதபடியே இருந்தார்.

ஏதாவது உதவிகள் உங்களுக்கு கிடைக்கவில்லையா எனக் கேட்ட போது எங்கட அம்மாவுக்கு மூளை சுகமில்லை. எங்களுக்கு ஒருவரும் உதவி செய்யவே இல்லை. அப்பா செத்துப் போன பிறகு அம்மா ரேடியோவில செய்திக்கு அப்பா செத்தது பற்றிக் குடுத்தவ. அதனால இனிமேல் செய்தி எதியையும் வந்தால் வீண் பிரச்சினை வருமென யாரோ தம்மை மிரட்டியதாகவும் கூறி



அழுதபடியே அந்தப் பன்னிரெண்டு வயதுச் சிறுமி கூறினார்.

போரின் கொடுமைகளினால் இப்படிப் பாதிக்கப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள், ஏராளம் பேர் உள்ளனர். ஆனால், பெரியசாமியின் குடும்பம் போர் பிடிக்குள்ளிருந்து தப்பி வந்து நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள். அரசாங்கத்தின் அறிவிப்பை நம்பி நலன்புரி நிலையத்திற்கு வந்த இவர்களிற்கு இன்று இப்படியான நிலையாகி விட்டது.

குறைந்தது இந்தக் குழந்தைகளின் உணவு, கல்வி வளர்ச்சி, போன்றவற்றிற்கென்-றாலும் யாராவது உதவலாம். மிரட்ட ஆள் உண்டு. உதவத் தான் ஆளே இல்லையே.

வவுனியாவில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களென்றாலும் பூந்தோட்டம் 8ம் யூனிட்டில் உள்ள இவர்களின் பரிதாப நிலை கண்டு உதவுவது மிகவும் பொருத்தமானதும் தேவையானதுமாகும். ⊙

## தொலைக்காட்சி...

நாசமாக்கியவருக்கு எமது ஊடகங்கள் நீதிமன்ற தீர்ப்புக்கு அடுத்த நாள் பிரச்சாரங்களை வழங்குகின்றன.

பகலுணவு நேர நிகழ்ச்சியின் போது ஒரு தொலைக்காட்சி அலைவரிசை மறைமுகமாக துஷண வார்த்தைகளைப் பிரயோகிக்கின் றது என குற்றம் கூறப்படுகின்றது. இவர்கள் இப்படி நடந்து கொள்ள முடிவது தம்மை கேள்வி கேட்க முடியாதது என்ற மமதையிலாகும்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி களைப் பார்த்து தாம் குற்றம் புரிந்த தாக சமீபத்தில் இரு பாடசாலை பிள்ளைகள் நீதிமன்-றத்தில் குறிப்பிட்டதாக பத்திரிகை ஒன்றில் பிரசுரிக் கப்பட்டிருந்தது.

இன்று நாம் ஒரு தொடர்-பூடக அமைச்சைக் கொண்டிருக்-கின்றோம். அமைச்சைச் சேர்ந்த தலைவர்கள் ஒரு நாளும் தொலைக்காட்சி சேவை களைப் பார்த்திருக்க மாட்டார்கள். இதில் உள்ள தலைவர்கள் இந்திய அமைச்சரின் கால் தூசுக்கு கூட ஒப்பிட முடியாதவர்கள். ⊙


**சிறுபான்மையினரின் உரிமைகள் மத்திய அரசினுள் பாதுகாக்கப்படுமா?**

தொடரும் மாதிரிப் பாராளுமன்ற விவாதம்

ஜனவரி மாதம் 23 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல். தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியைப் பாருங்கள்




செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது


ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 17.01.2001